

ஜே.சி.ரைல்

கி.பி. 1816 - 1900

பேராயர்.ஜே.சி.ரைல் அவர்களின் முழுபெயர் ஜான் சார்ள்ஸ் ரைல் (Jhon Charles Ryle) என்பதாகும். இவர் இங்கிலாந்து தேசத்தில் லிவர்பூல் எனுமிடத்தில் கி.பி.1816 ல் பிறந்து 40 ஆண்டு காலமாக போதகராக திருச்சபையில் பணியாற்றினார். இவர் மிக எளிய ஆங்கில வார்த்தைகளை பயன்படுத்தி யாவரும் எளிதில் படித்து புரிந்து கொள்ளும் வகையில் 40க்கும் மேற்பட்ட நல்ல கிறிஸ்தவ புத்தகங்களை எழுதியுள்ளார். இவரது புத்தகங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் இன்று வரை சொல்லப்படுபவைகள் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நற்செய்தி நூல்களுக்கும் இவர் எழுதிய வியாக்கியான உரையாகும். அதிலும் சிறப்பானதாக எல்லாராலும் சொல்லக்கூடிய வியாக்கியானவுரை மத்தேயு மற்றும் யோவான் சுவிசேஷங் களே. இவரது உருவாகத்தில் வந்த அனைத்துப் புத்தகங்களிலும் அவர் கிறிஸ்துவையும், அவர் செய்து முடித்த உன்னதமான பணியையும் உயர்த்தி காட்டுவதே முதன்மையான செய்தியாக கொண்டிருந்தார். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்து மரித்த அருமையான பேராயர் ஜே.சி.ரைல் அவர்களின் மத்தேயு சுவிசேஷ விளக்கவுரையின் முதல் 10 அதிகாரங்களை மட்டும் தமிழ் மொழியில் அதன் சாரம் விலகாமல் படிப்போரின் சிந்தனையை தூண்டும் வகையில் மொழியாக்கம் செய்து வெளியிடுவதில் இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து திருச்சபை பெரு மகிழ்ச்சியடைகிறது. இதன் நோக்கம் தமிழகத்தில் மட்டுமல்லாது உலகெங்கிலும் உள்ள தமிழ் மொழி பேசும் மக்கள் யாவரும் படித்து பயன்பெறுவதேயாம். இதன் மூலம் திரித்துவ ஒரே தேவன் மகிமைப்படுவாராக. ஆமென்.

மத்தேயு சுவிஷேசம் விளக்கவுரை

பாகம் - 1

ஜே.சி.ரைல்

மத்தேயு சுவிஷேசம் விளக்கவுரை

பாகம் - 1

ஜே.சி.ரைல்

என்னுரை

திரித்துவ ஏக தேவனுக்கு சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக.

போதகர் ஜே.சி.ரைல் அவர்களின் மத்தேயு சுவிசேஷத்தின் வியாக்கியானவுரையை எனது தாய் மொழியான தமிழ் மொழியில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்கிற எனது நீண்ட நாள் ஆசையை கர்த்தர் தமது ஆதீன சித்தத்தின்படி இந்நாட்களில் அதை செய்து முடிக்கும்படியாக மாபெரும் கிருபை செய்திருக்கிறார். தமிழ் மொழி பேசும் அனைவரும் அவசியம் வாசித்து பயன்பெற வேண்டிய புத்தகம். இப்புத்தகம் வெளிவருவதற்காக உழைத்த எமது திருச்சபை மக்களுக்கு தேவன் தாமே மேலான ஆசிர்வாதங்களை தந்து ஆசிர்வதிப்பாராக. சிறப்பாக தமிழ் தட்டச்சு செய்து தந்து உதவிய திருமதி.ஹெலன் லிவிங்ஸ்டன் அவர்களுக்கும், அணிந்துரை மற்றும் வாழ்த்துரை எழுதிய போதகர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

போதகர்.தே.ஸ்டீபன்சன்
இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து திருச்சபை, மதுரை.

அணிந்துரை

கி.பி.16 - ஆம் நூற்றாண்டின் மத்தியில் இங்கிலாந்தில் ஏற்பட்ட சீர்திருத்தம் அரசியல் காரணங்களுக்காகவே ஏற்பட்டது. 8 ஆம் ஹென்றி தன் விவாகரத்திற்காகவும் ரோமன் கத்தோலிக்க சபையின் போப்பின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவும் மாற்றத்தைக் கொண்டு வந்தார். இங்கிலாந்து சபை எனப் பெயரிட்டு அதன் தலைவராகத் தன்னைத் பிரகடனப்படுதினார். சபையின் நிர்வாகத்தைத் தன் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தபடியால் பல கொடிய தீங்குகளுக்குக் காரணமானார். சபையின் முறைமை களிலும் கோட்பாடுகளிலும் எந்த மாற்றமும் ஏற்பட வில்லை.

அவருக்குப் பின் அரசனாக சிறிது காலம் இருந்த எட்வர்ட் காலத்தில் ஜான் கால்வின் அவர்களின் சீர்திருத்த கோட்பாட்டின் அடிப்படை யில் இங்கிலாந்து சபையின் விசுவாச அறிக்கையாக 39 கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆயினும் சபையின் பிஷப்களும், போதகர்களும் அவைகளைப் பற்றிய போதகங் களும் பிரசங்கத்தையோ, செய்திகளையோ போதிக்கவில்லை. சபையார் அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் மூழ்கி இருந்த னர். இந்தச் சூழமைவில் பாப்திஸ்து சபைகள் பிரிவினைவாதிகளாக கருதப்பட்டு சபையிலிருந்து நீக்கப்பட்டனர். மேலும் அரசன் எட்வர்ட்க்குப்பின் அரியணை ஏறிய அரசி மேரி சீர்திருத்தக் கோட்பாட்டைப் பின்பற்றிய தலை சிறந்த பிஷப்களையும், வேத நிபுணர்களையும் கொலை செய்தாள். 17 ஆம் நூற்றாண்டில் ஆலிவர் கிராம்வெல் மூலமாக உள்நாட்டுப் போர் ஏற்பட்டு சீர்திருத்த போதனைகள் பிரசங்கிக்கப்படவும், சீர்திருத்த நூல்கள் வெளியி டப்படவும் தொடங்கின. ஆயினும் இங்கிலாந்து சபைகள் முழுமை யாக சீர்திருத்தக் கோட்பாட்டைப் பின்பற்றவில்லை. பிஷப்கள் மற்றும் ஆர்ச் பிஷப் ஆகியோரின் பதவிகள் பெரும்பாலும்

அரசியல் காரணங்களுக்காகவே கொடுக்கப்பட்டன. சபை பாரம்பரிய சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளித்தது. இரட்சிப்பை பற்றிய போதனை இல்லை.

இப்படிப்பட்ட அரசியல் மற்றும் சபை சூழமைவில் ஜே.சி.ரைல் இங்கிலாந்து சபையில் பிறந்து வளர்ந்து ஒரு உத்தம சீர்திருத்த போதகராகவும் பிஷப் ஆகவும் முடிவுபரியந்தம் பணியாற்றியது மிகவும் பாராட்டத்தக்கது. அரசியல் நிர்ப்பந்தங்கள் மற்றும் சபை கட்டுப்பாடுகள் ஆகியவற்றைக் கடந்து பிஷப் ரைல் அவர்கள் வேதத்தை உண்மையாகவும், தெளிவாகவும் அதிகாரத்துடனும் பிரசங்கித்தார். வேதத்தை ஆராய்ந்து அவற்றைச் சீர்திருத்த கொள்கையுடன் பிரசங்கித்த 19 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த போதகர் ஜே.சி.ரைல் ஆவார்.

மாபெரும் பிரசங்கி சார்ள்ஸ் ஸ்பர்ஜன் அவர்களும் ஜே.சி.ரைல் அவர்களின் போதகத்தையும் தைரியத்தையும் பாராட்டியுள்ளார்.

இங்கிலாந்து சபை வரலாற்றில் முதல் முறையாக இப்படிப்பட்ட வேத வசன விளக்கப் பிரசங்கங்கள் சபையில் பிரசங்கிக்கப்பட்டு 1856 ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. வேத வசன விளக்கப் பிரசங்கம் வேதத்தில் மறைந்துள்ள கோட்பாடுகளையும், சத்தியங்களையும் மற்றும் வாழ்விற்கான நடைமுறை ஆலோசனைகளையும் எடுத்துரைப்பதாகும். இதனை ஜே.சி.ரைல் மிகச் சிறப்பாக தம் நூலில் எழுதியுள்ளார். சுவிசேஷத்தின் மையம் இயேசு கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்துவின் தன்மையையும் பணியையும் விளக்குவதே நான்கு சுவிசேஷங்களின் (நற்செய்தி நூல்கள்) நோக்கமாகும். குறிப்பாக மத்தேயு வரலாற்று நூல் மிகச் சிறப்பானது. பழைய ஏற்பாட்டின் யூத வரலாற்றுக்கும் புதிய ஏற்பாட்டின்

திருச்சபைக்கும் இடையில் பாலமாக இந்தச் சுவிசேஷம் அமைந்துள்ளது. பழைய ஏற்பாட்டின் யூத மதத்தின் நிறைவேற்றமாகவும் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகவும் மத்தேயு சுவிசேஷம் அமைந்துள்ளது. இயேசு யூதருக்கு வாக்களிக்கப்பட்ட மேசியாவாகப் பிறந்தார் மற்றும் பூரண தேவ குமரனாகப் பணியாற்றி பாவபரிகாரப் பலியாக மரித்து உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவரே திருச்சபையைக் கட்டுகிறார். சபையின் தலையாக ஆண்டு நடத்துகிறார்.

ஒவ்வொரு விசுவாசியும் இந்தச் சத்தியத்தை அறிந்து விசுவாசத்தில் வளர இந்த நூல் பெரிதும் உதவும். இந்நூலை வெளியிடுகிற இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து திருச்சபை போதகர் தே.ஸ்டீபன்சன் அவர்களுக்கும், வெளியீட்டுக் குழுவினருக்கும் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவ சமுதாயம் இந்நூலினால் பயனடைந்து, பரிசுத்தமடைய ஆண்டவரிடத்தில் மன்றாடு கிறேன்.

போதகர்.சாமுவேல் தேவநேசம்
தமிழ் பாப்திஸ்து திருச்சபை,
கீழ்ப்பாக்கம், சென்னை - 10

Dr.Pastor.David Elangovan
Reformed Baptist Church, Salem

J.C.Ryle was born in 1816 and died in 1900 in England. It is said of J.C.Ryle, the man of granite with a heart of a child. He was a great man of God used of the Lord during his life and even afterwards his writings are being widely used as a blessing to many until to-day. He was a contemporary of Spurgeon, George Muller and Hudson Taylor. He belived in the inerrancy, sufficiency and authority of the Scripture and had a strong commitment for it. As a youth of twenty he was converted and committed for his life for the preaching of God's truth in a plain and simple way. Ryle was a prolific author, and his numerous books and commentaries were bestsellers and translated all over the world. After studying over 40 commentaries J.C.Ryle could write the very best commentary and devotional exposition of the book of Matthew that could be found. We could do no better them to use his expositions of the Gospel of Matthew for our family bible study guide series. Writing in the 19th century Ryle intended these 'Expository thoughts' for family worship. His writing is strikingly simple. profound, practical and passionate at the same time. Mortyn Lloyd Jone described Ryle's writing as 'distillation of puritan theology presented in a highly readable and modern form'. Richard Hobson said "I am bold to say that perphas few men in the nineteenth century did so much for God, for truth, for righteousness, among the English speaking race and in the world as Ryle".

I am sure that reading this book will be a great encouragement and beneficial to everyone who loves the truth.

• • •

போதகர்.ஜான் நெல்சன்
இங்ளிடின் சுவிசேஷ திருச்சபை, குன்னூர்.

‘‘கர்த்தரின் ராஜ்ஜியம்’’ எனும் கருத்தை மையமாகக் கொண்டு ஆவியானவரின் ஏவுதலால் மனந்திரும்பிய ஆயக்காரன் மத்தேயு எழுதின சுவிசேஷம் கர்த்தரின் நித்திய வெளிப்பாடாக வேதாகமத்தில் 66 புத்தகத்தின் ஒரு பகுதியாகவும், புதிய ஏற்பாட்டின் முதல் நூலாகவும் வகைறுக்கப்பட்டதற்காக தேவனைப் பணிந்து துதிக்கிறோம். இந்த சுவிசேஷத்தை தழுவி பேராயர் ஜே.சி. ரைல் அவர்கள் எழுதிய வியாக்கியான புத்தகத்தின் தமிழாகத்திற்கு வாழ்த்துரை எழுதுவதை பாக்கியமாக கருதுகிறேன்.

பிஷப் ரைல் அவர்களின் தேவபக்தி நிறைந்த ஆள்தத்துவத்தை இந்நூல் பிரதிபலிக்கிறது என்றால் மிகையாகாது. நடைமுறை கோட்பாடுகளை கருத்தாழத்தோடு இவர் எழுதி வைத்திருப்பது நமது வளர்ச்சிக்கு ஊன்றுகோல் என்பதை மறுக்க முடியாது. இந்த முயற்சியை மேற்கொண்ட போதகர்க்கு நமது உணர்வுப்பூர்வ நன்றிகளை சொல்ல மிகவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தாவீதின் குமாரனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாற்றோடு துவங்கும் மத்தேயு சுவிசேஷத்தின் செய்தியை தெளிவோடும், ஆங்கில ஆசிரியரின் பக்தி நெறியோடும் மொழியாக்கம் செய்திருப்பது சிறப்பிற்குரியதாகும். ‘‘செய்தியாளரும் செய்தியும் ஒன்றாக இருக்க வேண்டிய அவசியமில்லை’’ எனும் நவீனத்துவக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட நம் சமுதாயத்தில் நூலின் ஆசிரியரும், மொழியாக்கம் செய்தவரும் ‘‘செய்தியும், செய்தியாளரும்’’ ஒன்றே என்பதை நிரூபித்துக் கொண்டிருப்பவர்களாவர். இங்கிலாந்து தேசத்தில் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த பிஷப் ரைல் அவர்களும் இந்தியாவில் (மதுரையில்) இந்த நூற்றாண்டில்

வாழும் போதகர் ஸ்டீபன்சன் அவர்களும் காலத்தாலும், கலாச் சாரத்தாலும் மாறுபட்டிருந்தாலும் மத்தேயு சுவிசேஷத்தின் சாராம்சம் ''மாறாத தேவ ராஜ்ஜியத்தை'' பிரதிபலித்து அதின் மேன்மைக்காக தங்களை அர்ப்பணித்தவர்களானபடியால், இந்நூலின் செய்தி விளக்கங்கள் ''உயிர்ப்பிக்கும் வார்த்தையின்'' கிரியையாக நம்மை மாற்றும் என்ற நிச்சயத்தோடு வாழ்த்துரை எழுதி உவகை அடைகிறேன்.

• • •

முகவுரை

சுவிசேஷங்களின் மீதான புதிய விளக்கவுரைகளை வெளியிடுவதின் முக்கியத்துவம் என்னவெனில், சுவிசேஷத்தின் மீதான தவறான எண்ணங்களை தவிர்த்து, குணாதிசயங்கள் மற்றும் இப்பணியின் திட்டத்தை விவரிப்பதாகும்.

இந்த விளக்க உரையானது, மிகவும் கற்றுத் தேர்ந்த பகுத்தறிவு மிகுந்த விளக்கவுரை அன்று. சுவிசேஷசங்களிலுள்ள ஒவ்வொரு வசனத்தை விவரிக்கவும், ஒவ்வொரு கடினப்பகுதி யையும் பற்றிக் கொண்டு, அதற்கு விடைதேடவும், விவாதம் நிறைந்த பகுதிகளையோ அல்லது மொழிபெயர்ப்பையோ விளக்க நான் முயற்சிக்கவில்லை.

இவ்விளக்க உரைகளுக்கு நான் மேற்கொண்டுள்ள திட்டம் பின்வருமாறு: பரிசுத்த வேதநூலை நான் சுமார் பன்னிரெண்டு வசனங்கள் அடங்கிய பகுதிகளாக பிரித்துள்ளேன். பின்னர், தொடர்ச்சியான, சிறிய மற்றும் எளிதான விளக்கங்களை ஒவ்வொரு பகுதிகளுக்கும் அளித்துள்ளேன்.

ஒவ்வொரு விளக்கத்தின் ஆரம்பத்திலும், அப்பகுதியின் முக்கிய நோக்கத்தை மிகச் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளேன். பின்னர் இரண்டு, மூன்று அல்லது நான்கு மிக முக்கியமான கருத்துக்களை அப்பகுதியினின்று தெரிவு செய்து, அதனை பிரித்தெடுத்து, ஒவ்வொன்றையும் விசேஷித்த முறையில் ஆராய்ந்து, மிகவும் எளிமையான நடையில் வாசிப்பவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் விளக்கியுள்ளேன். தெரிவு செய்யப்பட்ட கருத்துக்கள் சிலவேளைகளில் கொள்கை ரீதியாகவும், சிலவேளைகளில் நடைமுறை வழக்கமாகவும் இருக்கும். முக்கியமான கருத்துக்களை தெரிவு செய்தல் அப்பகுதியிலுள்ள மெய்யான வழிநடத்தும் கருத்துக்களைக் கொண்டே அமையும்.

நான் தெரிவு செய்த எழுத்து நடையும், மொழியாக்கமும் மிகவும் எளிமையும், குறிப்பானதாயும் இருக்கும். பிறர் புரிந்து

கொள்ளும் வகையில், இதனை வாசிக்கின்ற ஒருவனைப் போல் என்னை பாவித்துக் கொண்டும், அவர்களுடைய கவனத்தை ஈர்க்க முயற்சிப்பவனாகவும் நினைத்துக் கொண்டேன். நான் ஒவ்வொரு விளக்கவுரை எழுதும்போதும், பின்வரும் கருத்தை மனதில் நிறுத்தி எழுதுவது வழக்கம். "குறுகிய காலமே உள்ள தால், பலதரப்பட்ட மக்களுக்கு இது பயன்பட வேண்டும்" என்ற எண்ணத்தோடு பல காரியங்களை நான் விரிவாக விளக்க மளிக்காமல் இருந்திருக்கலாம். சில வேளைகளில் அப்பகுதிக ளிலுள்ள அதி முக்கியத்துவமற்ற கருத்துக்களை விட்டுவிட்டு தெளிவான முக்கியத்துவம் நிறைந்த கருத்துக்களுக்கு விளக்கம ளித்துள்ளேன். சில கடினப் பகுதிகளை விளக்கக் கூடிய அடிக் குறிப்புகளையும், சில வேளைகளில் இவ்விளக்கவுரையில் காண லாம். வேதத்திலுள்ள 'ஆழமான கருத்துக்களை' தெரிந்து கொள்ள விரும்பும் சொந்த விளக்கவுரை அல்லாத வாசகர்களுக் குப் பிரயோஜனமாக சில கருத்துக்களையும், செய்திகளையும் அடிக்குறிப்பில் தருவது நன்மை பயக்கும் என எண்ணினேன்.

இவ்விளக்க உரையில் விவரிக்கப்பட்டுள்ள கொள்கைகள், நடைமுறை வழக்கங்கள் அல்லது தீர்க்க தரிசனங்கள் குறித்த தான கருத்துக்கள் அனைத்தும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாயும், திருப்தி அளிப்பதாயும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனக்கு நலமாய் தோன்றின ஒன்றையும் நான் விளக்காமலிருக்கவில்லை. தூய ஆவியின் சிந்தையும், அகத்தூண்டுதலின் மூலம் இந்நூலை இயற்றிய எழுத்தாளனின் மெய்யான அர்த்தத்தையே நான் விளக்கியுள்ளேன் என்று மனப்பூர்வமாய் நம்புகிறேன். சரியோ, தவறோ என் மனதில் தோன்றிய நற்காரியங்களை நான் விளக்கியுள்ளேன். என் சபையில் பின்பற்றக் கூடிய "39" அறிக்கை மற்றும் எல்லா புரொ டஸ்டன்ட் சபைகளிலும் பின்பற்றக்கூடிய விசுவாச அறிக்கை ஆகியவற்றிற்கு மிஞ்சின கோட்பாடுகளை நான் இவ்விளக்க உரையில் எழுதவில்லை.

"கிறிஸ்தவத்தைத் தவிர வேறெந்த மெய்யான மதத்தையும் நான் அறியேன்; கிறிஸ்துவின் கொள்கை அன்றி மெய்யான கிறிஸ்தவம் இல்லை; அவருடைய பரிசுத்த ஆளத்துவமும் (கொலோ 1 : 15), அவருடைய தெய்வீக பணியும் (1தீமோ 2 : 5),

அவருடைய பரிசுத்த நீதியும் (எரே 23 : 6) மற்றும் அவருடைய தூய ஆவியும் (ரோமர் 8 : 9) எல்லாராலும் அங்கீகரிக்க வல்லது. இயேசு கிறிஸ்துவின் அழைப்பிற்கு இணங்கி, அவருடைய இரட்சிப்பின் பணியின் மகத்துவத்தை உணர்ந்து, அவருடைய நாம மகிமையின் புகழ்ச்சிக்காக, அவரை விசுவாசித்து, ஜனங் களை நேசிக்கின்ற மெய்யான கிறிஸ்துவின் ஊழியர்களையன்றி வேறொருவரையும் நான் அறியேன்; விசுவாசத்தினால் கிறிஸ் துவில் இணைக்கப்பட்டு, விசுவாசம் மற்றும் அன்பினால் அவரில் நிலைத்திருந்து, அவருடைய நாம மகிமைக்காக சுவிசேஷ பரி சுத்த நற்கிரியைகளை நடப்பிக்கிறவனையேயன்றி வேறொரு மெய்யான கிறிஸ்தவனையும் நான் அறியேன். இப்படியான ஆவியையுடைய ஊழியர்களும், கிறிஸ்தவர்களும், அநேக ஆண்டுகளாய் என் உடன் சகோதரர்களும், உடன் கூட்டாளிக ளுமாய் இருந்தது போல, இனிவரும் காலங்களிலும் இருக்க, என்னை இம்மட்டும் வழிநடத்திய கர்த்தரின் கரத்தை நம்புகிறேன்" என்கின்ற இந்த பழமையான தெய்வீகவாதியின் வார்த்தைகளுக்கே என்னுடைய விருப்பமும் இணங்குகிறது.

போராயர்.ஜே.சி.ரைல்
ஆசிரியர்

வேதப்பகுதி : மத்தேயு 1 : 1 – 17
தலைப்பு : இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு

புதிய ஏற்பாட்டின் ஆரம்ப வசனங்களாகிய இவைகளை மிகுந்த பயபக்தியோடும் தாழ்மையான சிந்தையோடும் வாசிக்க வேண்டும். நமக்கு முன்பாகக் கொடுக்கப்பட்டுள்ள இந்நூலில், “மனிதனுடைய வார்த்தைகள் அல்ல. தேவனுடைய வார்த்தைகளே அடங்கியுள்ளன”. இதில் உள்ள ஒவ்வொரு வசனமும் தேவ ஆவியின் அகத்தூண்டுதலினால் எழுதப்பட்டுள்ளது *(1தெச 2 : 13 ; 2 தீமோ 3:16, 17)*.

நமக்கு பரிசுத்த வேதாகமத்தைத் தந்த தேவனுக்கு அனுதினமும் நன்றிகளை ஏறெடுப்போம். கிரேக்க மற்றும் ரோம தத்துவ ஞானிகளைப் பார்க்கிலும் ஏழ்மையான கிறிஸ்தவன் தன்னுடைய வேதத்தைக் குறித்தும், மதத்தைக் குறித்தும் நன்கறிவான்.

வேதம் நமக்குக் கொடுத்துள்ள உக்கிராணத்துவத்தை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. நமக்கு அருளப்பட்ட இரக்கத்தின்படியே நாம் கடைசி நாளில் நியாயந்தீர்க்கப்படுவோம். யாரிடம் அதிகம் கொடுக்கப்பட்டதோ, அவனிடத்தினின்று அதிகம் கேட்கப்படும்.

பயத்தோடும், நடுக்கத்தோடும் நாம் வேதத்தை வாசித்து, அதில் காணப்படுகின்ற எல்லாவற்றையும் மெய்மனதோடு விசுவாசித்து கடைபிடிக்கக் கடவோம். இந்நூலை பயன்படுத்துவது எளிதான காரியமன்று.எல்லாவற்றிற்கும் மேலாக, பரிசுத்த ஆவியானவர் நமக்கு கற்றுக்கொடுக்கும்படி நாம் தாழ்மையுடன் ஜெபிக்கக்கடவோம். அவர் ஒருவரே நம் இருதயங்களில் சத்தியத்தை அளித்து, நாம் வாசிக்கின்ற பகுதிகளை புரிந்து கொள்ள உதவி செய்வார்.

புதிய ஏற்பாடு, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்

பிறப்பு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிய சரித்திரத்தைக் கொண்டு ஆரம்பிக்கிறது. வேதத்தில் வேறெந்த பகுதியும், இதைப் போன்ற முக்கியத்துவமும், முழுமையும் பெற்றதில்லை. நான்கு விசேஷித்த சுவிசேஷங்களும் கிறிஸ்துவினுடைய கிரியைகள் மற்றும் அவருடைய மரணத்தைப் பற்றியும் நமக்கு கூறுகிறது. நான்கு முறை அவருடைய செயல்கள் மற்றும் வார்த்தைகளைக் குறித்த விலையேறப்பட்ட தொகுப்பை நாம் வாசிக்கிறோம். இதற்காக நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவை அறிவதே நித்திய ஜீவன். கிறிஸ்துவை விசுவாசிப்பது பிதாவாகிய தேவனோடு சமாதானமாக இருப்பதாகும். கிறிஸ்துவை பின்பற்றுவதே மெய் கிறிஸ்தவனின் அடையாளம். கிறிஸ்துவோடு ஜீவிப்பது பரலோகத்திலிருப்பதற்குச் சமம்.

மத்தேயு சுவிசேஷம் ஒரு நீண்ட பெயர் அட்டவணையைக் கொண்டு ஆரம்பிக்கிறது. முதல் பதினாறு வசனங்கள் ஆபிரகாம் முதல் தாவீது வரையுள்ள வம்சங்களையும் தாவீது முதல் இயேசு கிறிஸ்துவின் குடும்ப வம்சாவளி வரைக்கும் எடுத்துக் கூறுகிறது. இவ்வசனங்கள் பிரயோஜனமற்றவை என்று ஒருவனும் சிந்திக்கலாகாது. படைப்பில் ஒன்றும் பிரயோஜனமற்றவை அல்ல. மிகச் சிறிய பூச்சிகளும், பாசிகளும் கூட நன்மை பயக்கும். எனவே, வேதத்தில் பயனற்றதென்று ஒன்றுமில்லை. ஒவ்வொரு வார்த்தையும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பரிசுத்த மனிதர்களால் எழுதப்பட்டுள்ளது. முதலில் பிரயோஜன மற்றவையாகக் காணப்படும் அதிகாரங்களும் வசனங்களும், நல்நோக்கத்திற்காகவே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த 16 வசனங்களை உற்று கவனிக்கிறவன், அதிலுள்ள பிரயோஜனமான பாடங்களை கண்டறிவதில் தவறமாட்டான்.

முதலாவதாக, இந்தப் பெயர் அட்டவணையினின்று நாம் கற்றுக் கொள்கின்ற காரியம் என்னவெனில், கர்த்தர் தம்முடைய வார்த்தையை என்றென்றும் காப்பார். “பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் ஆபிரகாமின் வித்திற்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்று அவர் வாக்குத்தத்தம் பண்ணினார். தாவீதின் வம்சத்தில் இரட்சகரை ஏற்படுத்துவேன் என்றும் அவர் வாக்களித்தார் *(ஆதி 12:3, ஏசா 11:1)*. இந்த பதினாறு வசனங்களும் இயேசு தாவீது மற்றும்

ஆபிரகாமின் குமாரன் என்று நிரூபிக்கிறது. மேலும், கர்த்தருடைய வாக்குத்தத்தமும் நிறைவேறிற்று. தேவனற்றவர்களும், உணர்வற்ற ஜனங்களும் இதைக் கண்டு பயப்படக்கடவர். அவர்கள் என்ன நினைத்தாலும், கர்த்தர் தம்முடைய வாக்கைக் காப்பவர். அவர்கள் மனந்திரும்பாவிடில், நிச்சயமாக அழிந்து விடுவார்கள். மெய் கிறிஸ்தவர்கள் இதை நினைவு கூர்ந்து, ஆறுதல் அடைவார்கள். பரலோகத்திலிருக்கும் அவர்களுடைய தேவன் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர். கிறிஸ்துவுக்குள் எல்லா விசுவாசிகளையும் விடுவிப்பேன் என்று அவர் கூறியுள்ளார். அவர் அவ்வாறு சொல்லியிருப்பாரானால், அதை நிச்சயமாக நிறைவேற்றுவார். "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல". "அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத் தாம் மறுதலிக்க மாட்டார்" (எண் 23:19; 2 தீமோ2:13).

இரண்டாவதாக, நாம் பெயர் அட்டவணையில் இருந்து மனித இயல்பிலுள்ள பாவத்தன்மை மற்றும் அசுத்தத்தைக் குறித்து கற்றுக் கொள்ளலாம். இந்த அட்டவணையில் இடம் பெற்றுள்ள அநேக தெய்வ பயமுள்ள பெற்றோர்களுக்கு முரட்டாட்டமும், தெய்வ பயமற்ற பிள்ளைகள் இருந்தார்கள். யோராம், ஆமான், எகோனியா மற்றும் ரெகொபெயாம் ஆகியோர் தெய்வ பக்தியான தகப்பன்மார்களை உடையவர்கள். ஆனால், இவர்களோ, தெய்வபயம் அற்றவர்கள். கர்த்தருடைய கிருபையோ குடும்பம் குடும்பமாக காணப்படுவதில்லை. நாம் தேவனுடைய பிள்ளைகளாவதற்கு, நல் உதாரணங்கள் மற்றும் நல்ல அறிவுரைகளைப் பார்க்கிலும் மேலான காரியங்கள் தேவைப்படுகிறது. "அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான்1:13). ஜெபிக்கும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளும் தேவ ஆவியினால் பிறக்க வேண்டுமென்று இரவும், பகலும் அவர்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபிக்க வேண்டும்.

கடைசியாக, இந்த பெயர் அட்டவணையில் இருந்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கமும், தயையும் மிகப்பெரிது என்பதை நாம் கற்றுக் கொள்ளலாம். பாவத்தினால் கறைபடிந்து, அசுத்தம் நிறைந்த மனித இயல்பின்

மீது அளவற்ற இரக்கம் பாராட்டி, கன்னியினிடத்தில் அவதரித்து, "**மனித சாயலான**" நமது ஆண்டவரின் இரக்கத்தை எண்ணிப்பார்ப்போம் (பிலி2:7). இவ்வட்டவணையில் காணப்படுகின்ற சில பெயர்கள் அவமானமான சோக சரித்திரங்களையே நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர்களில் சிலருடைய பெயர்கள் வேதத்தின் வேறெந்த பகுதிகளிலும் குறிப்பிடப்பட்டிருக்காது. இவையெல்லாவற்றின் கடைசியிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயர் இடம் பெற்றிருக்கும். "அவர் நித்திய தேவனாயிருந்தபோதும், தம்மைத்தாமே வெறுத்து, பாவிகளுக்கு இரட்சிப்பை அளிக்கும்படிக்கு மனுஷரூபமானார். அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி 8:9).

இந்த அட்டவணையை நாம் வாசிக்கும்போது, மிகுந்த நன்றியறிதலோடு வாசிக்க வேண்டும். கிறிஸ்துவின் இரக்கம் மற்றும் தயைக்கு அப்பாற்பட்ட மனித இயல்பை நாம் எங்கும் காண இயலாது. புனித மத்தேயு குறிப்பிட்டுள்ள நபர்களின் பாவங்களைக் காட்டிலும், நம்முடைய அக்கிரமங்களும், மீறுதல்களும் அநேகம். நாம் சுவிசேஷத்தை விசுவாசித்து, மனந்திரும்பும்போது, நம்மை ஒருவராலும் பரலோகத்தினின்று வெளியேற்ற முடியாது. இப்பேற்பட்ட பாவ மனிதர்களை கொண்ட அட்டவணையில், ஸ்திரீயின் வித்தாக பிறப்பதை அவமானமாகக் கருதாத நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, நம்மையும் அவருடைய சகோதரர்கள் என்று அழைக்கவும், நமக்கு நித்திய வாழ்வை அளிக்கவும் அவமானமாக கருதமாட்டார்.

வேதப்பகுதி : மத்தேயு 1 : 18 – 25

தலைப்பு : இயேசு கிறிஸ்துவின் மானுட பிறப்பும், நாமமும்

இரண்டு பிரதான உண்மைகளை கூறி இவ்வசனங்கள் ஆரம்பமாகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்வாறு நம்முடைய சாயலை தம்மீது ஏற்றுக் கொண்டு மனிதனானார் என்று இவை கூறுகிறது. மேலும், அவருடைய பிறப்பு அற்புதமானது என்றும், அவருடைய தாய் கன்னி மரியாள் என்றும் கூறுகிறது.

இவை புரிந்துக் கொள்ள இயலாத பகுதிகள். அவை ஆழமானது, ஆனால், அவைகளை நம்மால் அளவிட முடியாது. அவை சத்தியம், நம்முடைய மனதால் அவற்றை புரிந்து கொள்ள முடியாது. நம்முடைய சொற்ப அறிவிற்கு மிஞ்சின காரியங்களைக் குறித்து விளக்கமளிக்காமல் இருப்பது நமக்கு நல்லது. நம்மால் புரிந்து கொள்ள இயலாத காரியங்களை ஆராய்வதை விட சொல்லப்பட்ட காரியங்களை மிகுந்த ஜாக்கிரதையோடு விசுவாசிப்போம். இவ்வுலகை சிருஷ்டித்த தேவனால் இயலாத காரியம் ஒன்றுமில்லை என்றறிவோமாக. ஏனெனில் “இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் உற்பவித்து, கன்னி மரியாளினிடத்தில் பிறந்தார்” என்ற அப்போஸ்தலனின் வார்த்தையை நாம் விசுவாசிப்போம்.

இவ்வசனங்களில் கூறப்பட்டுள்ள யோசேப்பின் நடத்தையைக் குறித்து நாம் சிந்திப்போம். தெய்வீக ஞானம் மற்றும் பிறர் மீது காட்டும் கனிவான கரிசனைக்கு ஒரு சிறந்த முன்னடையாளம் இவர். தனக்கு நியமிக்கப்பட்ட ஸ்திரீ கருவுற்றிருக்கிறாள் என்பதை அறிந்து கடினமாய் ஏதும் அவளுக்கு செய்ய நினைக்கவில்லை. அவன் பொறுமையோடு காரியங்கள் நிறைவேற காத்திருந்தான். “விசுவாசிக்கிறவன் பதறான்” (ஏசா 28:16) என்ற வாக்கியத்திற்கேற்ப அவன் தன் காரியங்கள் அனைத்தையும் ஜெபத்தின் மூலம் கர்த்தருக்கு முன்பதாக வைத்தான்.

யோசேப்பின் பொறுமை வெகுவாய் பலனளிக்கப்பட்டது. தன் வியாகுலத்திற்குக் காரணமான பிரச்சனையைக் குறித்தான நேரிடையான செய்தியை தேவனிடத்தினின்று பெற்றான்; உடனே அவனுடைய எல்லா பயங்களும் நீங்கிற்று. கர்த்தருக்குக் காத்திருப்பது எவ்வளவு நல்லது. சுத்த இருதயத்தோடு கர்த்தரிடத்தில் ஏறெடுக்கும் விண்ணப்பத்திற்கு, யாருக்காவது பதில் இல்லாமல் போயிருக்கிறதா? “உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்” (நீதி 3:6).

நம்முடைய கர்த்தருக்குக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு பெயர்களைக் குறித்து இவ்வசனங்களில் நாம் காண்போம். ஒன்று “**இயேசு**”, மற்றொன்று “**இம்மானுவேல்**”. ஒன்று அவருடைய பணியையும், மற்றொன்று, அவருடைய இயல்பையும் குறிக்கிறது. இரண்டுமே மிகவும் ஆர்வமுடையவை.

‘**இயேசு**’ என்பதற்கு ‘**இரட்சகர்**’ என்று அர்த்தம். இதையே பழைய ஏற்பாட்டில் ‘**யோசுவா**’ என்றழைக்கின்றனர். ‘அவர் தம்முடைய ஜனங்களின் பாவங்களினின்று அவர்களை இரட்சிப்பதினால்’ இப்பெயர் பெற்றார். இதுவே அவருடைய சிறப்பான பணியாகும். பாவம் போக்கும் தன்னுடைய இரத்தத்தினால் அவர்கள் பாவங்களைக் கழுவி, அவர்களுடைய பாவக்குற்றத்தினின்று அவர்களை விடுவிக்கிறார். சுத்திகரிக்கும் ஆவியை அவர்கள் இருதயத்தில் வைத்து, அவர்களை பாவப்பிடியினின்று காப்பாற்றுகிறார். தம்முடைய ஜனங்களை இவ்வுலகத்தினின்று எடுத்து, தம்மோடு கூட பரலோகத்தில் இளைப்பாறச் செய்வதின் மூலம், அவர்களை பாவ பிரசன்னத்தினின்று விடுவிக்கிறார். கடைசி நாளில், அவர்களுக்கு அவர் அளிக்கின்ற மகிமையின் சரீரத்தின் மூலம், பாவ விளைவுகளினின்று அவர்களை முற்றிலுமாகக் காப்பாற்றுகிறார். கிறிஸ்துவின் ஜனங்கள் பரிசுத்தரும், ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாமே. அவர்கள் துன்பம், சிலுவை மற்றும் போராட்டத்தினின்று விடுவிக்கப்படாமல், பாவத்திலிருந்து என்றென்றுமாய் விடுவிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவர்கள் குற்றம் கழுவப்பட்டு விட்டது. கிறிஸ்துவின் ஆவியினால் அவர்கள் பரலோகத்தின்

புத்திரராய் மாற்றப்பட்டும் இருக்கிறார்கள். இதுவே இரட்சிப்பு.

பாவபாரம் நிறைந்த பாவிகளுக்கு '**இயேசு**' என்ற நாமம் உற்சாகமளிக்கும் நாமம். இராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்த ராகிய இவர், இதையும்விட மேலான நாமமொன்றை தனக்குத் தரிப்பித்திருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. இவ்வுலகத்தை ஆண்ட அரசர்கள் தங்களை பேரரசர், மகா கனம் பொருந்தியவர், தைரியமானவர், சிறந்தவர் மற்றும் வெற்றி சிறந்தவர் என்கிற நாமங்களினால் அழைத்துக் கொள்வது வழக்கம். ஆனால், தேவகுமாரன் தன்னை '**இரட்சகர்**' என்று கூறிக் கொள்வதில் திருப்தியுள்ளவராய் இருந்தார். இரட்சிப்பின் மீது வாஞ்சையாயுள்ள ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையை ஆதாயப்படுத்தி, பிதாவாகிய தேவனிடத்தில் தைரியத்தோடு நெருங்கிச் சேர்கிறார்கள். இதுவே அவருடைய பணியும், இரக்கஞ் செய்வதே அவரின் மனமகிழ்ச்சியுமாகும். "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்மு டைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவான் *3:17*).

விசுவாசிகளுக்கு இயேசு என்ற நாமம் சிறப்பானதும், விலை மதிப்பற்றதுமாகும். இந்த நாமம் அநேக நன்மைகளை இவர்க ளுக்குச் செய்துள்ளது. பணத்தால் பெற இயலாத உள்ளான சமாதானத்தைக்கூட இந்த நாமம் இவர்களுக்குப் பெற்றுத் தந்துள்ளது. அவர்களுடைய பாரமான இருதயங்களை இலகு வாக்கி, தொய்ந்துபோன ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலை அளிக்கிறது. "உம்முடைய நாமம் ஊற்றுண்ட பரிமள தைலமா யிருக்கிறது" (உன்*1:3*) என்று அநேகருடைய அனுபவத்தை மைய மாக வைத்து சாலொமோன் உன்னதப்பாட்டில் கூறுகிறார். கர்த்தருடைய இரக்கம், நன்மைகள் மீதான கருத்துக்களை விசுவாசிப்பவனைவிட 'இயேசுவை' விசுவாசிக்கிறவன் பாக்கியவான்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆள்தன்மை யானது தெய்வீகம் மற்றும் மாம்சீக இயல்புகளின் ஒருங்கி ணைப்பு என்பதை நாம் மிகத் தெளிவாக புரிந்துக் கொள்ள

வேண்டும். இது அதி முக்கியத்துவம் வாய்ந்தக் குறிப்பாகும். நம்முடைய இரட்சகர் பூரண மனிதனாயிருப்பதைப் போல, பூரண கர்த்தரும், பூரண கர்த்தராயிருப்பதைப் போல பூரண மனிதனாயுமிருக்கிறார் என்பதை நாம் நம் மனதில் ஆழமாகப் பதிய வைக்க வேண்டும். இந்த சிறப்பான ஆதார சத்தியத்தை ஒருமுறை மறந்தாலும் கூட, நாம் பலவித இக்கட்டுகளுக்கு ஆளாகி விடுவோம். '**இம்மானுவேல்**' என்ற நாமம் நம் அறிவுக்கு புலப்படாத ஒன்று. இயேசு பாவத்தைத் தவிர, மற்றெல்லாக் காரியங்களிலும் அவர் நம்முடைய சாயலைக் கொண்டுள்ளார். இயேசு நம்மோடுகூட மனித மாம்சம் மற்றும் இரத்தத்தில் இருந்த போதிலும், அவர் அதே வேளையில் கடவுளாயிருக்கி றார்.

நம்முடைய இரட்சகரும் நம்மில் ஒருவரைப் போல சோர்வாய், பசியோடும், தாகத்தோடும் காணப்பட்டதுமன்றி, கண்ணீர் சிந்தவும், துக்கப்படவும், வேதனைப்படவும் செய்தார் என்று நாம் அநேக வேளைகளில் சுவிசேஷங்களை வாசிப்பதிலி ருந்து அறியலாம். இவ்வனைத்திலும் கிறிஸ்து இயேசுவை மனிதனாகக் காணலாம். அவர் கன்னி மரியாளினிடத்தில் பிறந்த போது தம்மேல் ஏற்றுக் கொண்ட மனுஷசாயலையும் நாம் காணலாம்.

நம்முடைய இரட்சகர் மனுஷர்களின் இருதயங்களையும், சிந்தைகளையும் அறிந்தவராய், பிசாசுகளின் மீது அதிகாரமுடை யவராய், தம்முடைய வார்த்தையினால் வல்லமையான அற்புதங்களைச் செய்தவராய், தேவதூதர்களால் பணிவிடைச் செய்யப்பட்டவராய், தன்னுடைய சீஷன் தன்னை '**என் தேவனே**' என்று கூப்பிட அனுமதித்தவராய் 'ஆபிரகாமுக்கு முன்பே நான் இருக்கிறேன்' என்றும் 'நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' என்றும் அவர் கூறிய வார்த்தைகளையும் அதே சுவிசேஷங்களில் அநேக இடங்களில் நாம் காணலாம். இவை அனைத்திலும் "நித்திய தேவனை" நாம் காணலாம். "இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன் ஆமென்" (ரோமர் *9:5*). நம்முடைய இரட்ச கரின் தெய்வீகத் தன்மையை தொடர்ந்து ஆராய்ந்தால், நமக்கு

நம்முடைய விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் உறுதியான நிலை ஏற்படும். சர்வ வல்ல கர்த்தரிடத்தில் விசுவாசமாய் இருப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நாம் அழைக்கப்பட்டிருக் கிறோம். வானத்திலும், பூமியிலும் எல்லா அதிகாரமும் அவருக்கு இருக்கிறது. அவருடைய கரத்தினின்று ஒருவராலும் நம்மை பறிக்க முடியாது. நாம் கிறிஸ்துவுக்குள் மெய்யான விசுவாசிக ளாய் இருந்தால், நம்முடைய இருதயம் கலங்காமலும், பயப்ப டாமலும் இருக்கும்.

நம்முடைய துன்பத்திலும், சோதனையிலும், உற்ற ஆறுதல் நமக்கிருக்க வேண்டுமாயின், நாம் தொடர்ச்சியாக நம்முடைய இரட்சகரின் 'மனிதத் தன்மையை' ஆராய வேண்டும். சிறுபால கனாய், கன்னி மரியாளின் மார்பில் சாய்ந்திருக்கிற கிறிஸ்து இயேசுவாகிய மனிதன், மற்றொரு மனிதனின் இருதயத்தை நன்கு அறிவார். நம்முடைய பலவீனங்களை அவர் அறிவார். அவர் தாமே சாத்தானின் சோதனைகளினால் சோதிக்கப்பட் டார். அவர் பசியை தாங்கியிருக்கிறார். அவர் கண்ணீர் சிந்தியுள் ளார். அவர் வலியை உணர்ந்திருக்கிறார். நம்முடைய துக்கங்க ளின் மூலம் அவரில் நம்பிக்கையாயிருக்கலாம்; ஆனாலும், அவர் நம்மை கைவிடமாட்டார். ஒன்றையும் மறைக்காமல், ஜெபத்தில் தைரியத்தோடு நம்முடைய இருதயங்களை அவருக்கு முன்பாக ஊற்றி விட வேண்டும். அவர் தம்முடைய ஜனங்களோடு சேர்ந்து பரிதபிப்பார்.

இந்த சிந்தனைகள் நம்முடைய ஆழ்மனதில் பதியக்கடவது. புதிய ஏற்பாட்டின் முதல் அதிகாரத்தில் அடங்கியுள்ள ஆழமான, ஊக்கமான சத்தியங்களுக்காக நாம் கர்த்தருக்கு நன்றி சொல்வோம். "தம்முடைய ஜனங்களின் பாவத்தினின்று அவர் களை விடுவிக்கும்" நபரைக் குறித்து அது கூறுவதுமல்லாமல், அந்த இரட்சகரே 'இம்மானுவேல்' என்றும் கூறுகிறது. கர்த்தரு மாய், நம்மை போன்ற மனுஷசாயலில் தெய்வீகத் தன்மையோடு மனுஷகுமாரனுமாய் நம்மோடு இருக்கிறார். இது நற்செய்தி. நாம் இந்த சத்தியங்களை நம்முடைய இருதயங்களில் நன்றியோடுக் கூடிய விசுவாசத்தின் மூலம் உட்கொள்வோம்.

வேதப்பகுதி : மத்தேயு 2 : 1 – 12

தலைப்பு : கிழக்கிலிருந்து வந்த ஞானிகள்

இப்பகுதியில் கூறப்பட்டுள்ள ஞானிகள் யாரென்கிற விவரம் தெரியாது. அவர்களுடைய பெயர்கள் மற்றும் வசிக்கின்ற ஊர்கள் நமக்கு மறைக்கப்பட்டு விட்டது. அவர்கள் 'கிழக்கிலிருந்து' வந்தார்கள் என்கிற செய்தி மட்டுமே நமக்குத் தெரியும். அவர்கள் அரேபியரா அல்லது ஆசியா நாட்டவரா என்று நமக்குத் தெரியாது. தானியேலுடைய தீர்க்கதரிசனங்களி லிருந்தோ அல்லது சிறைபட்டுப்போன பத்து கோத்திரத்தாரிட மிருந்தோ கிறிஸ்துவின் வருகையை அவர்கள் தெரிந்து கொண்டார்களா என்றும் நமக்குத் தெரியாது. அவர்கள் யாரென்று தெரியாத போதிலும் அந்நிகழ்வினின்று அநேகக் காரியங்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

நாம் எதிர்பார்க்காத இடங்களில் கூட கர்த்தருக்கு உண்மை யான ஊழியர்கள் இருப்பார்கள் என்பதை இவ்வசனங்கள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. இந்த ஞானிகளைப் போன்ற அநேக 'மறைவானவர்கள்' கர்த்தராகிய இயேசுவுக்கு உண்டு. மெல்கிசேதேக்கு, எத்திரோ மற்றும் யோபு ஆகியோரின் சரித்திரம் மிகச் சுருக்கமாகவே வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், அவர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப் பட்டு, கிறிஸ்து வெளிப்படும் நாளில் அவர்களும் கிறிஸ்துவோடு கூட வெளிப்படுவார்கள். இதை நினைவில் வைத்திருப்பது நல்லது. நாம் பூமியைச் சுற்றிப் பார்த்து, இவைகளில் எந்த நன்மையும் இல்லை, எல்லாம் வெறுமையாயுள்ளது என்று பதட்டமாய் கூறலாகாது. ஏனெனில் கர்த்தருடைய கிருபை ஒருபோதும் குறிப்பிட்ட குடும்பங்கள் மற்றும் இடங்களுக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. மேலும், வெளிப்புறமான எவ்வித உதவியுமின்றி பரிசுத்த ஆவியானவர் ஆத்துமாக்களை கிறிஸ்து வினிடம் வழிநடத்த முடியும். இந்த ஞானிகளைப் போல

உலகத்தில் ஏதோ ஒரு கோடியில் ஜனங்கள் பிறந்திருந்த போதும், அவர்கள் "இரட்சிப்பிற்குள் ஞானிகளாக்கப்படுகிறார்கள்". இத்தருணத்தில் கூட அநேகர் மரித்து பரலோகத்திற்கு பிரயாணமாகிக் கொண்டிருக்கலாம். உலகமோ, சபையோ அவர்களைக் குறித்து ஏதும் அறியாமலிருக்கலாம். 'முள்ளுகளுக்கு மத்தியிலுள்ள லில்லி' மலரைப் போல, அவர்கள் எங்கோ ஒரு மறைவான இடத்தில் தோன்றி, தங்கள் 'நறுமணத்தை பாலைவனத்தில் வீணாக்கினார்கள்'. ஆனால், கிறிஸ்து அவர்களை நேசிக்கிறார், அவர்களும் கிறிஸ்துவை நேசிக்கின்றனர்.

இரண்டாவதாக, மதச் சிறப்புரிமை பெற்றவர்களே எல்லா வேளைகளிலும் கிறிஸ்துவுக்கு அதிக மரியாதை செலுத்துகிறார்கள் என்று இவ்வசனங்கள் கூறவில்லை. இரட்சகர் பிறந்திருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டவுடனே, வேதபாரகரும், பரிசேயரும் துரிதமாக பெத்லகேமுக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை. பரிசுத்த லூக்கா குறிப்பிட்டுள்ள மேய்ப்பர்கள் தவிர, வெகுத்தொலைவிலிருந்து வந்த யாருமறியாத சில ஞானிகளே, கிறிஸ்துவை முதலில் கண்டு சந்தோஷப்பட்டவர்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (யோவான்1:11). என்னே! ஒரு கவலைக்கிடமான மனித இயல்பு இது! இதைப்போன்ற காரியம் எத்தனை முறை நம் மத்தியில் காணப்பட்டிருக்கிறது! எத்தனை நபர்கள் கர்த்தரின் கிருபையினருகே வந்து அதை நிராகரித்திருக்கிறார்கள். "திருச்சபை எவ்வளவு அருகிலோ, தேவனிடமிருந்து அவ்வளவு தொலைவில் இருப்பர்" என்ற பழமொழியில் அதிக சத்தியம் அடங்கியுள்ளது. பரிசுத்த காரியங்களில் எவ்வளவு பரிச்சயம் இருக்கிறதோ, அதே அளவு வெறுப்பும் இருக்கும். திருச்சபைக்கு முதலில் வந்து தேவனை ஆராதிப்பதற்கான அனைத்து வசதிகள் இருந்தாலும் அவர்கள் எப்போதும் திருச்சபைக்கு கடைசியில் தான் வருவார்கள். ஆனால், கடைசியில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுபவர்கள் எப்பொழுதும் ஆராதனைக்கு முதலில் வருவார்கள்.

மூன்றாவதாக, சிந்தையில் வேத அறிவு அதிகம்

இருந்தாலும், இருதயத்தில் கிருபை இருக்காது என்று இவ்வசனங்கள் கூறுகிறது. 'கிறிஸ்து எங்கே பிறப்பார்' என்றறிய மூப்பர்களையும், ஆசாரியர்களையும் ஏரோது ராஜா அனுப்பினான் என்று நாம் சொல்லக் கேட்டோம். வேத எழுத்துக்களில் இருந்து சரியான விடையை உடனடியாக அவர்கள் கொடுத்தார்கள் என்றும் பார்த்தோம். ஆனால், அவர்கள் இரட்சகரை சேவிக்கும்படி பெத்லகேமுக்குச் செல்லவில்லை. அவர்கள் மத்தியில் அவர் ஊழியஞ் செய்த போது, அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. அவர்கள் இருதயங்களைவிட அவர்கள் சிந்தை, அறிவில் பலத்திருந்தது. வேத அறிவில் மட்டும் தங்கி திருப்தியாயிருப்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். அதை சரியாக பயன்படுத்தினால், மிகவும் நலமானதே. மனிதனுக்கு வேத அறிவு அதிகம் இருந்தாலும், அவன் நித்திய அழிவிற்கே பாத்திரவான். நம் இருதயங்களின் நிலை என்ன? இது சிறப்பான கேள்வியாகும். அநேக வெகுமதிகளைக் காட்டிலும் சிறிய கிருபையே மேலானது. வெகுமதிகள் மாத்திரம் ஒருவனை இரட்சிக்காது; ஆனால் கிருபை மகிமைக்கு நேராக வழிநடத்தும்.

நான்காவதாக, ஆத்மீக உழைப்பிற்கு ஒரு சிறப்பான உதாரணம். தாங்கள் வசிக்கும் ஊரிலிருந்து இயேசு பிறந்த ஊருக்கு வர இந்த ஞானிகளுக்கு இருந்த அவசியம் தான் என்ன? எவ்வளவு தூர பிரயாணம் அவர்கள் மேற்கொண்டிருக்க வேண்டும்? அந்த தூர பிரயாணத்திற்காக, அவர்கள் செலவிட்ட மணிநேரங்கள் தான் எவ்வளவு! அவர்கள் வழியில் சந்தித்த பேராபத்துக்கள் எத்தனையோ! ஆனால், இவை எதுவும் அவர்களை அசைக்கவில்லை. 'யூதருக்கு ராஜா பிறந்திருக்கிறார்' அவரை காண வேண்டுமென்ற எண்ணம் மட்டுமே அவர்கள் இருதயங்களில் இருந்தது. அவரை காணும்வரை அவர்கள் ஓய்ந்திருக்கவில்லை. "சித்தம் எங்கேயோ அங்கே வழி உண்டு" என்ற ஆங்கில பழமொழிக்கேற்ப அவர்கள் நடந்து கொண்டார்கள். வளர்ந்து வருகின்ற கிறிஸ்தவர்கள் இந்த ஞானிகளின் வாழ்க்கையை உதாரணமாக வைத்து பின்பற்றினால் நலமாயிருக்கும்.

நம்முடைய சுய வெறுப்பு எங்கே? இரக்கத்தை பெற்றுக்

கொள்ள நாம் என்ன முயற்சிகள் எடுக்கிறோம்? நாம் கிறிஸ்துவை பின்பற்றுவதில் காட்டும் ஊக்கம் தான் என்ன? கிறிஸ்தவத்தினால் நமக்கு பயன் என்ன? இவையனைத்தும் முக்கியமான கேள்விகள். 'மெய்யான ஞானிகள்' மிகவும் பயபக்தி உடையவர்கள். ஆனால், வெகு சிலரே அப்படிப்பட்டவர்கள்.

இறுதியாக, விசுவாசத்திற்கு ஓர் உன்னதமான எடுத்துக்காட்டு, கிறிஸ்துவை ஒருபோதும் கண்டிராத இந்த ஞானிகள் அவரை விசுவாசித்தார்கள்; ஆனால் அந்த நிலை நீடிக்கவில்லை. வேதபாரகரும், பரிசேயரும் அவரை விசுவாசிக்காத போதும், அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்தனர். மரியாளின் மடியிலிருந்த இயேசு பாலகனைக் கண்டு, அவரே ராஜா என்று விசுவாசித்து பணிந்து கொண்டார்கள். இதுவே அவர்களுடைய விசுவாசத்தின் ஆதாரமாகும். அவர்கள் விசுவாசிக்கும் பொருட்டு எந்தவொரு அற்புதங்களையும், அவர்கள் காணவில்லை. அவர்கள் விசுவாசிக்கும்படி எந்த செய்தியும் கேட்கவில்லை. அவர்கள் ஆச்சரியப்படும்படி தெய்வத்தன்மையின் அடையாளங்களோ அல்லது அற்புதங்களோ காணவில்லை. நம்மில் ஒருவனைப் போல, உதவியற்ற நிலையில், பலவீனமாக, தாயின் பராமரிப்பிற்காக ஏங்குகின்ற ஒரு புதிதாய் பிறந்த பாலகனையே அவர்கள் தரிசித்தார்கள். அவர்கள் பாலகனை பார்த்தபோது, இவ்வுலகத்தின் இரட்சகரைக் கண்டோம் என்று விசுவாசித்தார்கள். 'அவர்கள் முகங்குப்புற விழுந்து அவரைப் பணிந்து கொண்டார்கள்'.

இப்பேற்பட்ட விசுவாசத்தை நாம் முழு வேதாகமத்தில் எங்கும் காண முடியாது. தன் பாவத்திற்காக வருந்திய கள்வனின் விசுவாசமும், இவர்களுடைய விசுவாசமும் சரிசமமானதே. பாதகன்போல் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கிறிஸ்துவை பார்த்த கள்வன், அவரை '**ஆண்டவரே**' என்று கூறி விண்ணப்பித்தான். ஏழை ஸ்திரீயின் மடியில் தவழ்ந்த சிறுபாலகனாகிய கிறிஸ்துவை கண்ட இந்த ஞானிகள், அவரே கிறிஸ்துவாகிய இரட்சகர் என்று அறிக்கையிட்டு அவரை பணிந்து கொண்டார்கள். கிறிஸ்துவை இம்முறையில் விசுவாசிப்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

இப்படிப்பட்ட விசுவாசத்திலே கர்த்தர் மனமகிழ்ச்சியாய் இருக்கிறார். இந்நந்நாளில் அந்த விசுவாசத்தின் ஆதாரத்தை நாம் பார்க்கிறோம். எங்கெல்லாம் வேதம் வாசிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் இந்த ஞானிகளின் கீர்த்தியும், நடத்தையும் ஞாபகச் சின்னங்களாக சொல்லப்படும். அவர்களுடைய விசுவாசப் பாதையிலே நாமும் நடப்போமாக. நம்மை சுற்றிலும் இருப்பவர்கள் கவனயீனமாயும், விசுவாசியாமலும் இருப்பதைப் போல நாமும் இராமல், கிறிஸ்துவை விசுவாசித்து, அறிக்கையிடுவதில் வெட்கப்படாமல் இருப்போமாக. கிறிஸ்துவே இரட்சகரென்று நாம் விசுவாசிக்க இந்த ஞானிகளைவிட ஆயிரமாயிரம் ஆதாரங்கள் நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும், நம்முடைய விசுவாசம் எங்கே இருக்கிறது?

வேதப்பகுதி : மத்தேயு 2 : 13 – 23
தலைப்பு : எகிப்திலிருந்து நாசரேத்தில் குடியேறுதல்

இவ்வுலகத்து அதிபர்கள் கர்த்தரின் வருகையில் குறைந்த ஆர்வமுடையவர்கள் என்பது எவ்வளவு பெரிய உண்மை என்று இப்பகுதி வசனங்கள் நமக்கு கூறுகிறது. பாவிகளை இரட்சிக்க கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்தார். உடனே ‘அவரை கொலை செய்ய ஏரோது ராஜா வகை தேடினான்’ என்று சொல்லப்பட்டுள்ளது.

கனமும், ஐசுவரியமும் ஆத்துமாவிற்கு கேடு விளைவிக்கக் கூடிய வஸ்துக்கள். அதை பெற்றுக் கொள்ள வாஞ்சிப்பவர்கள் எதை தாம் நாடுகிறோம் என்பதை அறியார்கள். அவை மனிதரை சோதனைக்குட்படுத்தும். அவை இருதயத்தை பெருமையினால் நிறையப்பண்ணி, கீழான காரியங்களில் பற்றுதலை ஏற்படுத்தும். “வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை” (1கொரி 1:6).“ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது” (மாற்கு 10:23).

கனமும், ஐசுவரியமும் உடைய ஜனங்களைப் பார்த்து நாம் பொறாமை அடைகிறோமா? “அவர்களுடைய இருப்பிடம், பதவி, சொத்து எனக்கும் இருந்திருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்?” என்று உங்கள் இருதயங்களில் எப்போதாவது எண்ணினதுண்டா? அப்படிப்பட்ட எண்ணங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் இடமளிப்பதைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். எந்த சொத்துக்களை பார்த்து நாம் இச்சிக்கிறோமா, அவைகளை உடைய மனிதர்களை அவை சிறிது சிறிதாக நரகத்தில் தள்ளிவிடும். நம்முடைய அழிவிற்கு கொஞ்சம் அதிகமான பணமே போதுமானது. ஏரோதைப் போல, நாமும், அக்கிரமத்திற்கும், கொடூரத்தின் உச்சத்திற்கும் செல்ல முடியும். “பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்” (லூக்கா 12:15).

“நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்” (எபி 13:5).

அரசர்களின் ஆதரவு அதிகாரத்தைச் சார்ந்தே கிறிஸ்துவின் காரியம் இருக்கிறதென்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அப்படியெனில், நீங்கள் தவறிழைத்துவிட்டீர்கள். மெய்யான கிறிஸ்தவத்தை முன்னேற்ற பாடுபட்டதைவிட அதிகப்படியான காலங்கள் அதன் சத்தியத்திற்கு அவர்கள் எதிரிகளாகவே இருந்திருக்கிறார்கள். “பிரபுக்களையும் இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள்” (சங் 146:3). அவர்களும் ஏரோதைப் போன்றவர்களே.

தன்னுடைய சிறு வயதிலிருந்தே கர்த்தராகிய இயேசு எவ்வாறு “பாடு நிறைந்த மனுஷனாக இருந்தார்” என்று கவனிப்போம். இவ்வுலகிற்குள் நுழைந்தவுடனே அவருக்கு பிரச்சனை காத்திருந்தது. ஏரோதின் வெறுப்பு இருந்தது, அவருடைய வாழ்க்கை ஆபத்திலிருந்தது. அவருடைய தாயும், யோசேப்பும் அவரை நள்ளிரவில் எடுத்துக் கொண்டு “எகிப்திற்கு ஓடிப்போக உடன்பட்டார்கள்”. இந்நிகழ்வு, இவ்வுலகில் அவர் அனுபவித்த எல்லா அனுபவங்களின் மாதிரியாகும். பால் குடிக்கின்ற குழந்தையாயிருந்த போதே அவரை அவமானத்தின் அலைகள் தாக்கத் துவங்கியது.

துக்கப்படுகிறவர்களுக்கும், துயரப்படுகிறவர்களுக்கும் கர்த்தராகிய இயேசு இரட்சகராயிருக்கிறார். நம்முடைய துயரங்களை அவரிடத்தில் ஜெபத்தின் மூலம் அறிவிக்கும் போது நாம் என்ன நினைக்கிறோம் என்பதை அவர் நன்கு அறிவார். தொடர் துன்பத்தில் அவரிடத்தில் நாம் அழுது முறையிடும் போது, அவர் நம்மீது இரக்கம் கொள்கிறார். அவரிடமிருந்து நாம் ஒன்றையும் மறைத்து வைக்காமல் இருப்போம். நம்முடைய நெருங்கிய நண்பராக அவரை நாம் வைத்துக் கொள்வோம். நம்முடைய இருதயங்களை அவருக்கு முன்பாக ஊற்றக்கடவோம்.

மரணமானது, எப்படி மற்ற மனுஷரைப் போல இவ்வுலக ராஜாக்களையும் நீக்கி விடுகிறது? என்பதை கவனிப்போம். கோடி கோடியான ஜனங்களை ஆளுகின்றவர்களால்கூட

அவர்கள் இவ்வுலகை விட்டு கடந்துச் செல்லும் காலம் வரும் போது தங்கள் ஜீவனை தங்கள் அதிகாரத்தினால் தக்க வைக்க இயலாது. உதவியற்ற பாலர்களைக் கொன்றக் கொடூரனும் மரித்தே ஆக வேண்டும். 'ஏரோது இறந்து விட்டான்' என்ற செய்தியைக் கேட்ட யோசேப்பும், மரியாளும் உடனே தங்கள் சொந்த ஊருக்கு சுகபத்திரமாய் திரும்பினார்கள்.

மனுஷர்கள் அளிக்கும் துன்பத்தினால் மெய்கிறிஸ்தவர்கள் ஒருபோதும் அசைக்கப்பட்டுவிடக்கூடாது. அவர்களுடைய எதிரிகள் பலவான்களாயும், அவர்கள் பலவீனராய் இருந்த போதிலும் அவர்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. "துன்மார்க்கனின் கெம்பீரம் குறுகினது" (யோபு 20:4) என்பதை அவர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் கர்த்தருடைய ஜனத்தை கொடூரமாய் துன்பப்படுத் தின பார்வோன்கள், நீரோக்கள் மற்றும் டையோகிளீசியன் களின் நிலை என்னவாயிற்று? இங்கிலாந்தின் இரத்த வெறிக் கொண்ட மேரி மற்றும் பிரான்ஸின் ஒன்பதாம் சார்லஸ் மன்னர்களின் விரோதம் எங்கே? அவர்கள் சத்தியத்தை தரை யோடுத் தரையாக நசுக்க எவ்வளவோ முயற்சிகளை மேற் கொண்டனர். ஆனால், சத்தியம் பூமியிலிருந்து மீண்டும் எழும்பி, இன்றும் ஜீவிக்கிறது; அவர்களோ மரித்து, பிரயோஜனமற்ற மனிதர்களாய் கல்லறையில் இருக்கிறார்கள். எந்த விசுவாசியின் இருதயமும் கலங்காதிருப்பதாக. கிறிஸ்துவின் சபைக்கு எதிராக வருகின்ற மலை போன்ற எந்தவொரு பிரச்சனையையும் மரணம் என்ற வல்லமையான சம்மட்டி தகர்த்துவிடும். ஏனெனில், 'கர்த்தர் என்றென்றும் ஜீவிக்கிறார்'. அவருடைய எதிரிகள் யாவரும் சாதாரண ஜனங்களே. சத்தியம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

தேவக்குமாரன் இவ்வுலகத்திலிருக்கும்போது வாசம் பண்ணிய ஸ்தலமானது, நமக்கு தாழ்மையின் பாடத்தை கற்றுத் தருகிறது. அவர் 'நாசரேத் என்னும் ஊரில்' தன்னுடைய தாயோடும், யோசேப்போடும் வாழ்ந்து வந்தார். கலிலேயாவி லுள்ள ஒரு சிறு நகரமே நாசரேத்து. பழைய ஏற்பாட்டில் முன்பு, குறிப்பிடப்பட்ட முக்கியத்துவம் அல்லாத எளிய, ஒதுக்குப்புற மான ஊர். அதி முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களான எபிரோன்,

சீலோ, கிபியோன், ராமா மற்றும் பெத்தேலை கர்த்தராகிய இயேசு கடந்து சென்று, நாசரேத்தைத் தெரிந்து கொண்டார். இதுவே தாழ்மையின் அடையாளம்.

நாசரேத்தில், கர்த்தராகிய இயேசு முப்பது வருடங்கள் வாழ்ந்தார். பாலர் பருவத்திலிருந்து குழந்தைப் பருவத்திற்கும், குழந்தை பருவத்திலிருந்து குமரப் பருவத்திற்கும், குமரப் பருவத் திலிருந்து முழு மனித நிலைக்குமாக கர்த்தராகிய இயேசு வளர்ந்தது இங்கு தான். முப்பது வருடங்களில் அவர் வாழ்ந்த நிலையைப் பற்றி மிகச் சொற்பக் காரியங்களையே நாம் அறிவோம். அவர் மரியாளுக்கும், யோசேப்புக்கும், கீழ்ப்படிந்து நடந்தார் என்று பார்க்கலாம். யோசேப்போடுகூட அவர் தச்சு வேலையில் ஈடுபட்டார் என்பதே அதற்குச் சிறந்த உதாரணம். நம்முடைய கர்த்தராகிய இரட்சகர் இப்பூவுலகில் வாழ்ந்த முப்பது வருடங்களும் தரித்திரர் மத்தியிலும், தனிமையிலுமாக வாழ்ந்தார் என்றறிவோம். மெய்யாகவே, இது அவரின் தாழ்மை யைக் குறிக்கிறது.

நம்முடைய இரட்சகரின் உதாரணத்தினின்று நாம் ஞானத்தைக் கற்றுக் கொள்வோமாக. நாம் இவ்வுலகில் 'பெரியக் காரியங்களை' நாடித் தேடுகிறோம்; இனி நாம் அவைகளைத் தேடாதிருப்போமாக (எரே 45 : 5). ஜனங்கள் சிந்திக்கிற பிரகார மாக இந்த சமுதாயத்தில் நாம் சம்பாதிக்கிற பட்டமோ, பதவியோ அல்லது வாழிடமோ அதிமுக்கியமல்ல. பேராசை யோடும், லௌகீகப் பற்றோடும், அகந்தையோடும் இருப்பது மிகப்பெரிய பாவம்; ஆனால், தரித்திரனாய் இருப்பது பாவமன்று.

நாம் எவ்வளவு பணம் வைத்திருக்கிறோம் அல்லது எங்கே வாழ்கிறோம் என்பதை விட நாம் கர்த்தருடைய பார்வையில் எப்படி இருக்கிறோம் என்பதே மேலானது, முக்கியமானது. நாம் மரிக்கும் போது, எங்கே போகப் போகிறோம்? நாம் பரலோகத்திலே நித்திய நித்தியமாய் வாழ்வோமா? நாம் கவனிக்க வேண்டிய பிரதானக் காரியங்கள் இவைகளே.

எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய இரட்சகரின் தாழ்மையை நாம் தினமும் பின்பற்றக்கடவோம். பாவங்களிலே

பழமையானதும், பொதுவானதும் அகந்தை. கிருபைகளிலே மிகச் சௌந்தரியமானதும், அரிதானதும் தாழ்மையாகும். நாம் தாழ்மையை வேண்டி உழைப்பவர்களாகவும், ஜெபிப்பவர்களாகவும் காணப்படுவோமாக. நம்முடைய புத்தி குறைவற்றதும், விசுவாசம் பெலவீனமாயும், பலன் குறுகினவர்களாய் இருந்தாலும், நாம் 'நாசரேத்தூரில் வாழ்ந்த' நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் சீடர்களாயிருப்போமாயின், எந்நிலையிலும் நாம் தாழ்மையுள்ளவர்களாய் காணப்பட வேண்டும்.

வேதப்பகுதி : மத்தேயு 3 : 1 – 12

தலைப்பு : யோவான் ஸ்நானனின் ஊழியம்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முன்னோடியான யோவான்ஸ்நானனின் ஊழியத்தை இவ்வசனங்கள் விவரிக்கின்றன. மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்கப்பட வேண்டிய ஊழியம் இது. யோவான்ஸ்நானன் அளித்த தாக்கத்தைப் போல மிகச் சில பிரசங்கியாளர்களே அளித்துள்ளனர்."அப்பொழுது எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய்" (மத் 3:5), "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்" (யோவான் 5 : 35) என்கிற புகழ்ச்சியை சபைக்கு தலையாகிய கிறிஸ்துவிடமிருந்து பெற்றவன் இவனையன்றி வேறொருவருமில்லை. "ஸ்திரீகளுக்குள்ளே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் போல சிறந்தவன் ஒருவனுமில்லை" என்று ஆத்துமாக்களின் அதிபதியாகிய கிறிஸ்துவே அவரைக் குறித்து அறிக்கையிட்டுள்ளார். நாம் தொடர்ந்து அவருடைய ஊழியத்தின் விசேஷ அம்சங்களைப் பார்ப்போம்.

யோவான்ஸ்நானன் மிகத் தெளிவாக பாவத்தைக் குறித்து பிரசங்கித்தார். ஒவ்வொருவனும் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு கொண்டிருக்கக் கூடிய '**மனந்திரும்புதலின்**' முழுமையான அவசியத்தை அவன் போதித்தான்; நற்கனிகளினாலே மனந்திரும்புதல் அறியப்பட வேண்டும் என்று அவன் போதித்தான். மேலும், சபையோடுள்ள வெளிப்புறமான ஐக்கியத்திலும், வெளிப்புறமான சலுகைகளிலும் நிலைத்திராதிருங்கள் என ஜனங்களை அவன் எச்சரித்தான்.

இவ்வகையான போதனையே நம்மெல்லாருக்கும் அவசியமானது. இயற்கையாகவே, நாம் ஆத்மீகக் காரியங்களில் மரித்த

வர்களாய் குருடரும், நித்திரை அடைந்தவர்களாயும் இருக்கிறோம்; ஒரு முறையான கிறிஸ்தவத்தைக் கொண்டிருப்பதில் திருப்தியடைந்து, அனுதினமும் சபைக்குச் செல்வதினால் இரட்சிக்கப்படுவோம் என்று நம்மை நாமே முகஸ்துதி செய்வதில் பிரியப்படுகிறோம்; '**மனந்திரும்பாவிட்டால்**' அழிந்து போவோம் என்ற செய்தி நமக்குக் கொடுக்க வேண்டியது அவசியம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து யோவான் ஸ்நானன் வெளிப்படையாக பேசினார். "என்னிலும் வல்லவர்" உங்கள் மத்தியில் வரப்போகிறார் என்று ஜனங்களுக்கு போதித்தார். வருகிறவர் ராஜா; இவர் பணிவிடைக்காரனே அன்றி வேறொருவருமில்லை. இவர் 'தண்ணீரினால் மாத்திரம் ஞானஸ்நானம்' கொடுக்கிறார்; ஆனால் வருகிறவரோ பாவங்களை நீக்கி, இவ்வுலகை ஒரு நாள் நியாயந்தீர்க்கிறவராய் 'பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்' கொடுப்பார்.

மனிதனுக்கு தேவையான இன்றியமையாத போதனை இதுவே. நாம் நேரிடையாக கிறிஸ்துவிடம் அனுப்பப்படுவது அவசியம். சபையிலுள்ள ஐக்கியத்தில் தரித்திருந்து, சடங்குகளை கிரமமாய் அனுசரித்து, ஸ்தாபிக்கப்பட்ட ஊழியத்தின் மீது நாம் அக்கறை உள்ளவர்களாய் இருப்பதில் ஏற்கெனவே நாம் குறைவுபடத் துவங்கிவிட்டோம். விசுவாசத்தினால் கிறிஸ்துவோடு இருக்க வேண்டிய ஐக்கியத்தின் அவசியம் நமக்குச் சொல்லப்பட வேண்டும். ஏனெனில், அவரே இரக்கம், கிருபை, ஜீவன் மற்றும் சமாதானத்தின் கன்மலையாய் இருக்கிறார்; நம்முடைய ஆத்துமாக்களை குறித்து நாம் ஒவ்வொருவரும் அவரோடு தனிப்பட்ட உறவு வைத்திருக்க வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் பற்றி நாம் அறிந்திருப்பது என்ன? நாம் அவரிடமிருந்து என்ன பெற்றுள்ளோம்? போன்ற வினாக்களிலே நம்முடைய இரட்சிப்பு இணைக்கப்பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியைக் குறித்து யோவான் ஸ்நானன் தெளிவாகக் கூறியுள்ளார். பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தைக் குறித்து அவர் அதிகமாய் பிரசங்கித்தார். இப்படிப்பட்ட ஞானஸ்நானத்தை மனுஷர்களுக்கு அளிப்பது

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகத்துவமான பணி என்று அவர் போதித்தார்.

இவ்வகை போதனை நமக்கு மிகவும் அவசியம். பாவ மன்னிப்பு மட்டும் இரட்சிப்பிற்கு தேவையானது அல்ல என்று நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. மற்றொரு காரியமும் உண்டு. அது என்னவெனில், பரிசுத்த ஆவியினால் நம்முடைய இருதயங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும். நமக்குள் கிறிஸ்துவின் செயல்பாடும், பரிசுத்த ஆவியின் செயல்பாடும் இருக்க வேண்டும். நமக்காக கிறிஸ்துவின் இரத்தத்தினால் சம்பாதித்த பரலோகத்திற்கான அந்தஸ்து மட்டும் போதாது. ஆனால், கிறிஸ்துவின் ஆவியினால் பரலோக ஆயத்தம் நமக்குள் உருவாக்கப்பட வேண்டும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் அனுபவத்தை நாம் உணரும்வரை நாம் ஒருபோதும் ஓய்ந்திருக்கக்கூடாது. தண்ணீர் முழுக்கு ஒரு சிறந்த சிலாக்கியம்; ஆனால், அதே வேளை, நாம் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுள்ளோமா என்று பார்ப்பது அவசியம்.

கல்நெஞ்சும், விசுவாசியாத ஜனங்களுக்கும் உண்டாகும் பயங்கரமான ஆபத்தைக் குறித்து யோவான்ஸ்நானன் தெளிவாக கூறுகிறார். தன் போதகத்தைக் கேட்ட ஜனங்களுக்கு 'வரவிருக்கிற கோபாக்கினையைக்' குறித்தும், பதரெல்லாம் ஒருநாள் அவியாத அக்கினியிலே சுட்டெரிக்கப்படும் என்றும் போதித்தார்.

மேலும், இந்தப் போதனை ஓர் ஆழமான சத்தியத்தை உள்ளடக்கியுள்ளது. நாம் மனந்திரும்புகிறோமா, இல்லையோ, நாம் நேரிடையாக எச்சரிக்கப்படுவது அவசியம்; பரலோகத்தைப் போல் நரகமும், அக்கிரமக்காரருக்கு நித்திய தண்டனை உள்ளது போல், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நித்திய வாழ்வும் உண்டென்று நாம் ஞாபகமூட்டப்படுவது அவசியம். நாம் கர்த்தருடைய கிருபை மற்றும் அன்பைக் குறித்து பேசுகிறோம். அதே வேளை அவருடைய பரிசுத்தம், நீதியைச் சொல்ல நாம் மறந்து விடக்கூடாது. இந்தக் காரியத்தில் நாம் கவனமாயிருக்க வேண்டும். கர்த்தரின் பயங்கரத்தைப் பின்னடக்கி வைப்பது மெய்யான இரக்கமன்று. மனந்திரும்பாத எல்லா ஜனங்களும் என்றென்றுமாய் அழிந்து போகக்கூடிய நரக ஆக்கினையின் கீழ்

இருக்கிறார்கள் என்று போதிப்பது அவசியமும், நன்மையான துமாயிருக்கிறது.

கடைசியாக, மெய் விசுவாசிகளின் பாதுகாப்பைக் குறித்து யோவான்ஸ்நானன் பேசுகிறார். கிறிஸ்துவின் வருகையின் நாளின் போது அவருடைய ஜனங்களாகிய 'கோதுமையை' ஒன்றாய் கூட்டி தமது களஞ்சியத்திலே சேர்ப்பார் என்று அவர் போதித்தார்.

மனித இனத்திற்கு தேவையான போதனைகளில் இதுவும் ஒன்று. இன்னும் தங்கள் சரீரங்களில் இருந்து, பொல்லாத உலகத்தில் வாழ்ந்து, அடிக்கடி சாத்தானால் சோதிக்கப்படுகிற விசுவாசிகளுக்கு ஊக்கம் அவசியம். இயேசு ஒருபோதும் அவர்களை விட்டு விலகுவதுமில்லை, அவர்களைக் கைவிடுவது மில்லை என்று அவர்களுக்கு அடிக்கடி நினைவூட்டப்படுவது அவசியம். மேலும், இந்த வாழ்வின் முடிவுபரியந்தம் அவர்களை பத்திரமாய் வழிநடத்தி, அவர்களுக்கு நித்திய மகிமையை அளிப்பார். அவர்கள் கோபாக்கினையின் நாளில் மறைக்கப் பட்டு, பேழைக்குள் நோவா இருந்ததுபோல அவர்களும் பத்திர மாகக் காக்கப்படுவார்கள்.

இக்காரியங்கள் யாவும் நம் இருதயங்களின் ஆழத்தில் பதிய வேண்டும். தவறான போதனைகளின் நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இந்த மெய்யான ஊழியத்தின் சிறப்பம் சங்களை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. யோவான்ஸ்நா னனைப் போன்ற ஊழியர்கள் இருந்தால், கிறிஸ்துவின் சபை எவ்வளவு அதிகமாய் களிகூரும் என்பதை நாம் சிந்திக்கக்க டவோம்.

வேதப்பகுதி : மத்தேயு 3 : 13 – 17

தலைப்பு : இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைக் குறித்தத் தொகுப்பு இங்கே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே அவருடைய ஊழியத்தின் முதல் படியாகும். யூத மத குருக்கள் தங்கள் பணிகளை ஏற்றெடுக்கும்போது, தண்ணீரினால் கழுவப்பட்டார்கள் (யாத் 29:4). நம்முடைய பிரதான ஆசாரியன் தன்னுடைய சிறப்பான பணியை இவ்வுலகில் நிறைவேற்றும்படி ஆரம்பிக்கும்போது பகிரங்கமாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். இவ்வசனங் களில் முதலாவது நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், ஞானஸ்நான சடங்கிற்கு அளிக்கப்பட்ட மேன்மை. கர்த்தராகிய இயேசு தாமே பங்கெடுத்த இந்தச் சடங்கை நாம் குறைவாக மதிப்பிடக் கூடாது; சபையின் தலையாகிய கிறிஸ்துவே இந்தச் சடங்கிற்குத் தன்னை ஒப்புவித்தபடியால், வளருகின்ற கிறிஸ்த வர்களின் பார்வையில் இது அதிக மேன்மையுள்ளதாயிருக்க வேண்டும்.

ஞானஸ்நானத்தைக் காட்டிலும் மதத்திலுள்ள சில விஷயங்கள் அதிகப்படியான தவறுகளை எழுப்புகிறது; அவைகளில் சில வேலியிடப்படவும், பாதுகாக்கப்படவும் வேண்டியது அவசியம். இரண்டு பொதுவான எச்சரிக்கைகளால் நம்முடைய மனதை பாதுகாப்பது அவசியம்.

ஒருபுறம், ஞானஸ்நானத் தண்ணீருக்கு மூடநம்பிக்கையான முக்கியத்துவம் அளிப்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையா யிருக்கக்கடவோம். தண்ணீர் மாய சக்தியைப் போல் செயல்ப டும் என நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஞானஸ்நானம் பெற்ற எல்லா மனுஷரும் ஞானஸ்நானம் பெறுகின்ற அத்தருணத்தில் தாமே கர்த்தருடைய கிருபையை பெற்றுக் கொள்கின்றனர் என்று நாம் எண்ணக் கூடாது. ஞானஸ்நானம் பெற

வருகிறவர்கள் யாவரும் சமமான உரிமையையும், பலனையும் அடைகிறார்கள். மேலும், அவர்கள் யாவரும் விசுவாசத்தோடும், ஜெபத்தோடும் வருகிறார்களோ அல்லது கவனயீனமாய் வருகி றார்களோ அது விஷயமன்று என்ற கருத்து வெளிப்படையான வேத போதனைகளுக்கு முரணானது.

மறுபுறம், நாம் ஞானஸ்நான சடங்கை கனயீனம் பண்ணு வதைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். இச்சடங் கானது சபை மக்கள் முன்பு வெளியரங்கமாய் அனுசரிக்கப்பட வேண்டும். ஏனெனில், கிறிஸ்துவானவரால் நியமிக்கப்பட்ட இந்த சடங்கை மேற்சொன்ன முறையில் அநுசரியாதிருப்பது ஞானஸ்நான சடங்கையே கனயீனப்படுத்துவதாய் இருக்கும். மேலும் ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபைக்குள் புதிதாய் இணைக்கப்படுகின்ற ஒவ்வொரு அங்கத்தவனும் (இளைஞனோ அல்லது முதிர்வயதானவேனா) கிறிஸ்தவ ஐக்கியத்தை உற்சா கத்தோடு பலப்படுத்த வேண்டும் என்றும், ஜெபிக்கிற கூட்டத் தார் இன்னும் அதிக ஊக்கத்தோடு ஜெபிக்க வேண்டும் என்றும் இந்த சடங்கு அறிவுறுத்துகின்றது. ஞானஸ்நானமும், கிருபையும் பிரிக்க முடியாதபடி ஒன்றிணைக் கப்பட்டிருப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது தேவனின் ஆசீர்வாதம் பெற நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஜெபிப்பதும்.

இரண்டாவதாக, இவ்வசனங்களில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தனித்துவமும், பயபக்தியுமான சூழலில் ஞானஸ்நானம் பெற்றார். இவ்வுலகம் இருக்கும்வரை இப்படிப்பட்ட ஞானஸ் நானம் இனி ஒருபோதும் நடைபெறாது.

ஆசீர்வதிக்கப்பட்ட திரித்துவத்தின் மூன்று நபர்களின் பிரசன்னமும் அங்கு இருந்ததாக நமக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. தேவக்குமாரன், மனுஷ சாயலில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். பரிசுத்த ஆவியாகிய தேவனும் புறாவைப் போல் இறங்கி, அவர்மீது வந்தார்; பிதாவாகிய தேவனும், வானத்திலிருந்து பேசினார். ஒரே வார்த்தையில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படையான பிரசன்னம் இருந்தது. கிறிஸ்துவின் பணியானது ஆசீர்வதிக்கப்பட்ட

திரித்துவத்திலுள்ள மூன்று நபர்களின் நித்திய ஆலோசனையின் விளைவே என்ற பகிரங்க அறிக்கையே இந்நிகழ்ச்சி. படைப்பின் ஆரம்பத்தில் ‘நாம் மனுஷனை உண்டாக்குவோம்’ என்று சொன்ன திரித்துவம்தான் சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் நாம் மனிதனை காப்போம் என்றும் உரைத்தது.

நம்முடைய கர்த்தரின் ஞானஸ்நானத்தின் போது ‘வானத்தி லிருந்து ஒரு சத்தம் உண்டாகி’ என்று சொல்லக் கேட்டோம். ‘வானங்கள் திறக்கப்பட்டு’ வார்த்தைகள் கேட்கப் பட்டது. இது அதிமுக்கியத்துவம் நிறைந்த அற்புதமாகும். சீனாய் மலையில் கட்டளைக் கொடுக்கப்பட்டபோது வானத்தில் இருந்து உண்டான சத்தமேயன்றி வேறொரு சத்தமும் உண்டாகவில்லை என்று நாம் வாசித்திருக்கிறோம். இரண்டு நிகழ்வுகளும் புதுமை யான முக்கியத்துவம் படைத்தவை. நம் பரலோகத்தின் தேவனுக்கு இவ்விரண்டு தருணங்களும் கனத்திற்குரியவை களாய் தோன்றியுள்ளது. “தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த் தைகளுமாவன”(யாத் 20:1) சுவிசேஷம் மற்றும் கட்டளையின் முன்னுரையில் கர்த்தர் தாமே பேசினார்.

“இவர் என்னுடைய நேசக்குமாரன்; இவரில் பிரியமாயிருக் கிறேன்” என்ற பிதாவாகிய தேவனுடைய வார்த்தைகள் விசேஷமான ஆழமான கருத்துக்களை தெரிவிக்கிறது. இவ்வச னங்களில் அவர் அறிக்கையிடுவது என்னவெனில் மீட்பின் பணியை நிறைவேற்ற தெய்வீக இரட்சகராக எல்லா நித்தியத் திலிருந்தும் முத்திரிக்கப்பட்டவர் கர்த்தராகிய இயேசுவே; பிதாவுக்கும், மனிதனுக்கும் இடையேயான மத்தியஸ்தர் இவரே என்று அவர் அங்கீகரிப்பதாக பிரகடனம் பண்ணுகிறார்; தொலைந்துபோன ஆதாமின் குடும்பத்தினருக்கு சமாதானக் காரணராய், பதிலாளாய், பரிகாரியாய் மற்றும் மீட்கப்பட்ட ஜனங்களின் தலைவராகவும் இயேசு இருப்பதில் பிதாவாகிய தேவன் திருப்தியடைகிறாரென்று உலகிற்கு வெளிப்படுத்துகி றார். அவருள் தம்முடைய பரிசுத்த ‘வேதம் முக்கியப்படுத்தப் பட்டு மகிமையுள்ளதாகக்’ காண்கிறார் (ஏசாயா 42:21). அவர் மூலமாய் இவர் நீதியுள்ளவராயும், தேவனற்றவர்களுக்கு நீதிபரனாயும் இருக்கிறார் (ரோமர் 3:26).

இவ்வார்த்தைகளை நாம் கவனமாய் சிந்திப்போம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் தங்கள் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படி அர்ப்பணித்து தஞ்சம் வேண்டி அவரிடம் வருகிற யாவருக்கும் ஆவிக்குரிய ஆரோக்கியமான உணவையும், சமாதானம், சந்தோஷம், ஆறுதல் மற்றும் தேறுதலையும் இவ்வார்த்தைகள் அளிக்கிறது. தமக்குள்ளாக பாவிகளாக இருந்த போதிலும், கர்த்தருடைய பார்வையில் நீதிமான்களாய் எண்ணப்படுபவர்கள் இதில் சந்தோஷப்படலாம். பிதாவாகிய தேவன் அவர்களை தம்முடைய பிரியமான குமாரனின் அங்கத்தவர்களாகக் கருதுகிறார். ''தம்முடைய குமாரனின் மூலம்'' அவர்களை மாசற்றவர்களாய்க் காண்கிறார் (எபே 1:6).

வேதப்பகுதி : மத்தேயு 4 : 1 – 11

தலைப்பு : சோதனை

நம்முடைய கர்த்தருடைய ஊழியத்தில் அவருடைய ஞானஸ்நானத்திற்கு பிறகு புனித மத்தேயுவினால் குறிக்கப்பட்டுள்ள முதல் சம்பவம், அவருடைய சோதனையாகும். இது ஆழமான, மறைபொருள் நிறைந்த பகுதியாகும்; விளக்கப்படுத்த முடியாத அநேகக் காரியங்கள் இந்த சரித்திரத்தில் அடங்கியுள்ளது; அதே வேளையில், சரித்திரத்தின் துவக்கத்திலுள்ள தெளிவான, நடைமுறை பாடங்களை நாம் அறிந்து, கீழ்ப்படிய வேண்டும்.

முதலாவதாக, சாத்தான் எனும் மெய்யான வல்லமையுள்ள எதிரி நமக்கு இருக்கிறான் என்று நாம் கற்றுக் கொள்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சோதிப்பதில்கூட அவன் பயப்படவில்லை. தேவனுடைய சொந்த குமாரனை அவன் மூன்று முறை சோதித்தான்; நமது இரட்சகரும் ''சாத்தானால் சோதிக்கப்பட்டார்''.

ஆதியிலே, இவ்வுலகிற்குள் பாவத்தைக் கொண்டு வந்தவன் இந்த பிசாசானவனே. யோபுவை விரக்தி அடையச் செய்தவனும், தாவீதை ஏமாற்றியவனும், பேதுருவை விழத்தள்ளினவனும் இவனே. இவனை வேதம் '**மனுஷகொலைபாதகன்**', '**பொய்யன்**' மற்றும் '***கர்ச்சிக்கிற சிங்கம்***' என்றழைக்கிறது *(யோவான் 8:44, 1பேதுரு 5:8).* *நம்முடைய ஆத்துமாக்களுக்கு எதிரான அவனுடைய விரோதம் ஒருபோதும் தூங்குவதுமில்லை, உறங்குவதுமில்லை. ஆண்களையும், பெண்களையும் அழித்து, அவர்களை நரகத்திற்கு இழுக்க வேண்டும் என்ற ஒரே பணியில் சுமார் 6000 க்கும் மேற்பட்ட ஆண்டுகளாக ஜனங்களை துன்பப்படுத்துகிறவனும் இவனே. மனித ஞானத்திற்கு அப்பாற்பட்ட தந்திரமும், சூட்சமமும் நிறைந்த இவனே,*

அடிக்கடி “ஒளியின் தூதனாகக்” காணப்படுகிறான் (2கொரி 11:14).

தினமும் அவனுடைய தந்திரங்களுக்கு எதிராக நாம் விழிப் புள்ளவர்களாய் இருந்து ஜெபிக்கக்கடவோம். ஒருபோதும் நம் கண்களுக்குத் தென்படாமலும், அழியாமலும் இருந்து நாம் எங்கெல்லாம் வாழ்கிறோமோ அங்கெல்லாம் நமது அருகில் இருந்து, நாம் போகின்ற இடமெல்லாம் நம்மோடுகூட வருகின்ற சாத்தானைப் போன்ற மோசமான எதிராளி வேறு யாரும் இல்லை. நம்மிடையே பொதுவாய் காணப்படுகின்ற சாத்தானைக் குறித்த அறிவீனமான கேலிப் பேசுகின்ற பழக்கத் தைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நாம் மீட்கப்படுவோமாயின், நம்முடைய சரீரங்களை சிலுவையில் அறைந்து, உலகத்தை மேற்கொள்பவர்களாய் மட்டும் காணப்ப டாமல், “சாத்தானை எதிர்ப்பவர்களாய்” இருக்க வேண்டும் என்பதை நாம் நினைவு கூற வேண்டும்.

இரண்டாவதாக, நாம் கற்றுக் கொள்வது என்னவெனில், சோதனையை நாம் ஒரு அதிசயமான காரியமாக எண்ணக் கூடாது.“எஜமானைப் பார்க்கிலும் வேலைக்காரனும், முதலாளியைப் பார்க்கிலும் சீடனும்” விசேஷித்தவன் அல்ல. சாத்தான் கிறிஸ்துவினிடம் வந்ததினால், கிறிஸ்தவர்களிடமும் அவன் வருவான்.

விசுவாசிகள் மிகச் சரியாய் இந்த கூற்றை மறந்து விடுவார்கள் என்பதை அவர்கள் நினைவில் கொண்டால் நலமாயிருக்கும். தீய எண்ணங்கள் அவர்களுடைய மனதிலிருந்து எழும்புவதை அவர்கள் அடிக்கடி காணலாம். அதை அவர்கள் மெய்யாய் வெறுக்கிறோம் என்று கூறுகிறார்கள். சந்தேகங்கள், கேள்விகள் மற்றும் பாவமான கற்பனைகள் அவர்களிடமிருந்து எழும்பி னாலும், அவர்களின் உள்ளான மனிதன் அவர்களை எதிர்க்கி றான். ஆயினும், இவைகள் அவர்களுடைய சமாதானத்தை குலைக்காமலும், அவர்களுடைய சௌகரியங்களைக் கொள்ளையிடாமலும் இருக்கக்கடவது. சாத்தான் இருக்கிறான் என்பதை நினைவில் கொண்டு, அவர்கள் அருகில் அவன் இருக்கிறான் என்பதைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்பட

வேண்டாம். சோதிக்கப்படுவது பாவமல்ல; ஆனால், சோதனையினால் ஈர்க்கப்பட்டு, நம் இருதயங்களில் அதற்கு இடமளிப்பதைக் குறித்தே நாம் பயப்பட வேண்டும்.

மூன்றாவதாக, நாம் கற்றுக் கொள்வது என்னவெனில், சாத்தானை எதிர்ப்பதற்கு நாம் பயன்படுத்த வேண்டிய சிறப்பான ஆயுதம், பரிசுத்த வேதாகமம். நம் எதிராளி மூன்று முறை நம்முடைய கர்த்தருக்குச் சோதனைகளை அளித்தான். “வேதத்தில் எழுதியிருக்கிறதே” என்ற காரணத்தை வைத்தே மூன்று முறையும் அவனுடைய சோதனை மேற்கொள்ளப் பட்டது.

“கர்த்தருடைய வார்த்தை” ஆவியின் பட்டயமாய் இருக்கிறது; நாம் வேதத்தை அக்கறையோடு வாசிப்பவர்களாக இருக்க வேண்டியதற்கு இதுவும் ஒரு காரணமாகும். நமது வேதத்தை நாம் முதன்மையான ஆயுதமாக பயன்படுத்தாவிட் டால் நாம் ஒருபோதும் நல்ல போராட்டத்தை போராட முடியாது. “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது”(சங்119:105). வேதத்தின் வெளிச்சத்திலே நாம் நடவாவிட்டால், நாம் ஒருபோதும் இராஜாவின் பரலோகத்திற்குச் செல்ல முடியாது. நம்மிடையே போதுமான வேதவாசிப்பு இல்லையெனில் நாம் பயப்பட வேண்டும். வேதத்தை வைத்திருப்பது மட்டும் போதாது; நாம் மெய்யாய் அதை வாசித்து, ஜெபிக்க வேண்டும். அது நம் வீடுகளில் இருப்பதினால், நமக்கு ஒரு நன்மையும் அளிக்காது. அதிலுள்ள பகுதிகள் நமக்கு பரீட்சயமாயும், அதின் போதனை கள் நம் மனதிலும், நினைவிலும் தங்கி இருக்க வேண்டும். வேத அறிவு ஒருபோதும் உள்ளுணர்வினால் வருவது கிடையாது. அதை கடினமான, முறையான, கவனமான, விழிப்புள்ள, தினவாசிப்பின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக செலவிடும் நேரத்தையும், கஷ்டத்தையும் குறித்து, நாம் முறுமுறுக்கிறோமா? நாம் அப்படிச் செய்தால், கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்கு நாம் இன்னும் தகுதியானவர்கள் அல்ல.

இறுதியாக, நாம் இப்பகுதியில் இருந்து கற்றுக் கொள்வது என்னவெனில், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

எத்தகைய இரக்கத்தின் இரட்சகராய் இருக்கிறார் என்று பார்க்கலாம். "ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார்" (எபி 2:18).

இயேசுவின் இரக்கம் சத்தியம். அது விசுவாசிகளுக்கு உன்னதமான காரியமாய் இருக்கிறது. அது இக்கட்டான வேளைகளில் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறது. விசுவாசிகளுடைய சோதனைகளை உணர்ந்து, அவர்களுடைய எல்லா ஆத்மீக வியாகுலங்களிலும், துணை நிற்கிற வல்லமையுள்ள சிநேகிதர் பரலோகத்தில் அவர்களுக்கு உண்டு என்பதை அவர்கள் நினைவுகூற வேண்டும். கர்த்தருடைய இரக்கத்தையும், நன்மையையும் விசுவாசியாதபடி எப்போதும் சாத்தானால் அவர்கள் சோதிக்கப்படுகிறார்களா? இயேசுவும் அப்படியே சோதிக்கப்பட்டார். அவர்கள் கர்த்தரின் கருணையை தவறாக நினைத்துக் கொண்டு, பாவஞ்செய்யும்படி சோதிக்கப்படுகிறார்களா? இயேசுவும் அப்படியே சோதிக்கப்பட்டார். ஒரு மிகப் பெரிய போலியான ஆதாயத்திற்காக மறைவான பாவம் செய்ய எப்போதும் அவர்கள் சோதனைக்குட்படுத்தப்படுகிறார்களா? இயேசுவும் அப்படியே சோதிக்கப்பட்டார். தவறு செய்வதற்கு ஏதுவாக வேதத்தை தவறான முறையில் பயன்படுத்தும்படி சோதிக்கப்படுகிறார்களா? இயேசுவும் அவ்வாறே சோதிக்கப்பட்டார். சோதிக்கப்படுகின்ற ஜனங்களுக்கு தேவையான ஒரே இரட்சகர் இவரே. அவர்களுடைய எல்லாக் கஷ்டங்களையும், அவருக்கு முன்பாக அறிக்கையிட்டு, அவரின் உதவியை நாடி அவரிடம் ஓடி வரக்கடவர்கள். அப்படி வரும்போது, அவருடைய செவி கேட்பதற்கு எப்போதும் ஆயத்தமாயும், அவருடைய இருதயம் உணர்வதற்கு எப்போதும் ஆயத்தமாயும் இருக்கிறது என்பதை அவர்கள் கண்டுக் கொள்வார்கள். அவர் அவர்களுடைய துக்கங்களையும் அறிந்து கொள்வார். நாமனைவரும் நம்முடைய அனுபவங்களின் மூலம் இரக்கத்தின் இரட்சகரின் மதிப்பை அறிந்து கொள்வோமாக! வஞ்சகமும், சூதும் நிறைந்த இவ்வுலகில் அவருடைய இரக்கத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை. கிறிஸ்தவத்தை வெறுத்து, இவ்வுலக வாழ்வில் மட்டும் சந்தோஷத்தை நாடித் தேடுபவர்கள், மெய்யான ஆறுதலை இழக்கிறார்கள் என்பதை குறித்த எண்ணமற்றவர்களாய் இருக்கிறார்கள்.

வேதப்பகுதி : மத்தேயு 4 : 12 – 25

தலைப்பு : இயேசுவின் ஊழிய ஆரம்பமும், முதல் சீடர்களின் அழைப்பும்

மனுஷர்களின் மத்தியிலான நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஊழிய ஆரம்பத்தை இவ்வசனங்கள் நமக்குக் கொடுக்கிறது. இருளும், அறியாமையும் நிறைந்த ஜனங்களின் மத்தியில் தன்னுடைய பணியை அவர் ஆரம்பிக்கிறார்; தனக்கு துணையாளர்களாகவும், சீடர்களாகவும் இருக்க மனிதர்களை அவர் தெரிந்து கொள்கிறார்; தன்னுடைய ஊழியத்தை அற்புதங்களினால் உறுதி செய்து, 'சீரியா எங்கும்' அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, வெகுத் திரளான ஜனங்கள் அவரைப் பின்பற்றும்படி அவர்களை தம்மிடமாக இழுத்துக் கொண்டார்.

நம்முடைய ஆண்டவர் தம்முடைய வல்லமையான பணியை ஆரம்பித்த விதத்தை நாம் கவனிப்போம். "அவர் பிரசங்கம் பண்ணத் தொடங்கினார்".

பிரசங்கியாளரைப் போன்ற மேன்மையான மரியாதைக்குரிய பணி வேறொன்றுமில்லை; மனுஷர்களின் ஆத்துமாக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடிய பணியும் வேறொன்றுமில்லை. தேவக்குமாரன் இந்த பணி செய்வதைக் குறித்து அவமானப்படவில்லை. இந்த பணிக்காகவே தன்னுடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களை அவர் நியமித்தார். இந்த பணிச் செய்வதற்காகவே பரிசுத்த பவுல் தன்னுடைய வயோதிபக் காலத்தில் தீமோத்தேயுவின் கவனத்தை விசேஷமாக திசை திருப்பினார்; தன்னுடைய கடைசி மூச்சு இருக்கும் வரை 'கர்த்தருடைய வசனத்தை' போதிக்கும்படி அவனுக்குக் கட்டளையிட்டார் (2தீமோ4:2). ஆத்துமாக்களின் மனந்திரும்புதலுக்கும், உபதேசத்திற்கும் தேவையான முதன்மையான கருவியாக இதனை ஆண்டவர் எப்போதும் பயன்படுத்த விரும்புகிறார். பிரசங்கமானது மேன்மைப்படும் நாட்களே சபையின் சந்தோஷமான

நாட்கள்: பிரசங்கமானது குறைவாக மதிப்பிடப்படுங் காலங்களே சபையின் இருண்ட காலமாகும். சபையில் ஏறெடுக்கக் கூடிய பொதுவான ஜெபங்களையும், சடங்குகளையும் நாம் மரியாதை செய்து, பயபக்தியுடன் அவைகளை அனுசரிக்கக்கடவோம்; அதே வேளையில், இவைகளை நாம் பிரசங்கத்திற்கு மேலான ஸ்தானத்தில் வைக்காதிருக்க எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம்.

ஆண்டவராகிய இயேசு இவ்வுலகத்திற்கு பகிரங்கப்படுத்திய முதல் கொள்கையை நாம் கவனிப்போம். அவர் ‘‘**மனந்திரும்புங்கள்**’’ என்று பிரசங்கித்தார். சிறந்த அஸ்திபாரக் கற்களில் ஒன்றாகிய மனந்திரும்புதலின் அவசியமானது கிறிஸ்தவத்தின் அடித்தளத்தில் தங்கியுள்ளது. இந்த சத்தியமானது விதி விலக்கின்றி எல்லா மனித குலத்திற்கும் அதிக அழுத்தத்துடன் போதிக்கப்பட வேண்டும். உயர்ந்தவனோ, தாழ்ந்தவனோ, ஏழையோ, பணக்காரனோ எல்லாரும் பாவஞ்செய்து, தேவனுக்கு முன்பாக குற்றவாளிகளாய் இருக்கிறோம்; அவர்கள் அனைவரும் காப்பாற்றப்பட வேண்டுமானால், அனைவரும் மனந்திரும்பி மனமாறுதல் அடைய வேண்டியது அவசியம். இந்த சத்தியமானது அதற்கேற்ற மரியாதையை இன்னும் பெறவில்லை. மெய்யான மனந்திரும்புதல் ஒரு சாதாரண விஷயமன்று; பாவத்தினின்று முழுமையான மனமாறுதலையும், பாவத்திற்கான கர்த்தருக்கேற்ற துக்கத்தை காண்பிக்கக் கூடிய மாற்றத்தை உடையதாயும், மனம் வருந்திய பாவ அறிக்கையையும், பாவ பழக்கங்களிலிருந்து முற்றிலுமான விடுதலையையும், எல்லா பாவத்தையும் நிரந்தரமாக வெறுக்கக் கூடிய மனமாற்றத்தையும் கொண்டிருப்பதே மெய்யான மனந்திரும்புதலாகும். கிறிஸ்துவுக்குள்ளான மீட்பும், விசுவாசத்தின் பிரிக்க முடியாத இணையான மனந்திரும்புதலும் இதுவே ஆகும். இந்த கொள்கைக்கு நாம் அதிக மதிப்பளிப்போம். ‘‘தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும்’’ (அப்20:21) தொடர்ச்சியாக பிரசங்கிக்கப்படாத எந்த கிறிஸ்தவ போதனையும் ஆழமானது அல்ல.

கர்த்தராகிய இயேசு தமக்கு சீஷர்களாய் இருக்கும்படி தெரிவு செய்த மனிதர்களின் தரத்தை நாம் கவனிப்போம்.

அவர்கள் வாழ்க்கையில் ஏழ்மையும், தாழ்மையுமான அந்தஸ்தையும் உடையவர்கள். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் ‘‘மீனவர்கள்’’.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சமயமானது கற்றவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் மட்டுமே உரியதாயிராமல், இவ்வுலகிலுள்ள அனைவருக்கும் உரியதாய் இருக்கிறது. விஷேசமாக உலகத்திலுள்ள பெரும்பாலானவர்கள் எப்போதும் ஏழ்மையானவர்களே. வறுமையும், படிப்பறிவும் இல்லாத பல்லாயிரக்கணக்கான பாமர மக்களை தற்பெருமை மிகுந்த தத்துவ ஞானிகளின் கவனத்தினின்று விலக்கினாலும், கிறிஸ்துவின் உன்னதமான பணியில் இருந்து, ஒருவரும் விலக்கப்படமுடியாது. மனுஷன் தாழ்மையுள்ளவனா? அவன் தன் பாவங்களை உணர்கிறானா? அவன் கிறிஸ்துவின் சத்தத்தைக் கேட்டு, அவரை பின்பற்ற மனமுள்ளவனாய் இருக்கிறானா? அவன் இப்படிப்பட்டவனாய் இருப்பானேயாகில், அவன் தரித்திரருக்கெல்லாம் தரித்திரனாய் இருந்தாலும், பரலோக ராஜ்யத்தில் அதி உன்னத நிலையில் காணப்படுவான். புத்திக் கூர்மை, பணம் மற்றும் அந்தஸ்து இவை அனைத்தும் இருந்தும் கிருபை இல்லாவிட்டால் ஒன்றுமில்லை.

கிறிஸ்தவம் வானத்திலிருந்து உண்டானதாய் இருக்க வேண்டும், இல்லாவிடில், இப்போது இருப்பதைப் போல அது ஒருபோதும் வளர்ந்து பூமியனைத்தும் பரவியிருக்க முடியாது. நாஸ்திகர்கள் இவ்வாதத்திற்கு பதிலளிக்க முயற்சித்தால் அது வீண்; ஏனெனில், இதற்கு பதிலளிக்க முடியாது. பணக்காரர், உயர்ந்தோர் மற்றும் கல்விமான்களை முகஸ்துதி செய்கின்ற சமயமன்று கிறிஸ்தவம். மனித இருதயத்தின் மாம்சீக இச்சைகளுக்கும், விருப்பங்களுக்கும் அங்கீகாரம் அளிக்காத சமயம் இது. சொத்து, அந்தஸ்து அல்லது அதிகாரமில்லாத ஏழ்மையான மீனவர்களை, முதல் போதகர்களாகக் கொண்ட சமயம் இது. இப்படிப்பட்ட சமயம் கர்த்தரிடமிருந்து வராதிருந்தால், இவ்வுலகத்தை தலைகீழாக மாற்றியிருக்க முடியாது. ஒருபுறம், ரோம பேரரசர்களும், புறஜாதி மதகுருக்களையும் கொண்ட அற்புதமான கோயில்களை பார்க்கலாம். மறுபுறம், சுவிசேஷத்தையுடைய கல்வியறிவற்ற ஏழை மக்கள் சிலரை பார்க்கலாம்.

இப்படிப்பட்ட சமமற்ற இருதரப்பினர் எங்கேயாவது இணைக் கப்பட்டுள்ளனரா? இருப்பினும், பலவீனன் பலவானாயும், பலவான் பலவீனனாயும் மாற்றப்படுகிறான். புறஜாதி சமயம் வீழ்ந்து, கிறிஸ்தவம் அதின் இடத்தைப் பிடித்தது. கிறிஸ்தவம், நிச்சயமாகக் கர்த்தருடையதே.

இறுதியாக, அற்புதங்களின் பொதுவான குணாதிசயங்களி னால், நம்முடைய ஆண்டவர் தன்னுடைய ஊழியத்தை உறுதிப் படுத்தினார் என்று பார்க்கலாம். இங்கே கூட்டத்தில் செய்யப் பட்ட அற்புதங்கள் சொல்லப்படுகிறது. அதன் பின்பு, அவைகள் தனித்தனியே விவரிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். மேலும், அவைகளினுடைய குணாதிசயம் என்ன? அவைகள் இரக்கம் மற்றும் கருணையின் அடிப்படையிலான அற்புதங்கள். நமது ஆண்டவர் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார்.

இந்த அற்புதங்கள் அனைத்தும் நம்முடைய கர்த்தருடைய வல்லமையை நமக்கு போதிக்கிறது. வியாதியஸ்தர்களை தொட்டு குணப்படுத்தியும், தம்முடைய வார்த்தையினால் பிசாசுகளை துரத்துகிறவருமாகிய அவர் மூலமாய் பிதாவினி டத்தில் வருகிற யாவரையும் அவர் இரட்சிக்க வல்லமையுள் ளவராய் இருக்கிறார். அவர் சர்வ வல்லமை உள்ளவர்.

ஆத்மீக பரிகாரியாகிய நமது ஆண்டவரின் திறமைக்கு இந்த அற்புதங்கள் யாவும் மாதிரிகளாயும், சின்னங்களாயும் இருக்கின் றன. இவரால் குணப்படுத்த முடியாத சரீர பிரகாரமான நோய் கள் எதுவும் இருந்ததில்லை. அதே வேளையில், எல்லா விதமான ஆத்மீக நோய்களையும், இவர் குணப்படுத்த வல்லவர். இவரால் சுகப்படுத்த இயலாத நொறுங்கின உள்ளம் எதுவும் கிடையாது. இவரால் குணப்படுத்த முடியாத மனக் காயங்கள் எதுவும் கிடை யாது. பாவத்தினால் வீழ்ந்தவர்களாய், நொறுக்கப்பட்டு, காயப் பட்டு, வாதையினால் பீடிக்கப்பட்டிருக்கிற நம் அனைவரையும் இரத்தத்தாலும், ஆவியினாலும், முழுமையாக்க வல்லவராய் இருக்கிறார். நாம் அவரிடத்தில் அணுக வேண்டுவதே முக்கியம்.

கிறிஸ்துவின் இருதயத்தை இந்த அற்புதங்கள் நமக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறது. அவர் ஒப்பற்ற இரக்கத்தின் இரட்சகர் ஆவார். அவரிடம் வந்த ஒருவரையும் அவர் புறம்பே தள்ளினதில்லை; எப்பேற்பட்ட அருவருப்பான நோயுடைய வனையும் அவர் புறம்பே தள்ளினதில்லை; எல்லாருடைய விண்ணப்பங்களையும் கேட்கக் கூடிய செவியையும், எல்லாருக் கும் உதவி செய்ய வல்ல கரங்களையும், எல்லாருக்காகவும் பரிதபிக்கக் கூடிய இருதயத்தையும் அவர் உடையவராய் இருக்கிறார். அவருடைய இரக்கத்திற்கு ஒப்பானது எதுவும் இல்லை. அவருடைய மனதுருக்கங்கள் தவறுவதில்லை.

கர்த்தராகிய ‘இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்’ என்பதை நாம் அனைவரும் நினைவு கூற வேண்டும் (எபி 13:8). உயர பரலோகத்தில், கர்த்தருடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கக் கூடிய இவர், மாறுதலுக்கு உட்பட்டவரல்ல. 2000 ஆண்டுகளுக்கு முன்பாக, அவர் எப்படி காப்பாற்ற வல்லவரோ, சேர்த்துக் கொள்ள மனமுள்ளவரோ, உதவி செய்ய ஆயத்தம் உள்ளவரோ, அதேபோல அவர் இன்றும் வல்லவராய் இருக்கிறார். பின்னர் நாம் அவருக்கு முன்பாக நம்முடைய தேவைகளை சொல்லலாம் அல்லவா? அப்படியே செய்வோமாக. ஏனெனில், அவர் எல்லாவிதமான நோய்களை யும், வியாதிகளையும் குணமாக்க வல்லவர்.

வேதப்பகுதி : மத்தேயு 5 : 1 – 12

தலைப்பு : மலை பிரசங்கம்

5 ஆம் அதிகாரம் முதல் 7 ஆம் அதிகாரம் வரை அடங்கியுள்ள வசனங்களை பொதுவாக மலை பிரசங்கம் என்றழைக்கிறோம். இவ்வசனங்கள் அனைத்தும் சிறப்பான போதனைகளை உள்ளடக்கி உள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

கர்த்தராகிய இயேசுவின் ஒவ்வொரு வார்த்தையும் வளருகின்ற கிறிஸ்தவர்களுக்கு மிகவும் விலையேறப்பட்டதாகும். அது பிரதான மேய்ப்பனின் சத்தமாகவும், சபைக்கு தலையானவரும், பிரதான போதகரின் குரலாகவும், எஜமானின் அதிகார குரலாகவும் இருக்கிறது. அவருடைய வார்த்தையானது "ஒருபோதும் மனுஷர் பேசினவிதமாய் இருக்கவில்லை". அவராலே நாம் அனைவரும் நியாயத்தீர்ப்பின் நாளிலே நியாயந்தீர்க்கப்படுவோம்.

கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட ஜனங்களாய் இருக்க வேண்டும் என்று அறிய வேண்டுமா? கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட குணாதியசங்களை குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்று அறிய விரும்புகிறீர்களா? கிறிஸ்துவின் சீடனாயிருக்கிறவனின் வெளிப்படையான நடக்கையும், உள்ளான பழக்கமும் எப்படியிருக்க வேண்டுமென்று அறிய விருப்பமா? அப்படியானால், 'மலை பிரசங்கத்தை' நாம் அடிக்கடி படிக்கக்கடவோம். ஒவ்வொரு வாக்கியத்தையும் நாம் அடிக்கடி கவனமாய் ஆராய்ந்து, அதன்படி நாம் வாழக்கடவோம். பிரசங்கத்தின் துவக்கத்திலே 'பாக்கியவான்' என்று குறிப்பிடப்பட்டவர்களைக் குறித்து நாம் அடிக்கடி சிந்திப்பது அவசியம். பிரதான ஆசாரியனால் ஆசீர்வதிக்கப்பட்ட யாவரும் பாக்கியவான்களே!

கர்த்தராகிய இயேசு "ஆவியில் எளிமையுள்ளவர்களை பாக்கியவான்கள்" என்று அழைக்கிறார். தாழ்மையான, எளிய

மனதுடைய மற்றும் சுயதாழ்ச்சியுடையவர்களை அவர் குறிப்பிடுகிறார்; கர்த்தருடைய பார்வையில் அவர்களுடைய சொந்த பாவ நிலையைக் குறித்ததான ஆழமான நம்பிக்கையைக் கொண்டவர்களை அவர் குறிப்பிடுகிறார்; மேலும், "அவர்களுடைய பார்வையில் அவர்கள் ஞானிகளோ, ஜாக்கிரதை உள்ளவர்களோ அல்ல". அவர்கள் 'ஐசுவரிய சம்பத்துகளினால்' நிறைந்தவர்கள் அல்ல; தங்களுக்கு 'எதுவும் தேவையில்லை' என்று அவர்கள் அலப்புவதில்லை; அவர்கள் தங்களை "நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும், நிர்வாணிகளுமாய்" கருதுகி றார்கள். அப்பேற்ப்பட்டவர்களை பாக்கியவான்கள் என்கிறார். எனவே, கிறிஸ்தவத்தின் முதல் வார்த்தை "**தாழ்மை**" ஆகும். நாம் கீழானதிலே ஆரம்பித்தால், மேலானவற்றிலே கட்டப்படுவோம் (வெளி3:17).

துயரப்படுகிறவர்களை "பாக்கியவான்கள்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். தங்களுடைய பாவங்களுக்காக வருந்தி, அனுதினமும் தங்களுடைய குற்றங்களுக்காக விசனப்படுகிறவர்களையே அவர் இங்கு குறிப்பிடுகிறார். இந்த பூமியில் வேறெதைக் காட்டிலும் தங்களுடைய பாவங்களை குறித்து அதிகமாக விசனப்படுகிறவர்கள் இவர்களே: அதினுடைய நினைவே அவர்களுக்கு விசனத்தை அளிக்கிறது; அதினுடைய பாரம் அவர்களால் சகிக்கக்கூடாதது. இப்படிப்பட்டவர்கள் பாக்கியவான்கள்! "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவியும், நறுங்குண்ட இருதயமுமே" (சங் 51:17). ஒரு நாள் அவர்களுடைய கண்ணீர் யாவும் துடைக்கப்பட்டு, "அவர்கள் ஆறுதல் அடைவார்கள்".

சாந்தகுணமுள்ளவர்களை "பாக்கியவான்கள்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். பொறுமையும், திருப்தியும் உடைய ஆவி உள்ளவர்களையே அவர் இங்கு அர்த்தப்படுத்துகிறார். அவர்களுக்கு அளிக்கப்படும் குறைவான மரியாதையை மனமுவந்து சகித்துக் கொள்கிறார்கள். மனக்கசப்பின்றி தீங்கனுபவிப்பவர்களும், எதிர்க்க விருப்பமற்றவர்களுமாயிருக்

கிறார்கள். உவமையில் சொல்லப்பட்ட லாசருவைப் போல அவர்கள் நற்காரியங்களை பெறுவதற்கு காத்திருப்பதில் திருப்தி யுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பாக்கி யவான்கள்! காலச் சக்கரத்தில், அவர்கள் எதையும் இழந்து போகிறவர்கள் அல்ல. அவர்கள் ஒருநாள் "பூமியை அரசாளு வார்கள்" (வெளி 5:10).

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் "பாக்கியவான்கள்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தருடைய சித்தத்திற்கு தங்களை முழுமையாக ஒப்புவிக்க விரும்புகிறவர்களையே அவர் குறிக்கிறார். அவர்கள் பரிசுத்தமாய் இருக்க வாஞ்சிப்பதைப் போல, பணக்காரனா கவோ, ஐசுவரியவானாகவோ அல்லது கல்விமானாகவோ இருக்க விரும்பவில்லை. இப்படிப்பட்டவர்கள் யாவரும் பாக்கியவான்களே! அவர்கள் ஒருநாளில் நிறைவானவர்களாக இருப்பார்கள். "அவர்கள் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவார்கள்" (சங் 17:15).

இரக்கமுள்ளவர்களை "பாக்கியவான்கள்" என்று கர்த்தரா கிய இயேசு அழைக்கிறார். பிறருக்காக மனதுருக்கம் உடைய வர்களையே அவர் குறிப்பிடுகிறார். பாவத்தினாலோ அல்லது கவலையினாலோ துயரப்படுகிறவர்கள் யாவருக்காகவும் அவர்கள் பரிதபிக்கிறவர்களாயும், அவர்களுடைய துயரங்க ளைக் குறைக்க அன்பினாலான விருப்பமுடையவர்களாயும். "நற்கிரியைகளைச்" செய்பவர்களாயும், நற்கிரியைகளைச் செய்ய முயற்சிப்பவர்களுமாயும் இருப்பார்கள் (அப் 9 : 36). இப்பேற்பட்ட யாவரும் பாக்கியவான்களே! இந்த வாழ்க்கை யிலும், இனிவரும் வாழ்க்கையிலும் அவர்கள் மிகுதியான பலனையடைவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களை "பாக்கியவான்கள்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். வெளிப்புறமான சீர்திருத்தலையல்ல, உள்ளான பரிசுத்தத்தை நாடுகிறவர்க ளையே அவர் இங்கு அர்த்தப்படுத்துகிறார். அவர்கள் வெளிப் புறமான சமய வழிபாட்டில் திருப்தியடையாமல், உள்ளான மனுஷனோடும், ஆவியோடும் கர்த்தரை தொழுது கொள்ளவும்,

குற்றம் நீங்கிய மெய் மனசாட்சியை எப்பொழுதும் கொண்டி ருக்கவே அவர்கள் முயற்சி செய்வார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் யாவரும் பாக்கியவான்கள். மனிதன் தன் இருதயத் தினால் அறியப்படுவான். "மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார்" (1சாமு16:7). ஆவியின் சிந்தை அதிகம் உள்ளவன் எவனோ, அவன் கர்த்தரோடு நிறைவான ஐக்கியம் கொள்வான்.

சமாதானம் பண்ணுகிறவர்களை "பாக்கியவான்கள்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி, தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும், வீட்டிலும், நாட்டிலும், பூமியின் மீது சமாதானத்தையும், தருமக் காரியங்களையும் ஸ்தாபிக்க முயற்சிக்கிற யாவரையும் அவர் குறிப்பிடுகிறார். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுத லாய் இருக்கிறது" என்கிற சுவிசேஷ வாக்கினை போதிப்பதின் மூலம் எல்லா மனிதர்களையும் ஒருவருக்கொருவர் நேசிக்கும் படி செய்ய முயற்சிக்கிற யாவரையும் அவர் குறிக்கிறார் (ரோமர் 13:10). இப்படிப்பட்ட யாவரும் பாக்கியவான்களே! தேவக் குமாரன் பூமிக்கு முதல்முறை வந்தபோது துவங்கியதும், இரண்டாம் முறை பூமிக்கு அவர் வரும்போது அதை நிறைவ டையச் செய்யப் போகிறதுமான அதே மேலான பணியையே இவர்களும் செய்து வருகிறார்கள்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களை "பாக்கியவான்கள்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். மெய் கிறிஸ்தவர் களாய் வாழ முயற்சி செய்ததினாலே அவர்கள் பரிகசிக்கப்பட்டு, கேலி செய்யப்பட்டு, நிந்திக்கப்பட்டு, துஷ்பிரயோகம் பண்ணப் பட்டார்கள். இப்படிப்பட்ட யாவரும் பாக்கியவான்களே! அவர்களுடைய எஜமான் பானம் பண்ணின அதே பாத்திரத் திலே அவர்களும் பானம் பண்ணுகிறார்கள். இப்பொழுது, அவரை இவர்கள் மனுஷர்களுக்கு முன்பாக அறிக்கை செய்கி றார்கள். கடைசி நாளில், அவர் இவர்களை தமது பிதாவிற்கும், தூதர்களுக்கும் முன்பாக அறிக்கை செய்வார். "அவர்களுடைய பலன் பெரிது".

மலை பிரசங்கத்தின் ஆரம்பத்திலே இப்படிப்பட்டதான

எட்டு அடிக்கற்களை கர்த்தராகிய இயேசு நாட்டுகிறார். நமக்கு முன்பதாக, எட்டு சிறப்பான சோதிக்க வல்ல சத்தியங்கள் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றையும் சரியான முறையில் அறிந்து, ஞானத்தை நாம் கற்றுக் கொள்வோமாக!

இவ்வுலகத்தின் அடிப்படை கொள்கைகள் எப்படி நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவின் கொள்கைகளுக்கு முற்றிலுமாய் முரணாயிருக்கிறது என்று நாம் கற்றுக் கொள்வோமாக. அதை நிராகரிப்பது வீண்; அவை இரண்டும் ஒன்றுக் கொன்று சரியான அளவிலே எதிராயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு போற்றுகின்ற அதே குணாதிசயங்களை இந்த உலகம் இகழ்கிறது; அகந்தை, புத்தியின்மை, குரோதம், உலகபற்று, சுய நலம், சம்பிரதாயங்கள் மற்றும் அன்பின்மையால் நிரம்பியிருக் கிற இவ்வுலகை கர்த்தராகிய இயேசு கண்டிக்கிறார்.

வளர்ந்து வருகின்ற கிறிஸ்தவர்களின் பழக்கத்திலிருந்து கிறிஸ்துவின் போதனை எவ்வளவாக மாறுபட்டுள்ளது என்று நாம் கற்றுக் கொள்வோம். ஆலயங்களுக்கும், சிற்றாலயங்க ளுக்கும் செல்லுகின்ற ஆண்கள், பெண்களின் மத்தியில், இன்றைய தினம் நாம் வாசிக்கக் கேட்ட மாதிரியின்படியே வாழ முயற்சிப்பவர்களை நாம் எங்கே கண்டு கொள்ளலாம்? அநேக ஞானஸ்நானம் பெற்ற ஜனங்கள் புதிய ஏற்பாடு என்ன கட்டளையிடுகிறது என்பதை அறியாத அறிவில்லாதவர்களாய் இருப்பதற்கு அநேகக் காரணங்கள் உண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா விசுவாசிகளும் எப்படி பரிசுத்தமாயும், ஆவியின் சிந்தை உடையவர்களாய் இருக்க வேண்டும் என்று நாம் கற்றுக் கொள்வோம். மலை பிரசங்கத்தின் தகுதிக்கு, கீழான எந்தவொரு தகுதியையும் அவர்கள் ஒருபோதும் தங்கள் குறிக்கோளாகக் கொள்ளக் கூடாது. கிறிஸ்தவம் என்பது விசேஷமாக ஒரு நடைமுறை சமயமாகும். இதன் வேரும் ஆதாரமுமாக ஆழமான கொள்கை களைக் கொண்டிருந்தாலும், பரிசுத்த வாழ்வே எப்போதும் இதன் கனிகளாக இருக்க வேண்டும். இயேசு அழைத்த "பாக்கியவான்கள்" யாரென்று நமக்கு நாமே அடிக்கடி சிந்தித்துக் கொண்டால், பரிசுத்த வாழ்வு என்றால் என்ன? என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

வேதப்பகுதி : மத்தேயு 5 : 13 – 20

தலைப்பு : மெய் கிறிஸ்தவர்களின் குணங்கள் மற்றும் கிறிஸ்துவின் போதனைக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையேயான தொடர்பு

முதலாவதாக, மெய் கிறிஸ்தவர்கள் கடைப்பிடித்து இவ்வு லகில் நிர்வகிக்கக் கூடிய குணங்களை இந்த வசனங்கள் நமக்கு கற்றுக் கொடுக்கிறது.

மெய் கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் "**உப்பை**" போல இருக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு நமக்கு கூறுகிறார். "**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்**". மற்றெந்த பொருளைக் காட்டிலும், உப்பானது தன்னிலே தானே தனிச்சுவை உடையது. பிறபொருட்களுடன் அது கலக்கும்போது, கெட்டுப்போவதில் இருந்து அவைகளை பாதுகாக்கிறது. தன்னோடு கலக்கின்ற எல்லாவற்றோடும் தன்னுடைய சுவையின் ஒரு பகுதியை பகிர்ந் தளிக்கிறது. அதினுடைய சாரத்தை அது இழக்காதவரை அது பொருட்களைப் பாதுகாக்கிறது. நாம் மெய் கிறிஸ்தவர்களா? அப்படியானால், நாம் நம்முடைய பணியையும், கடமைகளை யும் இங்கு காண்போம்!

மெய் கிறிஸ்தவர்கள் இவ்வுலகிற்கு வெளிச்சத்தை போல் இருக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு நமக்கு கூறுகிறார். "நீங்கள் உலகிற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்". இருளிலிருந்து முழுமையாக வேறுபட்டு இருக்க வேண்டியது வெளிச்சத்தின் தன்மையாகும். ஓர் இருட்டறையில் உள்ள மிகச் சிறிய தீப்பொறி கூட உடனே தென்பட்டுவிடும். படைக்கப் பட்ட எல்லா படைப்பிலும் வெளிச்சமே மிக பயனுள்ளது. அது பொலிவிக்கிறது; அது வழிநடத்துகிறது; அது உற்சாகமளிக்கிறது. இதுவே முதலில் உண்டாக்கப்பட்டது (ஆதியாகமம் 1:3). இது இல்லாவிடில், உலகமானது இருண்ட சூன்யமாய் இருந்திருக் கும். நாம் மெய் கிறிஸ்தவர்களா? அப்படியாயின், நம்முடைய நிலையையும், கடமைப் பொறுப்பையும் உணர்ந்தவர்களாய் செயல்படுவோம்.

நாம் மெய் கிறிஸ்தவர்களாய் இருப்பின் நம்முடைய குணாதிசயத்தில், வித்தியாசமான மற்றும் சிறப்பான அம்சங்கள் இருக்க வேண்டும் என்று இவ்விரண்டு உருவகங்களும் நமக்கு கற்றுத் தருகிறது. நாம் கிறிஸ்துவினால் அவருடைய பிள்ளைகளாக மாற்றப்பட்டிருந்தால், நாம் மற்றவர்களைப் போல சிந்திக்காமலும், வாழாமலும், வாழ்க்கை முழுவதையும் வீணடிக்காமலும் இருக்க இவை உதவும். நமக்கு கிருபை இருக்கிறதா? நாம் கிருபை பெற்றிருக்கிறோமா? -அப்படியானால், அது காணப்பட வேண்டும். நாம் ஆவியை உடையவர்களா? அப்படியிருப்பின், கனிகள் இருக்க வேண்டும். நமக்கு மீட்கும் சமயம் இருக்கிறதா? அப்படியாயின், உலகத்தை மட்டும் சிந்திக்கிறவர்களுக்கும், நமக்கும் இடையே பழக்க வழக்கங்களில், விருப்பங்களில், சிந்தனைகளில் வித்தியாசம் காணப்பட வேண்டும். இதிலிருந்து கிறிஸ்தவம் என்பது வெறுமனே ஞானஸ்நானம் பெற்று திருச்சபைக்குப் போவதை விட மேலானது என்று மிகத் தெளிவாகத் தெரிகிறது. இருதயம் மற்றும் வாழ்க்கை, விசுவாசம் மற்றும் பயிற்சி ஆகிய சிறப்பம்சங்களை "**உப்பு**" மற்றும் "**வெளிச்சம்**" மூலமாக நமக்கு உணர்த்துகிறார். நாம் மீட்கப்பட்டிருப்போமானால், இவ்வுலகத்தானைப் போல் இல்லாமல், தனி மனிதனாய் துணிவுடன் செயல்பட வேண்டும்.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் போதனைக்கும், பழைய ஏற்பாட்டிற்கும் இடையேயான தொடர்பைக் குறித்து, இவ்வசனங்கள் நமக்கு போதிக்கிறது.

வழக்கத்திலிருக்கிற தவறுகளை பற்றியதான மிக முக்கியமான பகுதி இது. இக்கூற்றை ஒரு விசேஷமான வாக்கியத்தின் மூலம் நமது ஆண்டவர் தெளிவுபடுத்துகிறார். "நியாயப்பிரமாணத்தை ஆனாலும், தீர்க்கதரிசனங்களை ஆனாலும், அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல. நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" என்று அவர் கூறுகிறார். இவை குறிப்பிடத்தக்க வார்த்தைகளாகும். யூதர்களின் இயல்பான மதப்பற்றினை திருப்திப்படுத்தும் வகையில் இவை சொல்லப்பட்டபோதும், ஆழமான முக்கியத்துவத்தை பெற்றிருந்தது. இவ்வுலகம் இருக்கும்வரை இவ்வார்த்தைகள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில், பழைய மற்றும் புதிய

ஏற்பாடுகளின் சமயங்களும் ஒன்றே என்று இவை சாட்சி அளிக்கிறது.

ஒருநாள் இரட்சகர் ஒருவர் தோன்றுவார் என்று தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட வாக்கியங்களை நிறைவேற்றும்படி கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். மோசேயின் எல்லா பலிகளிலும் குறிப்பிடப்பட்ட பாவத்திற்கான சிறந்த பரிகார பலியாக கர்த்தராகிய இயேசு சம்பிரதாயங்களின் கட்டளைகளை நிறைவேற்றும்படி வந்தார். நாம் ஒருபோதும் கீழ்ப்படிய முடியாத ஒழுக்கச் சட்டத்திற்கு தன்னை முற்றிலுமாக கீழ்ப்படுத்தி பூரணமாகக் கீழ்ப்படிந்தவராய் அதை நிறைவேற்றும்படி வந்தார். நமக்கும், பிதாவுக்கும் இடையே ஏற்பட்ட பிளவிற்கான கிரயத்தை நாம் ஒருபோதும் செலுத்த முடியாதிருக்க, தம்முடைய பரிகார இரத்தத்தினாலே நம்முடைய கிரயத்தை அவர் செலுத்தினார். இவ்வனைத்து முறைகளிலும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை அவர் மேன்மைப்படுத்தி, அதனுடைய முக்கியத்துவத்தை முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிக தெளிவாக்கினார். அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார் (ஏசாயா 42:21).

"நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள்" பற்றியதான நமது ஆண்டவரின் வார்த்தைகளில் இருந்து ஆழமான ஞானப் பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம். அவற்றை நன்கு ஆராய்ந்து, அவைகளை நமது இருதயங்களிலே வைத்துக் கொள்ளக்கடவோம்.

முதலாவது, எங்காவது போலிக்கு இடமளித்து, பழைய ஏற்பாட்டை இகழ்வதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். வழக்கத்திலில்லாத, பழமையானதும், பிரயோஜனமற்றதுமான இந்த வேதபுத்தகத்தை தூக்கி எறிந்து விடுங்கள் என்று நம்மை ஏவுகிற மக்களுக்கு நாம் ஒருபோதும் செவிகொடுக்கக் கூடாது. பழைய ஏற்பாட்டின் சமயமே கிறிஸ்தவத்தின் வித்தாயிருக்கிறது. பழைய ஏற்பாடு சுவிசேஷத்தின் மொட்டாயும், புதிய ஏற்பாடு சுவிசேஷத்தின் மலர்ந்த மலராயும் இருக்கிறது. பழைய ஏற்பாடு சுவிசேஷத்தின் குறுத்தெலும்பாயும், புதிய ஏற்பாடு சுவிசேஷத்தின் முழு செவியாயும் இருக்கிறது. நிழலாட்டமாய் கண்ணாடியின் ஊடாக அநேகக் காரியங்களை பழைய

ஏற்பாட்டு விசுவாசிகள் கண்டிருந்த போதிலும், அவர்களனை வரும் அதே இரட்சகரை விசுவாசித்தும், நம்மைப் போலவே அதே ஆவியினாலே வழிநடத்தப்பட்டும் வந்தார்கள். இவைகள் சாதாரண காரியங்கள் அல்லவே. பழைய ஏற்பாட்டின் மீதான அறிவீனமான அலட்சியம் விசுவாசமின்மையை ஏற்படுத்தும்.

இரண்டாவது, நியாயப்பிரமாணத்தின் பத்து கட்டளைகளை இகழ்வாகக் கருதுவதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்கக் கடவோம். சுவிசேஷத்தினால் இது ஒதுக்கி வைக்கப் பட்டதென்றோ அல்லது கிறிஸ்தவர்கள் இதில் கற்றுக் கொள்வதற்கு ஒன்றுமில்லை என்றோ நாம் ஒரு கணம் கூட நினைத்து விடக்கூடாது. கிறிஸ்துவின் வருகையானது பத்து கட்டளைகளின் நிலையை சிறிதளவுக் கூட மாற்றவில்லை. அப்படியானால், அது உயர்த்தப்பட்டு, அவர்களுடைய அதிகாரம் நிலைநிறுத்தப் பட்டிருக்கும் (ரோமர்3:31). நியாயப்பிரமாணத்தின் பத்து கட்டளைகள் சரி, தவறு என்கிற கர்த்தரின் நித்திய அளவுகோலாய் இருக்கிறது. இதினால், பாவத்தை குறித்ததான அறிவையும், கிறிஸ்துவின் தேவையின் அவசியத்தை ஆவியினாலே மனுஷர்களுக்கு வெளிப்படுத்தி, அவரிடமாக அவர்களை வழிநடத்தவும், தம்முடைய ஜனங்களின் பரிசுத்த வாழ்விற்கு அவைகளின் ஆட்சியும், வழிநடத்துதலும் வேண்டும் என்று கிறிஸ்து குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாணமானது "மகிமையுள்ள சுவிசேஷத்திற்கு" ஒப்பாயிருக்கிறது. அது நம்மை மீட்காது, அதினால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். ஆனாலும், ஒருபோதும் நாம் அதை இகழ்வாகக் கருதக்கூடாது. நியாயப்பிரமாணமானது குறைவாக மதிப்பிடப்பட்டால், அது அறிவீனமான ஊழியத்தின் அடையாளமாகவும், ஆரோக்கியமற்ற சமய நிலைப்பாட்டையும் குறிப்பதாய் இருக்கும். "மெய் கிறிஸ்தவன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாய் இருக்கிறான்" *(ரோமர் 7:22).*

கடைசியாக, சுவிசேஷமானது, தனிப்பட்ட பரிசுத்த வாழ்வின் தரத்தை குறைப்பதாயும் மற்றும் யூதனை போன்று கிறிஸ்தவனும் தன்னுடைய அனுதின வாழ்வில் கண்டிப்புடன் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் இல்லாததாயும் இருக்கிறது என்ற கருத்தைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். இது நம்மிடையே, பொதுவாகக் காணப்படுகின்ற மிகப் பெரியத்

தவறாகும். காரியம் இப்படியாய் இருக்கும் பட்சத்தில், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான் நீதிமானாக்கப்படும்படிக்கு பழைய ஏற்பாட்டை தனது வழிகாட்டியாகக் கொள்ளாமல் வேறொன்றினாலும் பயனடையான். நாம் அதிக வெளிச்சம் கொண்டிருந்தால், நாம் அதிகமாய் தேவனை நேசிக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் நம்முடைய முழுமையான பூரணமான மன்னிப்பை தெளிவாகக் கண்டால், நாம் அவருடைய மகிமைக்காக உள்ளத்தின் ஆழத்திலிருந்து உழைக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் செய்ததைப் பார்க்கிலும் நம்மைமீட்க கிறிஸ்து செய்த விலைக்கிரயம் மிகச் சிறந்தது என்பதை நாம் அறிவோம். கெத்செமனே மற்றும் கல்வாரியில் என்ன நடந்தது என்பதை நாம் வாசித்திருக்கிறோம். மேலும், இன்னொன்று வரக் காத்திருப்பது போல அவர்கள் அதை தெளிவற்ற மங்கலான நிலையில் கண்டார்கள். நாம் ஒருபோதும் நம்முடைய கடமைப் பொறுப்பை மறந்து விடக்கூடாது. தனிப்பட்ட பரிசுத்த வாழ்வின் குறைந்த தரத்திலே திருப்தியுள்ளவனாய் காணப்படும் கிறிஸ்தவன் கற்றுக் கொள்ள வேண்டிய அநேகக் காரியங்கள் உண்டு.

வேதப்பகுதி : மத்தேயு 5 : 21 – 37
தலைப்பு : நியாயப்பிரமாணத்தின் ஆன்மீக இயல்பு மூன்று உதாரணங்களினால் மெய்ப்பிக்கப்படுகிறது

வேதாகமத்தின் அனைத்து வாசகர்களின் நெருங்கிய கவனத்தை இவ்வசனங்கள் ஈர்க்கின்றது. வேதத்தில் உள்ள கொள்கைகளின் சரியான புரிந்துக் கொள்ளுதல் கிறிஸ்தவத்தின் வேராயிருக்கிறது. “நான் நியாயப்பிரமாணத்தை அழிக்க வர வில்லை, நிறைவேற்றவே வந்தேன்” என்கிற தம்முடைய வார்த் தைகளை கர்த்தராகிய இயேசு முழுமையாக விளக்குகிறார். அவருடைய சுவிசேஷமானது நியாயப்பிரமாணத்தை மிகைப்ப டுத்தியும், அதினுடைய அதிகாரத்தை உயர்த்தியும் காட்டுகிறது என்று அவர் நமக்கு போதிக்கிறார். அவரால் விளக்கமளிக்கப் பட்ட நியாயப்பிரமாணமானது யூதர்கள் எண்ணியதற்கும் மேலான ஆத்மீக மற்றும் இதயத்தை ஆராய்ந்துப் பார்க்கின்ற விதியாகும். பத்துக் கட்டளைகளிலிருந்து மூன்று கட்டளை களை உதாரணங்களாக தெரிவு செய்ததின் மூலம் தமது கருத்தை அவர் மெய்பித்தார்.

ஆறாவது கட்டளையை அவர் விளக்கி தெளிவாக்குகிறார். நிஜத்தில் ஒருவரைக் கொலை செய்யாது இருக்கும் வரை கர்த்த ருடைய நியாயப்பிரமாணத்தின் இப்பகுதியை அப்படியே கைக் கொள்வதாக அவர்கள் எண்ணினார்கள். இதைக் காட்டிலும் அதனுடைய கோரிக்கைகள் ஆழமானது என்று கர்த்தராகிய இயேசு காண்பிக்கிறார். எல்லாவிதமான கோபம் மற்றும் உணர்ச்சி வசப்பட்ட வார்த்தைகளை விசேஷமாக காரணமின்றி பயன்படுத்துவதை இந்தக் கட்டளை கடிந்துக் கொள்கிறது. இதை நாம் நன்கு மனதில் குறித்துக் கொள்ள வேண்டும். நாம் யாரையும் கொலை செய்யாமல் முற்றிலுமாக குற்றம் அற்றவர்க ளாய் இருந்தாலும், நாம் ஆறாம் கட்டளையை உடைத்தக் குற்றத்திற்குள்ளாவோம்.

ஏழாவது கட்டளையை அவர் விளக்குகிறார். நம்முடைய

நடைமுறை வாழ்வில் நிஜமாக விபச்சாரம் செய்யாது இருக்கும் வரை அநேகர் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் இந்தப் பகுதியை கைக்கொள்வதாக கருதுகிறார்கள். நம்முடைய வெளிப்புறமான நடத்தை ஒழுக்கமாயும், சரியாயும் இருந்தா லும் கூட நம்முடைய சிந்தனைகளினாலும், இருதயங்களினா லும் மற்றும் கற்பனைகளினாலும் இந்தக் கட்டளையை நம்மால் மீற முடியும் என்று கர்த்தராகிய இயேசு போதிக்கிறார். கர்த்தருடைய பார்வையில் நம்முடைய செயல்களுக்கு அப்பாற் பட்ட சிந்தனைகள் மற்றும் பார்வைகள் கூட பாவமே. இச்சை யான கடைக்கண் பார்வை கூட பாவமாகும்.

அவர் மூன்றாம் கட்டளையை விளக்குகிறார். சத்திய பிரமாணங்களை நிறைவேற்றியும் பொய்யாணை இடாமலும் இருக்கும்வரை அநேகர் கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தின் இந்த பகுதியை கைக்கொள்வதாக கற்பனை செய்கிறார்கள். வீணான மற்றும் அற்பமான ஆணைகளெல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசு தடைசெய்கிறார். கர்த்தருடைய நாமத்தை பயன்படுத்தாத போதும், அவருடைய படைப்பின் பெயரால் ஆணையிட்டாலோ அல்லது மிகச் சிறப்பான தருணங்களைத் தவிர மற்ற சூழலில் கர்த்தருடைய பெயரை சாட்சியாக வைத்து ஆணை இடுவது மிகப் பெரிய பாவமாகும்.

இவை அனைத்தும் நமக்கு அநேகக் காரியங்களை கற்றுத் தருகிறது. இவை மிகச் சிறப்பான பிரதிபலிப்புகளை நம் மனதில் எழுப்ப வேண்டும். நம் இருதயத்தை ஆராய்ந்து பார்க்க இவை அழைக்கிறது. மேலும், இவை நமக்கு என்ன போதிக்கிறது?

கர்த்தருடைய அளவுக்கடந்த பரிசுத்தத்தை இது நமக்கு போதிக்கிறது. அவர் மனித கண்கள் காணாத குறைகளையும், குற்றங்களையும் காண்கிறவரும், மகா பரிசுத்தரும், பூரண சற்கு ணராயும் இருக்கிறார். அவர் நம்முடைய உள்நோக்கங்களை அறிவார்; அவர் நம்முடைய வார்த்தைகள், எண்ணங்கள் மற்றும் செயல்களை குறிக்கிறார்; “அவர் உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறார்” (சங் 51:6). அவர்கள் செய்வதைக் காட்டிலும் கர்த்தருடைய குணாதிசயத்தின் இப்பகுதியை அதிகமாய் அறிந்து கொள்வது அவர்களுக்கு நலமாய் இருக்கும். மனிதர்கள்

கர்த்தரை "இருக்கிறவராக" கண்டுக் கொண்டால், பெருமை, சுயநீதி மற்றும் கவனமின்மைக்கு அங்கு இடமிருக்காது *(1யோ 3:2).*

ஆத்மீகக் காரியங்களில் மனிதனுக்கு இருக்கும் அதிகப்படியான அறியாமையை இப்பகுதி நமக்கு போதிக்கிறது. அறிவற்ற யூதர்களைப் பார்க்கிலும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் குறிக்கோள்களை அறியாத பயபக்திக்குரிய ஆயிரமாயிரம் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் பத்து கட்டளைகளை நன்கு அறிவர்; "இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்" என்று கூறிய ஐசுவரிய வாலிபனைப் போல அவர்களும் கற்பனை செய்கிறார்கள் *(மத்19:20).* வெளிப்புறமான செயல்களினாலும், கிரியைகளினாலுமே அல்லாமல் வேறொன்றினாலும், ஆறாவது, ஏழாவது கட்டளைகளை மீற வாய்ப்பில்லை என்று அவர்கள் எண்ணினார்கள். எனவே, அவர்கள் சிறிய மதக் காரியங்களைக் கைக்கொள்வதில் பூரண திருப்தியுள்ளவர்களாயும், தங்களில் தாங்களே திருப்தியுள்ள வாழ்வை வாழ்ந்தார்கள். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை மெய்யாய் அறிந்து கொண்ட யாவரும் பாக்கியவான்களே!

நம்மை மீட்க கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவபரிகார இரத்தம் நமக்கு அதிகப்படியாக தேவை என்பதை இப்பகுதி நமக்கு போதிக்கிறது. இவ்வுலகத்திலுள்ள எந்த மனிதனாவது, மனுஷியாவது இப்பேற்பட்ட தேவனுக்கு முன்பாக நின்று "நான் குற்றமற்றவன்" என்று கூற முடியுமா? தன் விருப்பப்படியே வளர்ந்து, கர்த்தருடைய கட்டளைகளை ஆயிரத்தில் ஒரு முறைக் கூட மீறாத ஒருவன் உண்டோ? "அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" *(ரோமர் 3:10).* வல்லமையுள்ள மத்தியஸ்தர் நமக்கிராவிட்டால் நாம் ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்பு நாளன்று தண்டிக்கப்பட்டிருப்போம். நியாயப்பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தைக் குறித்ததான அறியாமையே இன்று அநேகர் சுவிசேஷத்தை மதிக்காமலும், தங்கள் சுயாதீன கிறிஸ்தவத்தின் மீது சுயதிருப்தி உள்ளவர்களாயும் இருக்க காரணம். கர்த்தருடைய பத்து கட்டளைகளில் உள்ள பரிசுத்தத்தையும், கண்டிப்பையும் அவர்கள் பார்க்கவில்லை; அப்படி பார்த்திருந்தால், அவர்கள் கிறிஸ்துவுக்குள் மீட்கப்படும்வரை அவர்களால் ஓய்ந்திருக்க முடியாது.

இறுதியாக, எல்லா பாவத் தருணங்களை தவிர்ப்பதின் மட்டற்ற முக்கியத்துவத்தை இப்பகுதி நமக்கு போதிக்கிறது. நாம் உண்மையாகவே பரிசுத்தராய் இருக்க விரும்பினால், நாம் "நம்முடைய நாவுகளினால் பாவஞ்செய்யாதபடிக்கு, நம்முடைய வழிகளை காத்து நடக்க வேண்டும்" *(சங் 39:1).* நாம் சண்டைகளையும் அபிப்பிராய பேதங்களையும் பெரிதாக எண்ணாமல், கவனமாக நடக்க வேண்டும். இல்லையெனில், அவை மிகப் பெரிய விபரீதங்களுக்கு நேராக நம்மை வழி நடத்தும், "சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்து விடுகிறது போலிருக்கும்" *(நீதி17:14).* நம்முடைய சரீரத்தை சிலுவையிலறையவும், சரீர அங்கங்களை நிக்கிரகம் செய்யவும் நாம் உழைக்க வேண்டும். மேலும் எந்தவிதமான மதச்சடங்குகளையோ, தியாகத்தையோ அல்லது சரீர அசௌகரியங்களையோ நாம் அங்கீகரித்தாலும் ஒரு போதும் பாவஞ்செய்யக்கூடாது. நம்முடைய உதடுகளை கடிவாளமிட்டு காத்துக் கொண்டு, நம்முடைய வார்த்தைகள் மீது அதிக கவனமாய் இருக்க வேண்டும். நாம் இப்படி செய்வதினால், மனிதர்கள் நம்மை "துல்லியமானவர்கள்" என்று அழைப்பார்கள். அல்லது அவர்கள் விரும்பினால் நம்மை அதிக கண்டிப்பானவர்கள் என்றும் அழைப்பர். நாம் அசைக்கப்பட வேண்டியதில்லை. நாம் நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு கூறியதைச் செய்கிறோம், எனினும், நாம் இப்படி நடப்பதைக் குறித்து நாம் வெட்கப்பட வேண்டியது இல்லை.

வேதப்பகுதி : மத்தேயு 5 : 38 – 48
தலைப்பு : கிறிஸ்தவ அன்பின் கட்டளையை அறிவித்தல்

ஒருவர் மற்றொருவரோடுள்ள நடத்தைக்கான விதிகளை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு இங்கு கொடுக்கிறார். ஒருவன் தன் சக மனிதனை எவ்வாறு அறிந்து செயல்பட வேண்டும் என்று விரும்புகிறானோ, அவன் இவ்வசனங்களை அடிக்கடி தியானிக்க வேண்டும். இவைகள் பொன் எழுத்துக்க ளால் எழுதப்பட வேண்டியவை. இவை கிறிஸ்தவ எதிராளிகளி டமிருந்து போற்றுதலை பெற்றுள்ளது. இவைகளில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

மன்னிக்க முடியாத, பழிவாங்கும் மனமுள்ள ஆவியை போன்ற எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசு தடை செய்கிறார். “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்”. தீங்கிற்கு சினங்கொள்ளுகிற விருப் பம், பொல்லாங்கு செய்ய விரைந்து செல்லுதல், சண்டை பிடிக் கிறதும் சச்சரவு செய்கிறதுமான மனநிலை, நம்முடைய உரிமை களை உறுதி செய்வதிலுள்ள ஆர்வம், இவை அனைத்தும் கிறிஸ் துவின் சிந்தைக்கு முரணானது. இப்படிப்பட்ட மனநிலைகளில், இவ்வுலகம் ஒரு தீங்கையும் காணாது; ஆனாலும், அவைகள் கிறிஸ்தவனின் குணங்களாகாது. நம்முடைய எஜமான் கூறுகி றார், “தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்”.

உலகம் முழுவதும் அன்பு மற்றும் ஈகை மனம் கொண்டிருக்க வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு நமக்குக் கட்டளை யிடுகிறார். “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக் களைச் சிநேகியுங்கள்”. நாம் எல்லா விரோதங்களையும் விட்டு விட வேண்டும். நாம் தீமைக்கு நன்மை செய்யவும், சபிக்கிற வர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டும். அதுவுமல்லாமல், நாம் வார்த்தையில் மட்டும் அன்பாயிராமல், செயலில் அன்புள்ளவர்

களாய் இருக்க வேண்டும். இரக்கமும், நற்பண்புகளுடையவர் களாய் இருக்க வேண்டுமாயின், நம்மை நாமே வெறுத்து, சோத னைகளை சகிக்கக்கடவோம்; “ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரை பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ” என்று வேதம் கூறுகிறது. நாம் மற்றொருவனை காயப்படுத்தி, தீங்கு விளைவிக்காமல் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றிலும் நாம் சுயநலமற் றவர்களாய் இருக்க வேண்டும். மற்றவர்கள் என்னிடம் எப்படி நடந்து கொள்வார்கள்? என்ற சிந்தை நமக்கிராமல், கிறிஸ்து நான் என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறார்? என்ற சிந்தையே நம்மில் இருக்கக்கடவது.

முதல் பார்வையில், இப்படிப்பட்ட நடத்தையின் நிலையானது மிக உன்னதமான நிலையில் காணப்படும். ஆனால், நாம் ஒருபோதும் கீழான ஒன்றை குறிக்கோளாக வைப்பதில் திருப்தி அடையக்கூடாது. இப்பகுதியிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும்படி நமது ஆண்டவர் தந்துள்ள இரண்டு மகத்தான வாதங்களை நாம் கவனிப்போம். அவை ஆழமான கவனத்தை ஈர்க்க தகுதியுடையது.

முதலாவது, இங்கே பரிந்துரை செய்யப்பட்ட ஆவியையும், குணங்களையும் பெற முயற்சி செய்யாவிட்டால், நாம் இன்னும் தேவனுடைய பிள்ளைகள் அல்ல. பரலோகத்திலிருக்கிற நம் பிதா என்ன செய்வார்? அவர் எல்லார் மேலும் இரக்கமுள்ள வராய் இருக்கிறார்; அவர் நல்லோர் மீதும் தீயோர் மீதும் மழையை வருஷிக்கப்பண்ணுகிறார்; அவர் “தமது சூரியனை” பாகுபாடின்றி அனைவர் மேலும் உதிக்கச் செய்கிறார். குழந்தையும் தன் தகப்பனை போன்றே இருக்க வேண்டும்; நாம் ஒருவரிடமும் இரக்கமும், கருணையும் காண்பிக்காத பட்சத்தில் நம்முடைய பரலோக பிதாவுக்கும் நமக்குமான ஒற்றுமை எங்கே இருக்கிறது. நாம் அன்பில் குறைவுள்ளவர்களாய் இருந்தால், நாம் புது சிருஷ்டிகளாய் இருக்கிறோம் என்பதற்கான ஆதாரம் தான் எங்கே? இவை அனைத்தும் தேவையாய் இருக்கிறது. நாம் “மறுபடியும் பிறக்க வேண்டியது” அவசியம் (யோவான் 3:7).

இரண்டாவது, இங்கே பரிந்துரை செய்யப்பட்ட

ஆவியையும், குணங்களையும் பெற முயற்சி செய்யாவிட்டால், நாம் இன்னமும் உலகத்தான் என்று வெளிப்படுத்துகிறது. “மற்றவர்களைக் காட்டிலும் நீ எப்படி விசேஷித்தவன்?” என்பதே நமது ஆண்டவரின் பரிவான கேள்வி. மதமற்ற நாஸ்தி கர்களால் கூட “தன்னை நேசிப்பவர்களை நேசிக்க முடியும்”. பாசமும், விருப்பமும் அவர்களை அசைக்கும்போது, அவர்களால் இரக்கங்காட்டி நன்மைசெய்ய முடியும். ஆனால், ஒரு கிறிஸ்தவன் இவைகளை பார்க்கிலும் உன்னதமான கொள்கைகளினால் ஆட்கொள்ளப்பட வேண்டும். நாம் இந்த சோதனையினின்று பின்வாங்குகிறோமா? நமது எதிராளிகளுக்கு நன்மை செய்வது நமக்கு இயலாத காரியமாய் தோன்றுகிறதா? காரியம் இப்படியாய் இருக்குமாயின், நாம் இன்னும் மனமாற் றமடைய வேண்டியது நிச்சயம் என்று அறிவோமாக. நாம் இன்னும் “தேவனுடைய ஆவியை பெறவில்லை” *(1கொரி 2:12)*.

இவையனைத்தும் நம்மை மனமார்ந்த பிரதிபலிப்புகளுக்கு அழைக்கிறது. வேதத்தின் வெகு சில பகுதிகளே நம்மில் தாழ்மை யான எண்ணங்கள் உருவாகும்படி அமைந்துள்ளது. ஒரு கிறிஸ்த வன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான அருமையான விளக்கப்படம் நமக்கு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. வேதனை யான உணர்ச்சிகளின்றி அவற்றை நாம் காண முடியாது. ஒரு கிறிஸ்தவன் இப்போது இருக்கின்ற நிலையில் இருந்து முற்றி லுமாய் மாறுபட்டவன் என்பதை நாம் அறிய வேண்டும். இரண்டு பொதுவான போதனைகளை நாம் இதிலிருந்து கற்றுக் கொள்வோம்.

முதலாவது, மெய் கிறிஸ்தவர்களால் இந்த பத்து வசனங்க ளில் உள்ள ஆவியை தொடர்ச்சியாக நினைவு கூற முயன்றால், அவர்கள் இப்போது செய்வதை விட கிறிஸ்தவத்தை பலமடங்கு உலகிற்கு பரிந்துரை செய்வார்கள். இப்பகுதியில் உள்ள குறைந்த பட்ச வார்த்தைகள் அற்பமானதும், மேலான மதிப்பற்றதுமாய் இருக்கிறது என்ற கருத்து நம்மில் தோன்ற நாம் அனுமதிக்கக் கூடாது. அவைகள் அப்படிப்பட்டவைகள் அல்ல.

இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள ஆவிக்கான கவனமே கிறிஸ்தவத்தை அழகுள்ளதாய் மாற்றுகிறது; இதில் அடங்கியுள்ள காரியங்களை உதாசீனப்படுத்துவதே நம் கிறிஸ்தவத்தை உருக்குலைக்கிறது. தவறாத உபசரனை, அன்பு, இரக்கம், பிறரிடம் காட்டும் பரிவு ஆகியவை கர்த்தருடைய பிள்ளைகள் கொண்டிருக்கக் கூடிய மேலான ஆபரணங்களில் சிலவாகும். உலகமானது கொள்கைகளை புரிந்து கொள்ள வில்லை என்றாலும், இவைகளை புரிந்து கொள்ளும். கிறிஸ்தவம் ஒன்றும் முரட்டாட்டமான, கொடூரமான, கபடான மற்றும் அநாகரீகமான கிறிஸ்தவம் இல்லை. பரிசுத்தத்தின் சிறிய கடமைகளையும், மேலான கடமைகளையும் செய்வதிலேயே நடைமுறை கிறிஸ்தவத்தின் பூரணத்துவம் அடங்கியுள்ளது.

இரண்டாவது, இந்த பத்து வசனங்களிலுள்ள ஆவியின் மேலான ஆளுகையும், வல்லமையும், இவ்வுலகத்தில் இருந்திருந் தால், இப்போதிருப்பதைப் பார்க்கிலும் எவ்வளவு அதிக சந்தோஷமாக இந்த உலகம் இருந்திருக்கும். மனித இனத்தை சந்திக்கின்ற பாதி பிரச்சனைகளுக்கு காரணம் சண்டைகள், விரோதங்கள், தன்னலம் மற்றும் அன்பின்மையே என்று யார் அறியாமல் இருக்கிறார்கள்? நமது ஆண்டவரால் இங்கு பரிந்து ரைக்கப்பட்ட கிறிஸ்தவ அன்பை பரப்புவதை அல்லாமல் வேறொன்றினாலும் இவ்வுலகில் சந்தோஷத்தை பெருகச் செய்ய முடியாது என்பதை கவனிக்க யார் தவறுவார்? நாம் இதை நினைவில் கொள்வோம். மனிதர்களை சந்தோஷமற்றவர்களாக மாற்றும் போக்கினை மெய்யான கிறிஸ்தவம் கொண்டுள்ளது என்று கற்பனை செய்கிறவர்கள் பெரிதும் தவறிழைக்கிறார்கள். இந்த ஆவியை அல்லாத எந்த சமயமும் இப்படிப்பட்ட காரியங் களையே செய்யும். ஆனால், இந்த ஆவியையுடைய கிறிஸ்தவம் அப்படிப்பட்டதல்ல. மெய் கிறிஸ்தவம் நேருக்கு முரணான விளைவைக் கொண்டுள்ளது. இது மனுஷர்களுக்கு மத்தியில் சமாதானம், அன்பு, இரக்கம் மற்றும் நற்சுவிசேஷத்தை விருத்தி யடையச் செய்கிறது. பரிசுத்த ஆவியின் கற்பித்தலுக்குக் கீழாக அதிகமான ஜனங்கள் கொண்டு வரப்பட்டால், அவர்கள் அதிகம திகமாய் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து அதிக சந்தோஷத் துடன் வாழ்வார்கள்.

வேதப்பகுதி : மத்தேயு 6 : 1 – 8

தலைப்பு : தருமம் செய்வதில் பகட்டும், தடை செய்யப்பட்ட ஜெபமும்

மலை பிரசங்கத்தின் இப்பகுதியில் இருந்து இரண்டு காரியங்களை கர்த்தராகிய இயேசு நமக்கு போதிக்கிறார்; ஒன்று, தர்மம் செய்தல், மற்றொன்று ஜெபம். இவ்விரண்டு காரியங்களுக்கும் யூதர்கள் அதிக முக்கியத்துவம் அளித்தனர். எல்லா பக்தியுள்ள கிறிஸ்தவர்களின் கவனத்தையும், இவ்விரண்டு காரியங்களும் அதிகமாய் ஈர்க்கிறது.

இயேசுவின் சீடர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிற யாவரும் தருமம் செய்வார்கள். பிறருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தங்கள் திராணிக்குத் தக்கதாய் அவர்களுக்கு உதவி செய்வதே அவர்களின் பிரதான கடமையாய் இருக்கிறது. அந்த கடமையை எவ்விதத்தில் செயலாற்ற வேண்டும் என்று நமது ஆண்டவர் இங்கு போதிக்கிறார். பிறருக்கு உதவி செய்வது அல்லது பணம் கொடுக்கின்ற விஷயத்தில் அநேகரிடம் காணப்படும் சுயநலமான கஞ்சத்தனத்தை இப்பகுதி கண்டிக்கிறது. “தங்களுக்கு செலவிடுவதில் ஐசுவரியவான்களாயும், கர்த்தருக்குக் கொடுப்பதில் தரித்திரராயும்” இருக்கிற ஜனங்கள் எத்தனை பேர்! மனிதர்களுடைய சரீரங்களுக்கும், ஆத்துமாக்களுக்கும் நன்மை உண்டாகும்படி ஒரு பணத்தையாகிலும், ஒரு போதும் தராத ஜனங்கள் தான் எத்தனை பேர்! இப்படிப்பட்ட மனநிலையை உடையவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைப்பதற்கு ஏதேனும் உரிமை உண்டா? அது சந்தேகத்திற்குரியதே. கொடுக்கின்ற இரட்சகருக்குக் கொடுக்கின்ற சீஷர்களே இருக்க வேண்டும்.

மெய்கிறிஸ்தவர்கள் யாவரும் ஜெபிப்பார்கள். இதை அவர் முக்கியமான காரியமாகக் கருதுகிறார். சிறந்த, முறையான ஜெபத்திற்கான வழிமுறைகளை மட்டுமே அவர் இங்கு கொடுத்திருக்கிறார். நாம் அனுதினமும் நினைவு கூறப்பட வேண்டிய

காரியங்களில் இதுவும் ஒன்று. ஜெபமற்ற ஜனங்கள் உண்மைக் கிறிஸ்தவர்கள் அல்ல என்று இப்பகுதி மிகத் தெளிவாகப் போதிக்கிறது.

ஞாயிறுதோறும் சபைகளில் ஏறெடுக்கப்படும் ஜெபங்களில் பங்கெடுப்பது அல்லது வார நாட்களில் குடும்ப ஜெபங்களில் பங்கு கொள்வது மட்டும் போதாது. தனிப்பட்ட ஜெபங்களும் இருக்க வேண்டும். இந்த ஜெபம் இல்லாவிட்டால், நாம் கிறிஸ்துவினுடைய சபைக்கு புறம்பான அங்கத்தவர்களாய் இருப்போமே அல்லாமல், கிறிஸ்துவுக்கு உயிருள்ள அங்கத்தவர்களாய் இருக்க முடியாது. எனினும் தருமஞ் செய்தல் மற்றும் ஜெபத்தை பற்றியதான நமது வழிகாட்டுதலுக்கான விதிமுறைகள் என்ன? அவைகள் கொஞ்சமும், எளிமையானதுமாகும். ஆனால், அவைகள் சிந்திப்பதற்கான அநேகக் கருத்துக்களை கொண்டுள்ளது.

கொடுப்பதில், பகட்டான காரியங்கள் யாவும் அருவருக்கப்படத்தக்கதும், தவிர்க்கப்பட வேண்டியதாயும் இருக்கிறது. “ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே” என்று வேதம் கூறுகிறது. நாம் எவ்வளவு தயாளரும், ஈகை குணமும் கொண்டவர்கள் என்று ஒவ்வொருவரும் காணும்படியாகவும், நம்முடைய சக மனிதர்களின் போற்றுதலை பெற விரும்புபவர்களாகவும் நாம் தர்மஞ் செய்யக் கூடாது. விளம்பரஞ் செய்கின்ற காரியங்கள் யாவற்றையும் நாம் புறக்கணிக்க வேண்டும். நாம் அமைதலோடு கொடுத்து, எந்த விதமான சத்தமுமின்றி தர்மஞ் செய்யக்கடவோம்; “நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாய் இருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது” என்ற வேதபோதனைக் கேற்ற ஆவியை பெற நாம் வாஞ்சிப்போம்.

ஜெபிப்பதில், நாம் நாட வேண்டிய முதன்மையான காரியம் தேவனோடு தனித்திருப்பதே ஆகும். “நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து”, தேவனைத் தவிர வேறொருவரும் நம்மை பார்க்கவில்லை என்ற உணர்வோடு நாம் நம்முடைய இருதயங்களை அவருக்கு முன்பாக ஊற்றக் கூடியதும், எந்த மனிதக் கண்களினாலும் நாம் காணப்படாதி

ருக்கிற இடத்தை நாம் கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இதை பின்பற்ற அநேகர் வெகு சிரமப்படுவார்கள்; தரித்திரனும், வேலைக்காரனும் தனிமையாய் இருப்பதை இயலாதக் காரிய மாய் எண்ணுவார்கள்; ஆயினும், இதற்குக் கீழ்ப்படியத் தக்க சிறந்த முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும். ஒருவன், தான் தேவனோடு தனித்து இருக்கும்படியான இடத்தை கண்டுபிடிக்க மெய்யான ஆவல் கொண்டிருந்தால், நிச்சயமாக அதற்கான வழியை அவன் கண்டு கொள்வான்.

கொடுப்பதோ அல்லது ஜெபிப்பதோ, நம்முடைய எல்லா கடமைகளிலும் நாம் மெய்யான இதயத்தேடலோடும், எல்லாம் அறிகின்ற கடவுளோடுங்கூட அவற்றை கடைபிடிக்க வேண்டும் என்ற சிந்தையே நம் மனதில் இருக்க வேண்டும். "நமது தேவன் அந்தரங்கத்தில் பார்க்கிறவர்". கடமைக்காக, போலியாக அல்லது உடன்பாடற்ற வெறும் சரீர உழைப்பாக இருக்கின்ற எல்லாம் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானதும், பயனற் றதுமாய் இருக்கிறது. நாம் கொடுக்கின்ற பணத்தின் நிறை யையோ அல்லது நாம் பயன்படுத்துகின்ற வார்த்தைகளின் அளவையோ அவர் எண்ணுகிறதில்லை. எல்லாவற்றையும் காண் கின்ற அவருடைய கண்ணானது நம்முடைய உள் நோக்கங்கள் மற்றும் நம்முடைய இருதயங்களின் நிலையை மட்டுமே பார்க்கிறது.

சில மதச் சடங்குகளை நிறைவேற்றுவதன் மூலம் தங்களு டைய ஆத்துமாக்களில் எல்லாம் சரியாய் உள்ளது என்று தங்களைத் தாங்களே முகஸ்துதி செய்கிறார்கள். நம்முடைய கொடையின் நிறையை கர்த்தர் பாராமல், நம்முடைய சேவை மனப்பான்மையையே அவர் பார்க்கிறார் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். ஒரு சில வார்த்தைகளை முறையாக மறுபடி மறுபடி கூறுவதினாலோ அல்லது ஒரு தர்மச் சத்திரத் துக்கு ஒரு தொகையை சுயநீதியின் கூலியாக கொடுப்பதி னாலோ அவருடைய இரக்கத்தை பெற்றுக் கொள்ளலாம் என்று அநேகர் எண்ணுகிறார்கள். நம்முடைய இருதயங்கள் எங்கே? நாம் கொடுக்கும் போதோ அல்லது ஜெபிக்கும் போதோ எல்லா வற்றையும் "மனுஷருக்கென்று இல்லாமல், கர்த்தருக்கென்று செய்கிறோமா?" நாம் கர்த்தருடைய பார்வையை

அறிந்திருக்கிறோமா? "அந்தரங்கத்தில் பார்க்கிறவரும், செயல் கள் யாவையும் மதிப்பிடுகிறவருமாகிய" கர்த்தரின் தயையைப் பெற நாம் முழுமையாக வாஞ்சிக்கிறோமா? *(1சாமு 2:3)*. நாம் உண்மையுள்ளவர்களா? இத்தகைய கேள்விகளினால் நாம் நம்முடைய ஆத்துமாவை அடிக்கடி சோதிக்க வேண்டும்.

வேதப்பகுதி : மத்தேயு 6 : 9 – 15

தலைப்பு : கர்த்தருடைய ஜெபமும், ஒருவரையொருவர் மன்னிக்கின்ற கடமையும்

இவ்வசனங்கள் எண்ணிக்கையில் குறைவாயும், எளிதில் வாசிக்கப்படக்கூடியதாய் இருந்தாலும், இவை அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. கர்த்தராகிய இயேசு தமது ஜனங்களுக்கு அளித்த ஆச்சரியமான ஜெப மாதிரியை இவ்வசனங்கள் உள்ளடக்கி உள்ளது. இதை பொதுவாக “கர்த்தருடைய ஜெபம்” என்றழைப்பர்.

இப்பகுதியைப் போன்ற வேறெந்த வேதப்பகுதியும் அவ்வளவு பிரபல்யமானதல்ல. கிறிஸ்தவம் எங்கெல்லாம் காணப்படுகிறதோ, அங்கெல்லாம் இவ்வார்த்தைகள் நன்கு பழக்கமானவை. ஒருபோதும் வேதத்தைக் கண்டிராத, மெய் சுவிசேஷத்தைக் கேட்டிராத பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே” என்கிற இந்த ஜெபம் மிகவும் பரிச்சயமானதாய் இருக்கிறது. வார்த்தைகளில் பரிச்சயமான இந்த ஜெபமானது அதன் மெய் கருத்திலும் பரிச்சயமாய் இருந்தால் இவ்வுலகத்திற்கு அதிக சந்தோஷம் உண்டாயிருக்கும்.

இப்பகுதியைப் போல முழுமையும், எளிமையுமான வேதப்பகுதி வேறொன்றும் இல்லை; நாம் சிறு குழந்தைகளாய் இருந்த போது கடவுளிடம் ஏறெடுக்கும்படி கற்றுக் கொண்ட முதல் ஜெபம் இது. இதனுடைய தாழ்மை இங்கே உள்ளது. மிகவும் முதிர்ச்சி அடைந்த பரிசுத்தவான் வாஞ்சிக்கின்ற சாராம்சத்தை இது கொண்டுள்ளது. அதனுடைய முழுமை இங்கே இருக்கிறது. நாம் ஒவ்வொரு வார்த்தையையும் அதிகமாய் ஆராய்ந்தால், “இது கர்த்தருடைய ஜெபம்” என்று நாம் உணரத்தக்க அதிகமானக் காரியங்களை இது கொண்டுள்ளது.

கர்த்தருடைய ஜெபமானது பத்து பகுதிகள் அல்லது வாக்கி

யங்களினால் அமைந்திருக்கிறது. நாம் விண்ணப்பிக்கிற நபரிடம் ஒரு உறுதிமொழியை ஏற்படுத்துகிறோம்; அவருடைய நாமம், அவருடைய ராஜ்ஜியம் மற்றும் அவருடைய சித்தத்தை மதிக்கின்ற மூன்று ஜெபங்கள் இங்கே இருக்கிறது; மேலும் நமது அன்றாடகத் தேவைகள், நமது பாவங்கள் அல்லது நமது பலவீனங்கள் மற்றும் நமது ஆபத்துக்களைக் குறிக்கின்ற நான்கு ஜெபங்களும் இருக்கிறது; பிறரிடமான நமது உணர்வை பகிரங்கமாக கூறுகின்ற ஒரு விண்ணப்பமும், ஒரு முடிவான புகழுரையையும் கொண்டது இந்த மாதிரி ஜெபம்.

இவ்வனைத்து பகுதிகளிலும், “**நாம்**” மற்றும் “**நம்முடைய**” என்று கூற நாம் கற்றுக் கொடுக்கப்படுகிறோம். நாம் மற்றவர்களை நினைவு கூறுவதைப் போல நம்மை நாமே நினைவு கூற வேண்டும். ஒவ்வொரு பகுதிகளுக்கும், ஒரு அத்தியாயமே எழுதலாம். நாம் தற்போது, இதிலுள்ள வாக்கியங்களை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கொள்வதில் திருப்தியுற்று, ஒவ்வொரு வாக்கியங்களிலும் அடங்கியுள்ள கருத்துக்களை நாம் குறித்துக் கொள்வோம்.

நாம் யாரிடம் ஜெபிக்க வேண்டும் என்பதை “**பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே**” என்கிற இந்த முதலாவது வாக்கியம் நமக்கு போதிக்கிறது. நாம் பரிசுத்தவான்களிடத்திலும், தேவதூதர்களிடமும் ஜெபிக்காமல், நித்திய பிதாவும், ஆவிகளின் தேவனும், வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவருமாகிய பிதாவினிடத்தில் ஜெபிக்க வேண்டும். “அவருக்குள் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்” என்று அத்தேனே பட்டணத்தாரிடத்தில் பரிசுத்த பவுல் கூறியதைப் போல, நமது சிருஷ்டிகராகிய அவரை “பிதாவே” என்று தாழ்மையான சிந்தையில் அழைக்கிறோம் (அப் 17 : 28). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவும், தன்னுடைய குமாரனுடைய மரணத்தின் மூலமாய் தம்மோடு நம்மை ஒப்புரவாக்கினதினாலே, நம்முடைய மேலான அறிவில், அவரை “பிதாவே” என்று நாம் அழைக்கிறோம் (கொலோ 1:20-22). பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் “பிதாவை” நிழலாட்டமாயும், வெகுத் தொலைவிலுமே கண்டார்கள் என்று அறிக்கையிடுகிற

நாம், கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். மேலும் "அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரத்தின் ஆவியையும்" நாம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 8:15). இதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது; நாம் இரட்சிக் கப்படும்படிக்கு அவருடைய குமாரனில் நாம் வாஞ்சையாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவினுடைய இரத்தத்தையும், அவரோடுள்ள ஐக்கியத்தையும் விசுவாசிக்காமல் இருந்து கர்த்தருடைய "பிதாவில்", மட்டும் நம்பிக்கையாய் இருக்கிறோம் என்ற பேச்சு பிரயோஜனமற்றது.

கர்த்தருடைய நாமத்தை மதிக்கின்ற விண்ணப்பமாக இரண்டாவது வாக்கியம் உள்ளது. "**உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக**". "**கர்த்தருடைய நாமம்**" என்றால் அவருடைய வல்லமை, ஞானம், பரிசுத்தம், நீதி, இரக்கம் மற்றும் உண்மை ஆகிய இத்தனை குணாதிசயங்களின் அடிப்படையில் அவர் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். "பரிசுத்தப்படுவதாக" என்று நாம் அழைப்பதினால், அவருடைய நாமம் எங்கும் அறியப்பட்டு, மகிமைப்படுத்தப்படும் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் வாஞ்சிக்க வேண்டிய முதலாவது காரியம், கர்த்தருடைய மகிமையே. "பிதாவே, உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்" என்பது நமது ஆண்டவரின் தனிப்பட்ட ஜெபத்தின் நோக்கங்களில் ஒன்றாகும் (யோவான் 12;28). இந்நோக்கத்திற்காகவே, உலகம் படைக்கப்பட்டது; இதற்காகவே பரிசுத்தவான்கள் அழைக்கப்பட்டும், மனமாற்றமடைந்தும் இருக்கிறார்கள்; "எல்லாவற்றிலேயும் தேவன் மகிமைப்பட வேண்டும்" என்ற பிரதான காரியத்தையே நாம் நாட வேண்டும் (1பேதுரு 4:11).

"**உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக**". கர்த்தருடைய ராஜ்ஜியத்தை பற்றியதான விண்ணப்பமாக மூன்றாவது வாக்கியம் அமைந்துள்ளது. அவருடைய இராஜ்ஜியம் என்று முதலாவது நாம் அர்த்தப்படுத்துவது என்னவெனில், கர்த்தர் தமது கிருபையின் ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து, தமது ஆவியினாலும், வார்த்தையினாலும் கிறிஸ்துவின் எல்லா ஜீவனுள்ள அங்கத்தவர்களின் இருதயங்களிலும் அதை நிர்வகிக்கிறார் என்பதே. ஆனால், நாம்

பிரதானமாகக் கருதுவது என்னவெனில், இயேசுவின் இரண்டாம் வருகையின் போது ஒரு நாள் மகிமையின் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும். "அப்பொழுது சிறியவன் முதற் கொண்டு, பெரியவன் வரைக்கும் எல்லாரும் அவரை அறிவார்கள்" (எபி 8:11). இவ்வேளையில் தானே உலகத்தில் இருந்து, பாவம் துக்கம் அகற்றப்பட்டு சாத்தான் தூக்கி எறியப்படுவான். அந்த காலக் கட்டத்தில் தாமே யூதர்களின் மனந்திரும்புதலும், புறஜாதியாருடைய நிறைவும் உண்டாயிருக்கும் (ரோமர் 11:25). மேலும், இவை எல்லாம் நிறைவேற வாஞ்சிப்பதும் இந்த வேளையில் தான். எனவே, கர்த்தருடைய ஜெபத்தில் இது முதன்மையான இடம் வகிக்கிறது. "கர்த்தருக்குச் சித்தமானால், தம்முடைய ராஜ்ஜியத்தை துரிதப்படுத்தும்" என்று அடக்க ஆராதனையில் சொல்லப்படுகின்ற வார்த்தைகளை நாம் கேட்டிருக்கிறோம்.

"**உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக**". கர்த்தருடைய சித்தத்தைப் பற்றியதான விண்ணப்பமாக நான்காவது வாக்கியம் அமைந்துள்ளது. பரலோகத்திலுள்ள தேவதூதர்களால் கர்த்தருடைய கட்டளைகள் யாவும் பூரணமாய், ஆயத்தமாய், இடையறாத வகையில் கீழ்ப்படியப்படுவதைப் போல, பூமியிலே மனிதர்களாலும் கீழ்ப்படியப்படும்படி நாம் ஜெபிக்கலாம். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்கள் அவைகளுக்குக் கீழ்ப்படியும்படி கற்றுக் கொடுக்கப்படவும், அவைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இன்னும் அதிகமாய் அவைகளை கைக் கொள்ளவும் நாம் விண்ணப்பிப்போம். கர்த்தருடைய சித்தத்திற்கு நம்மைமுழுமையாக ஒப்புக் கொடுப்பதே நம்முடைய மெய்யான சந்தோஷமாய் இருக்கும். மேலும், அனைத்து மனித சமூகமும், அவருடைய சித்தத்தை அறிந்து, கீழ்ப்படிந்து, அதற்கு தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டி, நாம் ஜெபிப்பதே நம்முடைய உன்னதமான நோக்கமாகும்.

"**எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்**". நம்முடைய அன்றாடகத் தேவைகளைக் குறிக்கும் விண்ணப்பமாக ஐந்தாவது வாக்கியம் உள்ளது. நம்முடைய அன்றாடகத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நாம்

முழுவதுமாகக் கர்த்தரை சாந்திருக்கிறோம் என்று அங்கீகரிக்க நாம் இங்கு கற்றுக் கொள்கிறோம். இஸ்ரவேலர் அநுதின “மன்னாவை” கேட்டதுபோல நாமும் அநுதின “ஆகாரத்தை” கேட்கிறோம். நாம் தரித்திரர், பலவீனர், தேவையுள்ள சிருஷ்டிகள் என்பதை உணர்ந்து, அறிக்கையிட்டு, நம்முடைய சிருஷ்டிகராகிய அவரிடத்தில் நம்மைபாதுகாக்கும்படி வேண்டுகிறோம். நம்முடைய அத்தியாவசியத் தேவைகளில் எளிமையானதான “ஆகாரத்தை” தரும்படி நாம் கேட்கும்போது, நம்முடைய அனைத்து சரீரத் தேவைகளும் அந்த ஒரே வார்த்தையில் அடங்கிவிடுகிறது.

“**எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்**”. நம்முடைய பாவங்களைக் குறித்ததான விண்ணப்பமாக ஆறாவது வாக்கியம் உள்ளது. நாம் பாவிகள் என்றும் அநுதினமும் நமக்கு பாவ மன்னிப்பும், உதவியும் வேண்டியதாய் இருக்கிறது என்றும் நாம் அறிக்கையிடுகிறோம். கர்த்தருடைய ஜெபத்தில் விசேஷமாக நினைவில் வைத்திருக்கக் கூடிய பகுதி இது. இது எல்லா சுய ஒழுக்கத்தையும், சுயநீதியையும் கடிந்து கொள்கிறது. கிருபாசனத்தண்டையில் நாம் பாவ அறிக்கை செய்யும் வழக்கத்தையும், இரக்கம் மற்றும் பாவமன்னிப்பு வேண்டி கர்த்தரை நாடும் வழக்கத்தையும் தொடர்ச்சியாக நிறைவேற்ற நாம் இங்கே போதிக்கப்படுகிறோம். நாம் அநுதினமும் “நம்முடைய பாதங்களைக் கழுவ வேண்டியது” அவசியம் (*யோவான் 13:10*).

பிறரிடம் நமக்கான உணர்வை வெளிப்படுத்துகின்ற வாக்கியமாக ஏழாவது வாக்கியம் உள்ளது; “**எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்**” என்று பிதாவினிடத்தில் நாம் கேட்போம். முழு ஜெபத்திலும் இது ஒன்றே வெளிப்படையான அறிவிப்பாகும். மேலும், நமது ஆண்டவர் ஜெபத்தை முடிக்கும்போது விமர்சித்ததும், விவரித்ததுமான ஒரே பகுதி இது தான். பிறருக்கு விரோதமாக வன்மங்களையும், வஞ்சகங்களையும் நம் இருதயத்தில் வைத்துக் கொண்டு நாம் ஜெபித்தால், பாவமன்னிப்புக்கென்று ஏறெடுக்கப்படும் நம்முடைய ஜெபங்கள் கேட்கப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது என்ற கருத்தையே

இது நமக்கு நினைவு படுத்துகிறது. இப்படிப்பட்ட மனநிலையோடு ஏறெடுக்கப்படும் ஜெபமானது வெறும் சடங்காயும், மாய்மாலமாயும் இருக்கும். இது மாய்மாலத்தைக் காட்டிலும் மோசமானதாகும். “என்னை மன்னிக்கவே மன்னிக்காதீர்” என்று சொல்வதற்கு இணையாகும். கருணையற்ற நமது ஜெபங்கள் பிரயோஜனமற்றவை. நம்மால் பிறரை மன்னிக்க முடியா விட்டால் நாம், மன்னிக்கப்படுவோம் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது.

“**எங்களைச் சோதனைக்குட்பட பண்ணாமல்**”, நமது பலவீனங்கள் தொடர்பான விண்ணப்பமாக எட்டாவது வாக்கியம் அமைந்துள்ளது. நாம் எல்லா வேளைகளிலும், தேவனை விட்டு வழிவிலகி விழுந்து போகக் கூடிய நிலையில் இருக்கிறோம் என்று இவ்வாக்கியம் நமக்கு போதிக்கிறது. நம் பலவீனங்களை அறிக்கையிட்டு நாம் பாவத்தில் வீழ்ந்து போக அனுமதிக்காமல், நம்மை தாங்கி பிடிக்கும்படி கர்த்தரிடத்தில் மன்றாடவும் இது நமக்கு போதிக்கிறது. நம் ஆத்துமாக்களை சேதப்படுத்துகின்ற காரியங்களுக்கு நாம் போகாதபடி நம்மை தடுக்கவும், நாம் ஒருபோதும் “நம்முடைய திராணிக்கு மேலான சோதனைகளினால் சோதிக்கப்படாதபடி” நம்மை காக்கவும், வானத்தையும், பூமியையும் அதிலுள்ள யாவையும் ஆளுகிற நமது ஆண்டவரிடத்தில் நாம் கேட்கக் கடவோம் (*1கொரி 10:13*).

“**தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்**” நமது ஆபத்துகள் தொடர்பான விண்ணப்பமாக ஒன்பதாவது வாக்கியம் அமைந்துள்ளது. இவ்வுலகத்திலுள்ள தீமைகளிலிருந்தும், நம்முடைய சொந்த இருதயங்களிலுள்ள தீமைகளிலிருந்தும், எல்லாவற்றிற்கும் மேலாக, சாத்தானின் தீமையினின்றும் இரட்சிக்கப்பட நாம் கர்த்தரிடத்தில் கேட்கும் படியாக இங்கு நாம் கற்றுக் கொள்கிறோம். நாம் இந்த சரீரத்தில் இருக்கும் வரை, தீமைகளின் பிரசன்னத்தை நாம் காண்கிறோம், கேட்கிறோம் மற்றும் உணர்கிறோம் என்று நாம் அறிக்கையிடுவோம். தீமையானது நம்மை பற்றியும், நமக்குள்ளும், எப்பக்கத்திலும் நம்மைச் சுற்றிலும் இருக்கிறது; நம்மை தீமையின் வல்லமையில் இருந்து தொடர்ந்து இரட்சிக்கவும், பாதுகாக்கவும்

வல்ல ஒரே தேவனாகிய அவரிடம் நாம் மன்றாடலாம் *(யோவான் 17:15)*

“**இராஜ்ஜியமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே**”; கடைசி வாக்கியமானது கர்த்தருடைய ஜெபத்தின் புகழுரையாகும். இவ்வுலகில் உள்ள எல்லா இராஜ்ஜியங்களும் நம்முடைய பிதாவின் நியாயமான ஆஸ்திகளாகும்; எல்லா “வல்லமையும்” அவர் ஒருவருக்கே உரியது. எல்லா “மகிமையும்” பெற்றுக் கொள்ள அவர் ஒருவரே பாத்திரர் என்ற இந்த வார்த்தைகளின் மூலம் நம்முடைய விசுவாசத்தை நாம் அறிக்கையிடுகிறோம். எல்லா கனத்தையும், துதிகளையும் நாம் அவருக்கே கொடுக்கிறோம் என்றும், இராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாகிய அவரில் நாம் களிகூறுகிறோம் என்றும் நம் இருதயங்களின் வெளிப்படையான அறிவிப்பை அவருக்கு ஏறெடுப்பதின் மூலம் இந்த ஜெபத்தை நாம் நிறைவு செய்கிறோம். கர்த்தருடைய ஜெபத்தில் கேட்கும்படி நமக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட காரியங்களுக்காக நாம் மெய்யாக வாஞ்சிக்கிறோமா என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்கக் கடவோம். ஆயிரக்கணக்கானோர், இந்த ஜெபத்தை முறையாக, பயத்தோடு தினமும் ஏறெடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று ஒரு போதும் சிந்திப்பதில்லை. அவர்கள் “மகிமை”, “இராஜ்ஜியம்” அல்லது “கர்த்தருடைய சித்தம்” குறித்து கவலைப்படவில்லை; சார்ந்திருத்தல், பாவம், பலவீனம் அல்லது தீமைகளை குறித்ததான எந்த அறிவும் அவர்களுக்கு இல்லை; தங்களுடைய எதிராளிகளுக்கு நேராக அவர்களிடத்தில் அன்போ, இரக்கமோ கிடையாது; இருந்த போதிலும், அவர்கள் கர்த்தருடைய ஜெபத்தைத் தொடர்ந்து சொல்லுகிறார்கள். இக்காரியங்கள் இப்படி இருக்கக் கூடாது. கர்த்தரின் துணையோடு நாம் இதை சரி செய்து, நம்முடைய இருதயங்கள் எப்போதும் நம்முடைய உதடுகளோடு இணைந்திருக்கும்படி பார்த்துக் கொள்வோம்! தன்னுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் கடவுளை தன்னுடைய “பிதா” என்று மெய்யாய் அழைக்கிற எவனும் பாக்கியவான். எனவே கர்த்தருடைய ஜெபத்தில் அமைந்துள்ள எல்லாவற்றிற்காகவும், இருதயத்தின் ஆழத்திலிருந்து “ஆமென்” என்று சொல்லுவோம்.

வேதப்பகுதி : மத்தேயு 6 : 16 – 24

தலைப்பு : சரியான உபவாச முறைமையும், பரலோகத்தின் பொக்கிஷமும்

நமது ஆண்டவரின் மலை பிரசங்கத்தின் இந்த பகுதியில் இருந்து நமக்கு முன்பாக மூன்று காரியங்கள் கொண்டு வரப்பட்டு உள்ளது. அவையாவன, உபவாசம், உலகப் பற்று மற்றும் கிறிஸ்தவ நோக்கத்தின் ஒருமை.

உபவாசம் அல்லது சரீரத்தை ஆவிக்குக் கீழ்ப்படுத்தும் பொருட்டு சிறப்பான தருணங்களில் ஆகாரத்தை விலக்கி வைக்கின்ற செயல் வேதத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வழக்கமாகும். மேலும், இது பொதுவாக, ஜெபத்தோடு தொடர்பு உடையது. தன்னுடைய பிள்ளை வியாதியாய் இருந்தபோது, தாவீது உபவாசித்தான். கர்த்தரிடம் இருந்து விசேஷித்த ஞானத்தைப் பெற நாடினபோது, தானியேல் உபவாசித்தான். மூப்பர்களை நியமிக்கும்போது, பவுலும், பர்னபாவும் உபவாசித்தார்கள். அகாஸ்வேரு ராஜாவுக்கு முன்பாகச் செல்லும்போது, எஸ்தர் உபவாசித்தாள். புதிய ஏற்பாட்டில் இக்காரியத்தைக் குறித்ததான நேரிடையான கட்டளையை நாம் காண முடியாது. ஒருவன் உபவாசிக்கவோ அல்லது உபவாசியாமல் இருக்கவோ, அவனுடைய பகுத்தறிவின் தீர்மானத்திற்கென்று விடப்பட்டுவிட்டது. நேரடி கட்டளை கொடுக்கப்படாவிட்டாலும், சிறப்பான ஞானத்தை நாம் காணலாம். அநேக ஏழை மக்கள் போதுமான அளவு சாப்பிடாதிருக்கும்போது அவர்களை உபவாசிக்கச் சொல்வது நிந்திப்பதாகும். அநேக வியாதியஸ்தர்கள் தங்கள் உடல்நலன் கருதி பத்திய உணவை உட்கொள்ளும்போது, அவர்களால் உபவாசம் இருக்க முடியாது. இக்காரியத்தைக் குறித்து ஒவ்வொருவனும் தன் தன் மனதிலே தூண்டப்பட்டு, தன்னோடு இதில் ஒத்துவராத யாரையும் கடினமாய் கடிந்து கொள்ளாதிருக்கக் கடவன். உபவாசிப்பவர்கள் அமைதலோடும், அந்தரங்கத்தில்

பகட்டில்லாமல், உபவாசிக்கக்கடவர்கள். அவர்கள் உபவாசிக்கும்போது, "மனுஷர்களுக்கு காணப்படாமல்" உபவாசிக்க வேண்டும். அவர்கள் மனுஷர் காணும்படி உபவாசியாமல், கர்த்தர் காணும்படி உபவாசிக்கக்கடவர்கள்.

மனிதனுடைய ஆத்துமாவை வளைந்து கொள்கின்ற பயங்கரமான ஆபத்துக்களில் உலகப்பற்றும் ஒன்றாகும். நமது ஆண்டவர் இதைக் குறித்து கடினமாய் பேசுவதைக் கண்டு நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை ; இது கபடமான, தந்திரமான, வெளிப்புற பகட்டான எதிரி; நம்முடைய வேலையில் அதிக கவனம் செலுத்தும்படி கூறும்போது, கபடற்றதாய் காணப்படும். நாம் வெளிப்படையான பாவங்கள் செய்யாதவரை இவ்வுலக சிற்றின்பங்களை நாடும்படி வழிகாட்டும்போது தீங்கற்றதாய் காணப்படும். எனினும், அநேகர் இந்த போதனையைப் பின்பற்றாமல், நித்தியத்திற்கு போகிற வழியை இழக்கிறார்கள். "பூமியிலே தங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிற" அவர்கள், "பரலோகத்தில் தங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க" மறந்து விடுகிறார்கள். நாம் இவை எல்லாவற்றையும் நினைவு கூறுவோமாக! நம்முடைய இருதயங்கள் எங்கே? நாம் எதை அதிகமாய் நேசிக்கிறோம்? நம்முடைய பிரதான விருப்பங்கள் பூமியிலுள்ள பொருட்கள் மீதா? அல்லது பரலோகத்தில் இருக்கிற பொருட்கள் மீதா? இக்கேள்விகளுக்கு நாம் அளிக்கக் கூடிய விடைகளிலேயே நம்முடைய வாழ்வும், மரணமும் அடங்கியுள்ளது. நம்முடைய பொக்கிஷங்கள் உலகப் பிரகாரமானவையாக இருந்தால், நம்முடைய இருதயங்களும் உலகத்தில் இருக்கும். "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்".

ஆத்மீக விருத்திக்கான மேன்மையான இரகசியங்களில் கிறிஸ்தவ நோக்கத்தின் ஒருமையும் ஒன்று. நம்முடைய கண்கள் தெளிவாய் பார்க்காவிட்டால், நாம் தடுமாறாமலும், இடறி விழாமலும் நடக்க முடியாது. நாம் வெவ்வேறான இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய முயற்சித்தால், நிச்சயமாக நம்மால் ஒருவருக்கும் திருப்தி அளிக்க முடியாது. நம்முடைய ஆத்துமாக்களைக் குறித்த காரியமும் இப்படிப்பட்டதே. ஒரே

வேளையில் நாம் கிறிஸ்துவுக்கும், இவ்வுலகிற்கும் ஊழியம் செய்ய முடியாது; அப்படி செய்ய முயற்சிப்பது வீணாய் இருக்கும்.

நம்முடைய இருதயங்களின் மீது ஆண்டவர் ராஜாவாய் இருக்க வேண்டும்; அவருடைய நியாயப்பிரமாணம், அவருடைய சித்தம் மற்றும் அவருடைய போதனைகளே நம்முடைய முதல் கவனத்தை பெற வேண்டும். அப்படி இருக்கும்போது, நம்முடைய உள்ளான மனுஷனிலுள்ள எல்லாம் சரியாய் செயல்படும். மாறாக நம்முடைய இருதயங்கள் ஒழுங்கற்ற நிலையில் இருந்தால், எல்லாமே குழப்பமாகத்தான் இருக்கும். "உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்".

உபவாசத்தைக் குறித்த நமது ஆண்டவரின் போதனையிலிருந்து, அதன் மேலான முக்கியத்துவத்தை நாம் அறியலாம். "உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு" என்ற வார்த்தைகள் ஆழமான அர்த்தங்களினால் நிறைந்து இருக்கிறது. கிறிஸ்தவம் நம்மை சந்தோஷமுள்ளவர்களாக மாற்றுகிறது என்று மனிதர்கள் காணும்படிச் செய்வதே நமது குறிக்கோளாய் இருக்க வேண்டும் என்று அவை போதிக்கிறது. விசாரமற்ற தாயும், சோகமாயும் கிறிஸ்தவம் காணப்படவில்லை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கிறிஸ்துவினுடைய ஊழியத்தில் நாம் திருப்தி அற்றவர்களாய் இருக்கிறோமா? நிச்சயமாக இல்லை! பின்னர், நாம் முன்பு காணப்பட்டது போல இனி காணப்படாதிருப்போம்.

உலகப்பற்று குறித்து விழிப்பாயிருந்து ஜெபிக்க வேண்டியதின் அவசியத்தை நமது ஆண்டவரின் எச்சரிப்பிலிருந்து நாம் இங்குக் காணலாம். நம்மைச் சுற்றிலும் இருக்கிற பெரும்பாலான பயபக்தியுள்ள கிறிஸ்தவர்கள் என்ன செய்கிறார்கள்? "அவர்கள் பூமியிலே தங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறார்கள்"; அதில் எந்த தவறும் இருக்க முடியாது; அவர்களுடைய விருப்பங்கள், அவர்களுடைய வழிகள் மற்றும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் யாவும் நமக்கு பயங்கரமான கதையையே கூறுகிறது. அவர்கள் தங்கள் பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்து வைக்கவில்லை. நியாயமான காரியங்களுக்கு அதிக

முக்கியத்துவம் அளிப்பதின் மூலம் நம்முடைய ஆத்துமாக்கள் நரகத்தில் அமிழ்ந்து போகாதபடி நாம் எச்சரிக்கையாய் இருப் போம். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் பகிரங்கமான மீறுதல் ஆயிரமாயிரம் பேரைக் கொல்லும். ஆனால் உலகப்பற்று பல்லாயிரக்கணக்கானோரை அழித்துவிடும்.

சரீரத்தில் “ஒரு கண்” பற்றியதான நமது ஆண்டவரின் வார்த்தைகளில் இருந்து கிறிஸ்தவத்தில் ஏற்படுகின்ற தோல்விகளின் உண்மை இரகசியங்களை நாம் இங்கு கற்றுக் கொள்வோம். இங்கு வாழ்வின் எல்லா பகுதிகளிலும் தோல் வியே. நம்முடைய திருச்சபைகளில் ஆயிரமானோர் அசௌகரி யமாய், சுகமற்றவர்களாய், தங்களில் தாங்களே திருப்தியற்றவர் களாய் காணப்படுகிறார்கள்; ஏன் என்று அவர்கள் மிக அரிதாக அறிவார்கள். அதற்கான காரணம் இப்பகுதியில் வெளிப்படுத் தப்பட்டுள்ளது; அவர்கள் இரண்டு பக்கங்களையும் சீராக வைக்க முயற்சிக்கிறார்கள்; அவர்கள் கர்த்தரையும், மனிதனை யும் திருப்திபடுத்த பிரயத்தனம் செய்கிறார்கள்; ஒரே சமயத்தில் கிறிஸ்துவுக்கும், உலகத்திற்கும் உழைக்க பிரயாசப்படுகிறார்கள். இந்தத் தவறை நாம் செய்யக் கூடாது. கிறிஸ்துவுக்குள் தீர்மானிக் கப்பட்டவர்களாய் பரிபூரணராய், தீமைக்கு இணங்காத சீடர்க ளாய் இருப்போம். “ஒன்று செய்கிறேன்; பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி” என்ற பவுலினுடைய வார்த் தைகள் நமது குறிக்கோளாய் இருக்கட்டும் (பிலி3:13). பின்னர், நாம் சந்தோஷமான கிறிஸ்தவர்களாய் இருப்போம். நம் முகத் தின் மீது சூரியன் பிரகாசிப்பதை நாம் உணரலாம்; நம்முடைய இருதயம், தலை மற்றும் மனச்சாட்சி யாவும் வெளிச்சத்தால் நிறைந்திருக்கும். முடிவெடுத்தலே கிறிஸ்தவ சந்தோஷத்தின் இரகசியமாகும். கிறிஸ்துவுக்கென்று நிச்சயிக்கப்பட்டவர்களாய் இருங்கள், அப்பொழுது “உங்கள் சரீரம் முழுவதும் வெளிச்சமா யிருக்கும்”.

வேதப்பகுதி : மத்தேயு 6 : 25 – 34

தலைப்பு : புறக்கணிக்கப்பட்ட இந்த உலகை பற்றிய அதிக அக்கறை

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனையின் ஒருங்கிணைப்பான ஞானம் மற்றும் இரக்கத்திற்கான ஒரு அற்பு தமான எடுத்துக் காட்டு இவ்வசனங்கள் ஆகும். அவர் மனுஷ னுடைய இருதயத்தை அறிவார்; உலகப்பற்றிற்கு எதிரான எச்ச ரிப்புகளை நாம் உதறிவிட எப்போதும் ஆயத்தமாய் இருப்போம் என்றும் இவ்வுலக வாழ்க்கையின் காரியங்கள் மீதான நமது ஆர்வத்தையும் அவர் நன்கறிவார். நம்முடைய ஆத்துமாக்களை குறித்து முதலில் சிந்தித்தால், எப்படி நம்முடைய வாழ்க்கையை எளிதாக நடத்திச் செல்ல முடியும்? என்கிற சிந்தனையை கர்த்த ராகிய இயேசு முன்பே அறிந்து, அதற்கான விடையை இங்கு அளித்திருக்கிறார்.

இவ்வுலகக் காரியங்களைக் குறித்ததான விசாரமுள்ள ஆவியை விட்டு விலகும்படி கர்த்தர் நமக்குப் போதிக்கிறார். “**கவலைப்படாதிருங்கள்**”என்று அவர் நான்கு முறை கூறுகிறார். சரீரத்திற்காக, ஆகாரத்திற்காக, உடைக்காக மற்றும் நாளைய தினத்திற்காக “கவலைப்படாதிருங்கள்”. அதிக ஜாக்கிரதையா யும், அதிக ஆர்வமுடன் இராதேயுங்கள். எதிர்காலத்தைக் குறித்த விவேகமான முன்னேற்பாடு சரியே; ஆனால், அதிகப்படியான ஜாக்கிரதையும், எதிர்காலத்திற்கென்று நிலையற்ற அழிவுள்ள பொருள்களை அதிக ஆர்வமாய் சேர்த்து வைப்பதும் தவறு.

தேவன் தாம் சிருஷ்டித்த எல்லாவற்றிற்கும் தெய்வாதீன மான பாதுகாப்பை தொடர்ந்து அளிக்கிறார் என்பதை நமக்கு அவர் நினைவுபடுத்துகிறார். அவர் நமக்கு “ஜீவனை” கொடுத்தி ருக்கிறாரா? அப்படியானால், நிச்சயமாக, அதன் பராமரிப்பிற்கு தேவையான அனைத்துக் காரியங்களையும் அவர் நமக்குத் தரு வார். அவர் நமக்கு “சரீரத்தைக்” கொடுத்திருக்கிறாரா? அப்படி

யானால், நிச்சயமாக, அவர் நம்மை உடைக்காக அழிந்துபோக விடமாட்டார். நம்மை ஜீவனுள்ளோராக அழைத்த தேவன் சந்தேகமின்றி நம்மை ஆகாரத்தினால் போஷிப்பார்.

அதிக ஜாக்கிரதையின் பிரயோஜனமற்றத் தன்மையை அவர் குறிப்பிடுகிறார். நம்முடைய வாழ்க்கை நிச்சயமாகக் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. இவ்வுலகில் உள்ள எல்லா ஆதரவும் தேவன் நமக்கு நிர்ணயித்த காலத்தைக் கடந்து ஒரு மணித்துளி கூட நம்மை தொடர்ந்து பாதுகாக்காது. நம்முடைய வாழ்க்கையோடு ஒரு மணி நேரத்தைக் கூட நம்மால் கூட்ட முடியாது. நம்முடைய பணி இந்த உலகில் நிறைவேறும் வரை நாம் மரணமடைய முடியாது.

ஆகாயத்துப் பறவைகளினிடத்தில் கற்றுக் கொள்வதற்காக அவர் நம்மை அனுப்புகிறார். "அவைகள் விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை"; அவைகள் தங்கள் எதிர்காலத்திற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதுமில்லை; அவைகள் "களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை"; இனிவரும் காலத்திற்கென்று எதையும் களஞ்சியங்களில் அவைகள் சேர்ப்பதில்லை; தேவன் அவைகளுக்குத் தந்த உள்ளுணர்வை பயன்படுத்தி அநுதினமும் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெற்றுக் கொண்டு வாழ்கின்றன. **எந்தவொரு மனிதனும் கர்த்தர் தன்னை அழைத்த அழைப்பின் பணியை சரியாய் செய்தால், அவன் ஒருபோதும் தரித்திரனாக அனுமதிக்கப்படான் என்று ஆகாயத்துப் பறவைகள் நமக்கு போதிக்கின்றன.**

காட்டுப் புஷ்பங்களை கவனிக்கும்படி அவர் நமக்கு கட்டளையிடுகிறார். சொற்ப உழைப்போ அல்லது கடின உழைப்போ அவைகளின் பங்காய் இல்லாதபோதுங்கூட, ஆண்டாண்டுக் காலமாய், அவைகள் பிரகாசமான வண்ணங்களினால் அலங்கரிக்கப்படுகிறது; "அவைகள் உழைக்கிறதுமில்லை; நூற்கிறதுமில்லை". கர்த்தர், தம்முடைய சர்வ வல்லமையினால் அவைகளை ஒவ்வொரு காலத்திலும் அழகாய் உடுத்துவிக்கிறார். அதே கர்த்தர் தான் எல்லா விசுவாசிகளுக்கும் தகப்பன். "காட்டுப் புஷ்பங்களை" பார்க்கிலும் அவர்களை அழகாய் உடுத்துவிக்க அவரால் முடியும் என்பதை அவர்கள் ஏன் சந்தேகிக்க வேண்டும்?

அழிந்து போகின்ற புஷ்பங்களைக் குறித்து சிந்திக்கிற அவர், நிச்சயமாக அழிவில்லாத ஆத்துமாக்கள் வசிக்கின்ற சரீரங்களை அவர் ஒருபோதும் புறக்கணியார்.

இவ்வுலக காரியங்களை குறித்ததான அதிக ஜாக்கிரதை ஒரு கிறிஸ்தவனுக்கு முற்றிலும் முட்டாள்தனமானது என்று அவர் நமக்கு தெரிவிக்கிறார். தற்காலத்திற்கென்று வாழ்வதே புறஜாதி வழக்கத்தின் சிறந்த பண்புகளில் ஒன்றாகும். புறஜாதியான் விரும்பினால், கவலை உடையவனாய் இருக்கட்டும்; அவன் பரலோகத்தில் இருக்கிற பிதாவைக் குறித்து ஒன்றும் அறியான்; ஆனால், தெளிவான அறிவும் புத்தியும் உடைய கிறிஸ்தவன், தன்னுடைய விசுவாசம் மற்றும் மனதிருப்தியினால் இதனை மெய்ப்பிக்கக்கடவன். நாம் நேசிக்கின்றவர்களை இழக்கும் போது, "நம்பிக்கை அற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கிக்கக் கூடாது" (1தெச 4:13). இந்த வாழ்க்கையைக் குறித்த அதிகமான கவலைகளினால் வருந்தும்போது, நாம் தேவனற்றவர்களைப் போல அல்லது கிறிஸ்துவை அல்லாதவர்கள் போல அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டாம்.

கவலையுள்ள ஆவிக்கு எதிராக கிருபையுள்ள வாக்குத்தத்தத்தை பரிகாரமாக அவர் நமக்கு அருளுகிறார். நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய மகிமையையும், "முதலாவதாகவும், முதன்மையானதாகவும் தேடினால்", இவ்வுலகத்தில் நமக்கு தேவையாய் இருக்கிற அனைத்தும் நமக்குக் கொடுக்கப்படும் என்று அவர் உறுதி அளிக்கிறார்.

நம்முடைய பரலோக ஆஸ்திக்கும் மேலாக இது கூட்டப்படும். "தேவனிடத்தில் அன்பு கூறுகிறர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது"(ரோமர் 8:28)."உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" (சங் 84:11). கடைசியாக, ஞானமுள்ள நீதிமொழிகளில் ஒன்றை நிர்ணயிப்பதின் மூலம் இந்த பகுதியின் மீதான தன்னுடைய அனைத்து போதனைகளையும் அவர் முத்திரையிடுகிறார். "நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்". காரியங்கள் வருமுன் நாம் அவைகளைக் குறித்து கவலைப்பட வேண்டாம். இன்றையக்

காரியங்களை நாம் செய்து, நாளை விடியும் வரை நாளைக்கான கவலைகளை நாம் விட்டு வைப்போம். நாளைய தினத்தை காணும் முன்பாக நாம் மரிக்கலாம்; நாளை என்ன நடக்கும் என்பதை நாம் அறியோம். நாளைய தினம் நமக்கு சிலுவையைக் கொண்டு வந்தால், அதை அனுமதித்தவர் அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய கிருபையையும் நமக்கு அருள்வார் என்ற சத்தியத்தில் மட்டும் நாம் உறுதியாய் இருப்போமாக!

இந்த வேதப்பகுதி முழுவதும், பொன்னான போதனைகளின் பொக்கிஷமாய் இருக்கிறது. நம்முடைய அநுதின வாழ்வில் அவைகளை பயன்படுத்த நாம் நாடுவோம்; அவைகளை வாசிப்பதோடு மட்டும் நிறுத்தி விடாமல், அவைகளை நடைமுறைப்படுத்துவோம்; கவலையும், அதிக ஜாக்கிரதையுமுள்ள ஆவியைக் குறித்து நாம் விழிப்புள்ளவர்களாய் இருந்து ஜெபிக்கக்கடவோம். இப்படிச் செய்வதினால் நாம் மகிழ்ச்சியாய் இருக்கலாம். நம்முடைய பாதிப் பிரச்சனைகளுக்குக் காரணம், நமக்கு நேரிடக்கூடும் என்று எண்ணுகிற காரியங்களைக் குறித்து கற்பனை செய்வதே; மீதி பாதி, நமக்கு வருமென்று எதிர்பார்க்கின்ற காரியங்கள் நமக்கு நேரிடாமற் போவதினால் உண்டாகிறது. நம்முடைய விசுவாசம் எங்கே? நம்முடைய இரட்சகரின் வார்த்தைகளில் நமக்கு இருக்கின்ற நம்பிக்கை எங்கே? இந்த வசனங்களை வாசித்த பிறகு, நம்முடைய இருதயங்களை உற்று நோக்கினால், நமக்கு நாமே வெட்கப்பட வேண்டும்."நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன்; ஆனாலும், நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை" என்ற தாவீதின் வார்த்தைகள் மெய்யென்று நாம் நிச்சயித்திருக்கலாம்.

வேதப்பகுதி : மத்தேயு 7 : 1 – 11

தலைப்பு : குற்றம் கண்டுபிடிப்பதை தவிர்த்து, ஜெபம் செய்தல்

இந்த வசனங்களின் முதல் பாகமானது அதனுடைய மெய்யான அர்த்தத்திற்கு அப்பாற்பட்ட விளக்கமளிப்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய வேத பகுதிகளில் ஒன்றாகும். மெய் கிறிஸ்தவத்தின் எதிராளிகளால் அடிக்கடி இது துஷ்பிரயோகம் பண்ணப்படுகிறது. வேதவார்த்தைகளை நாம் பலவந்தம் பண்ணும்போது, அவை மருந்தாக பயன்படாமல், விஷமாய் மாறுவதற்கான வாய்ப்பிருக்கிறது.

"குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று நமது ஆண்டவர் கூறும்போது, பிறர் மீதான நடத்தை மற்றும் கருத்துக்களைக் குறித்த அனுகூலமற்ற தீர்ப்பை எந்த சூழ்நிலையிலும் வழங்காதிருப்பது தவறு என்பதாய் அவர் இங்கு அர்த்தப்படுத்தவில்லை. நாம் தீர்மானிக்கப்பட்ட கருத்துக்களை கொண்டிருக்க வேண்டும். "எல்லாவற்றையும் சோதித்து பார்த்து", நாம் ஆவிகளையும் சோதித்து அறிய வேண்டும். நமக்கு நாமே பூரணராயும், குற்றமற்றவர்களாயும் இருக்கும்வரை, பிறருடைய பாவங்களையும், குற்றங்களையும் நாம் கண்டிப்பது தவறு என்றும், அவர் இங்கு அர்த்தப்படுத்தவில்லை. அப்படிப்பட்டதான வியாக்கியானம் மற்ற வேத பகுதிகளுக்கு முரணாயிருக்கும்; இது பிழையும் போலியுமான கொள்கைகளை கண்டிக்க வழியில்லாமல் ஆக்கிவிடும். அப்படியானால் போதகர் பாவிகளின் பாவத்தைக் குறித்தும், நீதிபதி குற்றவாளியின் குற்றத்தைக் குறித்தும் ஒருபோதும் தண்டிக்க முடியாது. "உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது" (*யோபு9:24*). கள்ள போதனை செழிக்கும்; தீமைசெய்வது பெருகும்.

குற்றங்குறைக் கண்டுபிடிக்கின்ற ஆவியை கடிந்து கொள்ள வேண்டும் என்று நமது ஆண்டவர் அர்த்தப்படுத்துகிறார்.

அலட்சியமான போக்கு அல்லது அற்பமான குற்றங்களுக்காக பிறரை நிந்திப்பது, மடத்தனமான, அஜாக்கிரதையான நியாயத் தீர்ப்புகளை வழங்கும் பழக்கத்தையும், நம்முடைய அயலகத்தாரின் குற்றங்களையும், பிழைகளையும் பெரிதுபடுத்தி, அவைகளை இன்னும் மோசமான நிலைக்குள்ளாக்குவதில் உள்ள விருப்பம் ஆகிய இவைகளை நமது ஆண்டவராகிய இயேசு தடுக்கிறார். பரிசேயர்கள் மத்தியில் இது பொதுவாகக் காணப் பட்டது. அவர்களுடைய காலந்தொடங்கி இந்நாள் மட்டும் இது பொதுவாய் காணப்படுகிறது. இதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நாம் பிறரைக் குறித்து "சகலத்தையும் விசுவாசித்து, சகலத்தையும் நம்ப" வேண்டும். ஆயினும், குற்றம் கண்டுபிடிப்பதில், வெகு நிதானமாய் இருக்க வேண்டும். இதுவே கிறிஸ்தவ அன்பு (1கொரி13:7).

கிறிஸ்தவம் சம்பந்தமான காரியங்களை நாம் மனிதர்களோடு பேசும்போது, விவேகத்தோடிருப்பதன் முக்கியத்துவத்தை இந்த வசனங்களின் இரண்டாம் பாகம் நமக்கு போதிக்கிறது. ஒவ்வொன்றும், அதினதின் காலத்திலும், இடத்திலும் அழகாய் இருக்கிறது. நம்முடைய வைராக்கியமானது காலங்கள், இடங்கள் மற்றும் மனிதர்களின் விவேகமுள்ள சிந்தையால் வலுவூட்டப்பட வேண்டும். "பரியாசக்காரனைக் கடிந்துக் கொள்ளாதே, அவன் உன்னை பகைப்பான்" என்று சாலொமோன் கூறுகிறார் (நீதி9:8). ஆவிக்குரியக் காரியங்கள் மீதான நமது எண்ணங்களை வெளிப்படையாக அனைவரிடமும் கூறுவது ஞானமற்றது. இன்று அநேகர், மூர்க்க மனநிலைகள் அல்லது வெளிப்படையான ஒழுக்கமற்ற பழக்கங்களினால் சுவிசேஷத்தின் காரியங்களை மதிக்க முற்றிலும் இயலாதவர்களாய் இருக்கிறார்கள். நாம் அவர்களுடைய ஆத்துமாவிற்கு நன்மை செய்ய முயற்சித்தால், அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு, மிகுதியான பாவங்களைச் செய்ய முற்படுவர்; இப்படிப்பட்ட ஜனங்களுக்கு கிறிஸ்துவின் நாமத்தை தரிப்பிப்பது, மெய்யாகவே, "பன்றிகளுக்கு முன் முத்துக்களை போடுவதற்கு" சமமாகும். அது அவர்களுக்கு நன்மை செய்யாமல், தீமையே அளிக்கிறது. அது அவர்களுடைய எல்லா அசுத்தங்களையும் கிளறி, அவர்களை மூர்க்கமடையச் செய்கிறது; சுருக்கமாக, கொரிந்துவிலுள்ள

யூதர்களைப் போன்று அல்லது நாபாலைப் போன்று அவர்கள் இருக்கிறார்கள் (அப்18:6). வேதம் நாபாலைக் குறித்து இப்படியாக எழுதியுள்ளது. "இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக் கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார்" (1சாமு 25:17).

நமக்குக் கொடுக்கப்பட்ட போதனையை சரியான முறையில் பின்பற்ற கடினமாய் இருக்கிறது. அதினுடைய சரியான பயன்பாட்டிற்கு அதிக ஞானம் அவசியமாய் இருக்கிறது. அதிக வைராக்கியத்தைக் காட்டிலும் அதிக ஜாக்கிரதையினாலே நம்மில் அநேகர் தவறிழைக்கின்றோம். பொதுவாக, நாம் "பேசுகின்ற காலத்தை" விட, "அமைதலாய் இருக்கின்ற காலத்தை" ஒழுங்குபடுத்த நினைவு கூற வேண்டும். ஆனபோதிலும், நம்முடைய எல்லா இருதயங்களிலும், சுய பரிசோதனை செய்கின்ற ஆவி எழுப்பப்பட வேண்டும் என்று இந்தப் பகுதி வலியுறுத்துகிறது. நம்முடைய கோபம் மற்றும் எரிச்சலான ஆவியினால், நம்முடைய நண்பர்களினால் நமக்கு அளிக்கப்படும் நல் அறிவுரைகளை நாம் என்றாவது சரி பார்த்திருக்கிறோமா? நம்முடைய அகம்பாவம் மற்றும் புத்திக் கூறுவதில் பொறுமையின்மை, அலட்சியப் போக்கினால் தங்களுடைய சமாதானத்தை பற்றிக் கொண்டு, பேசாதிருக்கும்படி நாம் பிறருக்கு என்றாவது உதவி செய்துள்ளோமா? நம்முடைய அன்பான ஆலோசகர்களுக்கு விரோதமாக திரும்பி, நம்முடைய மூர்க்கத்தினாலும், உணர்ச்சியினாலும் என்றாவது அவர்களை நாம் அமைதிப்படுத்தி இருக்கிறோமா? இந்த விஷயத்தில் நாம் அடிக்கடி தவறிழைத்ததைக் குறித்து பயப்பட வேண்டும்.

ஜெபத்தின் கடமை மற்றும் ஜெபிப்பதற்கான சிறந்த உற்சாக மூட்டுதலை இந்த வசனங்களின் கடைசி பாகம் நமக்கு போதிக்கிறது. இந்த பாடத்திற்கும், இதற்கு முந்தையப் பாடத்திற்கும் இடையே ஒரு அருமையான தொடர்பு இருக்கிறது. நாம் எப்போது "அமைதலாய்" பேச வேண்டும், அல்லது எப்போது நாம் "பரிசுத்த காரியங்களை" முன் கொண்டு வந்து நம்முடைய "முத்துக்களை" பிறப்பிக்க வேண்டும் என்று அறிய விரும்புகிறீர்களா? நாம் ஜெபிக்க வேண்டும். இந்த காரியத்திற்கே கர்த்தராகிய இயேசு அதிக முக்கியத்துவம் அளித்தார்; அவர் பயன்படுத்

திய வார்த்தைகளே இதற்கு தெளிவான ஆதாரமாகும். அவர் ஜெபத்தின் கருத்தை வெளிப்படுத்த, “கேள்”, “தேடு” மற்றும் “தட்டு” என்கிற இந்த மூன்று வெவ்வேறு வார்த்தைகளை பயன்படுத்தினார். உண்மையாய் ஜெபிக்கிறவர்களுக்கு அவர் விசாலமான, நிறைவான வாக்கை வைத்திருக்கிறார்; “கேட்கிற யாவரும் பெற்றுக் கொள்வார்கள்”. நம்முடைய ஜெபங்களை கேட்கக் கர்த்தருடைய ஆயத்த நிலையை, பூமியிலுள்ள பெற்றோர்களின் பிரசித்தமான வழக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு விவாதத்தின் மூலம் அவர் விளக்குகிறார்; இயல்பாகவே, துன்மார்க்கமும், சுயநலமும் உடைய அவர்கள், தங்கள் பிள்ளைகளுடைய மாம்சீக தேவைகளை நிறைவேற்ற அசட்டை செய்வதில்லை; இவைகளுக்கு மேலாக, அன்பும், இரக்கமுள்ள நம்முடைய தேவன், கிருபையினாலே தம்முடைய பிள்ளைகளாய் இருக்கிற யாவருடைய கூக்குரலுக்கும் செவி கொடுக்கிறார்.

ஜெபத்தைக் குறித்து நமது ஆண்டவரின் இந்த வார்த்தைகளை நாம் சிறப்பாக கவனிப்போம். அவருடைய வாக்கியங்களில் சில, இதைப் போன்று பிரசித்திப் பெற்றதும், அடிக்கடி சொல்லப்பட்டதுமாய் இருக்கிறது. “நாம் தேடாவிட்டால், நாம் கண்டுபிடிக்க மாட்டோம்” என்று எளியோரும், கல்வியறிவு அற்றவர்களும் பொதுவாக நமக்குச் சொல்வதுண்டு. ஆனால், நாம் அதை பயன்படுத்தாமல் அறிந்திருப்பதில் மட்டும் என்ன நன்மை இருக்கிறது? ஞானமானது, விருத்தியடைந்து, சிறந்த முறையில் பயன்படுத்தப்படாவிட்டால், கடைசி நாளில் நம்முடைய தண்டனையை மட்டுமே அதிகரிக்கும்.

“கேளுங்கள், தேடுங்கள் மற்றும் தட்டுங்கள்” இதை குறித்து நாம் ஏதேனும் அறிவோமா? நாம் ஏன் அறிய கூடாது? ஒரு மனிதன் ஜெபிக்க வேண்டும் என்ற மெய்யான மன உறுதிக் கொண்டிருந்தால், ஜெபிப்பதைப் போன்ற எளிமையான காரியம் வேறொன்றும் இல்லை. மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில், மனிதர்கள் இதை செய்ய தாமதிப்பார்கள். இதை செய்வதற்கு முன்பாக, மதக் காரியங்களை அவர்கள் பயன்படுத்துவர். அநேக மதச் சடங்குகளை கடைப் பிடிப்பர். இருப்பினும், ஜெபம் இல்லாவிட்டால், எந்த

ஆத்துமாவும் காப்பாற்றப்பட முடியாது.

நாம் மெய்யாகவே ஜெபிக்கின்றோமா? இல்லை என்றால், நாம் கடைசியில், நாம் தேவனுக்கு முன்பாகக் குற்றமுள்ளவர்களாய் காணப்படுவோம். நாம் செய்யக் கூடாதவற்றை செய்யாததினாலோ அல்லது அறியக் கூடாதவற்றை அறியாததினாலோ நாம் தண்டிக்கப்படோம்; ஆனால், நாம் ஏன் தொலைந்து போனோம் என்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று நாம் இரட்சிக்கப்படும்படி நாம் ஒருபோதும் அவரிடம் “கேட்டதில்லை”.

நாம் உண்மையாகவே ஜெபிக்கின்றோமா? அப்படியெனில், நாம் இடைவிடாமல் ஜெபிப்போம். அது வீணான பிரயாசமன்று; அது பிரயோஜனமற்றதுமன்று; அநேக நாட்களுக்குப் பிறகு, அது கனி கொடுக்கும் “கேட்கிற யாவரும் பெற்றுக் கொள்வார்கள்” என்ற வார்த்தைகள் ஒருபோதும் தவறாது.

வேதப்பகுதி : மத்தேயு 7 : 12 – 20
தலைப்பு : பிறருக்கான கடமையின் கட்டளை – இரண்டு பாதைகள் – கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கை

மலைப் பிரசங்கத்தின் இப்பகுதியில் நமது ஆண்டவர் தம்முடைய பிரசங்கத்தின் முடிவுரையைத் துவங்குகிறார். அவர் நம்முடைய கவனத்திற்காக இங்கே வற்புறுத்துகின்ற பாடங்கள் யாவும் பரந்த, பொதுவான மற்றும் ஆழமான ஞானக் கருத்துக்களைக் கொண்டது; ஒன்றன்பின் ஒன்றாக நாம் அதை குறித்துக் கொள்வோம்.

முதலாவதாக, அவர் மனிதனுக்கும், மனிதனுக்கும் இடையேயான எல்லாவித ஐயமுள்ள கேள்விகளுக்கான நமது வழிகாட்டுதலுக்கு ஒரு பொதுவான கொள்கையை வரையறுக்கிறார். பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அதையே நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும். பிறர் நமக்கு எப்படி பகிர்ந்தளிக்கிறார்களோ அப்படியே நாமும் அவர்களுக்கு செய்யகூடாது; ஏனெனில், அது வெறும் சுயநலமும், புறஜாதி வழக்கமுமாகும். பிறர் நமக்கு எப்படி பகிர்ந்தளிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அது போல, நாமும் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். இதுவே மெய் கிறிஸ்தவம் ஆகும்.

மெய்யாகவே, இது ஒரு பொன்னான கட்டளை அன்றோ! இது எல்லாவிதமான அற்பமான விரோதங்கள், பழிவாங்குதல், எல்லாவிதமான ஏமாற்றுக் காரியங்கள் மற்றும் தவறான காரியங்களை மட்டும் தடைசெய்யாமல் அதற்கும் மேலான காரியங்களையும் தடை செய்கின்றது. பாவம் நிறைந்த இந்த உலகில், மனிதனுக்கும், மனிதனுக்கும் இடையே எழுகின்ற நூற்றுக்கணக்கான கடினமானக் காரியங்களை இது தீர்த்து வைக்கின்றது. குறிப்பிட்ட நிலைகளில் நம்முடைய நடத்தைக்கான எண்ணற்ற சிறுசிறு விதிகள் வகுப்பதின் அத்தியாவசியத் தேவையை இது தவிர்க்கிறது; ஒரு மகத்தான கொள்கையைக் கொண்டு

முற்றிலும் விவாதத்திற்குரிய பகுதியை இது நீக்குகிறது; ஒவ்வொருவனும் தன்னுடைய கடமைப் பொறுப்பை உணரக்கூடிய சமநிலையையும், அளவையும் இது நமக்கு காண்பிக்கின்றது. நமது அயலகத்தார் நமக்கு இதைச் செய்யக்கூடாது என்று நாம் விரும்புகிற காரியம் ஏதாகிலும் உண்டா? அப்படி இருப்பின், அதே காரியத்தை நாம் அவர்களுக்குச் செய்யக் கூடாது என்று நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரியம் அவன் நமக்கு செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமா? பின்னர், அதே காரியத்தையே நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும். இந்த விதியானது உண்மையாய் கடைபிடிக்கப்பட்டதானால், எத்தனை அநேக நுணுக்கமானக் கேள்விகளுக்கு உடனே பதில் கிடைத்து விடும்!

இரண்டாவதாக, நமது ஆண்டவர், கிறிஸ்தவத்தில் அநேகருடைய வழிக்கு எதிரான ஒரு பொதுவான எச்சரிக்கையை நமக்கு தருகிறார். பிறரைப் போல நாம் சிந்தித்து, அவர்களைப் போல நாம் செய்வது மட்டும் போதாது. உலக சிநேகம் உள்ள மனிதர்கள் மத்தியில் வாழ்கின்ற நாம் நாகரீக வழக்கங்களை பின்பற்றுவதினால் அது நம்மை திருப்திபடுத்தாது. அவர் நித்திய வாழ்விற்கு நம்மை வழிநடத்துகின்ற பாதையானது “இடுக்கமானதும்”, வெகு “சிலரே” அதில் பயணம் செய்வார்கள் என்றும் கூறுகிறார். மேலும், அவர் நித்திய அழிவிற்கு செல்லும் பாதையானது “விஸ்தாரமானதும்”, “அநேகர்” அதில் பிரவேசிப்பார்கள் என்றும் கூறுகிறார். அதின் வழியாய் பிரவேசிப்பவர்கள் அநேகர் என்று வேதம் கூறுகிறது.

இவை அனைத்தும் பயப்படத்தக்க உண்மைகள்! இவைகளைக் கேட்கிற யாவரும் தங்கள் இருதயங்களையும், சிந்தைகளையும் ஆராய்ந்து அறிய வேண்டும். “எந்த பாதையில் நான் சென்று கொண்டிருக்கிறேன்?”, “எந்த பாதையின் வழியாய் நான் பயணிக்கின்றேன்?” இங்கே கூறப்பட்டுள்ள இவ்விரண்டு வழிகளில் ஏதாவது ஒன்றில் நாம் ஒவ்வொருவரும் காணப்படுவோம். கர்த்தர் தாமே நமக்கு சுத்தமான, தற்பரிசோதனை செய்கின்ற ஆவியை தந்து, நாம் எங்கே இருக்கிறோம் என்று நமக்கு காண்பிப்பாராக!

நம்முடைய கிறிஸ்தவத்தில் இப்படிப்பட்ட ஜனத்திரட்சி இருக்குமாயின், நாம் அதிகமாய் பயப்படவும், நடுங்கவும் வேண்டும். "பிறர் எங்கே செல்லுகிறார்களோ, அங்கே நாங்களும் செல்வோம்; அவர்கள் யாரை சேவிக்கிறார்களோ அவர்களை நாங்களும் சேவிப்போம்; கடைசியாக, அவர்கள் என்ன செய்கிறார்களோ அதையே நாங்களும் செய்வோம்". இதை தவிர வேறொன்றையும் நாம் சொல்லாதிருந்தால், நமக்கு நாமே கோபாக்கினையை வருவித்துக் கொள்வோம். இது, நாம் "விஸ்தாரமான வழியில்" இருப்பதை அன்றி வேறெதைக் குறிக்கின்றது. இப்பாதையின் முடிவாகிய "நித்திய அழிவில்" நாம் இருக்கிறோம் என்பதை அல்லாமல் வேறெதை இது குறிக்கின்றது. அப்படிப்பட்ட கிறிஸ்தவம் இரட்சிக்கும் கிறிஸ்தவம் அன்று.

நாம் பயபக்தியோடு பின்பற்றுகின்ற கிறிஸ்தவமானது, பிரபல்யமானது அல்ல என்பதினால் நாம் மனமுறிவடைய வேண்டிய அவசியமில்லை. இதை சிலர் நம்மோடு கூட அங்கீகரிப்பர். ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாய் இருக்கிறது என்று இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் நினைவு கூற வேண்டும். மனந்திரும்புதல், கிறிஸ்துவிலுள்ள விசுவாசம் மற்றும் பரிசுத்த ஜீவியம் இவை ஒருபோதும் நாகரீகமானதன்று. மெய்யான கிறிஸ்துவின் மந்தை எப்போதுமே சிறிய கூட்டமாய் இருக்கும். நாம் தனிப்பட்டவர்கள், நூதனமானவர்கள், மத வைராக்கியம் உடையவர்கள் மற்றும் குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்ற எண்ணங்களினால் நாம் அசைக்கப்படக் கூடாது. இது "இடுக்கமும், நெருக்கமுமான வாசல்". நிச்சயமாகவே, வெகுத் திரளான ஜனங்களோடு நித்திய அழிவிற்குள் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் வெகு சிலரோடு நாம் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதே மேலானது.

கடைசியாக, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, திருச்சபையில் உள்ள கள்ளப் போதகர்களுக்கு எதிரான ஒரு பொதுவான எச்சரிப்பை நமக்கு அருளுகிறார். "கள்ளத் தீர்க்கதரிசிகளைக்" குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

இப்பகுதிக்கும், இதற்கு முந்தைய பகுதிக்கும் இடையேயானத் தொடர்பு விசேஷமானது. "விஸ்தாரமான வாசலை" குறித்து நாம் தெளிவுள்ளவர்களாய் இருக்கிறோமா? கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; அவர்கள் எழுந்திருப்பார்கள்; தவறான வித்துக்கள் விதைக்கப்படுவதற்கு முன்பே, அவர்கள் அப்போஸ்தலர்களின் காலத்தில் தோன்ற ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்து, அவர்கள் உருவாக ஆரம்பித்தார்கள்; அவர்களுக்காக நாம் ஆயத்தமாகி நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட எச்சரிப்பு நமக்கு மிகவும் அவசியமானது. கிறிஸ்தவத்தில் சொல்லப்படுகின்ற அனைத்தையும், அதிகாரமுடைய ஊழியரிடமிருந்து கேட்கிற எதையும் விசுவாசிக்க ஆயிரக்கணக்கானோர் ஆயத்தமாய் இருப்பார்கள். சாதாரண மனிதர்களைப் போல போதகர்களாலும் தவறிழைக்க முடியும் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். அவர்கள் தவறாதவர்கள் அல்லவே. பரிசுத்த வேதாகமம் எனும் தராசில் அவர்கள் போதனைகள் அளவிடப்பட வேண்டும். அவர்களுடைய கொள்கைகள் வேதத்தோடு ஒத்துப் போகின்றவரை, அவைகள் கைக்கொள்ளப்பட்டு விசுவாசிக்கப்பட வேண்டும். ஆனால், அதிலிருந்து தவறினால், ஒரு நொடிப்பொழுது கூட அதை விசுவாசிக்கக் கூடாது. "அவர்களுடைய கனிகளினாலே" அவைகளை நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். வலுவான கொள்கையும், பரிசுத்த ஜீவியமுமே மெய்யான தீர்க்கதரிசிகளுக்கான அடையாளங்கள். இதை நாம் நினைவு கூறுவோம். நமது ஊழியக்காரரின் தவறுகள் நம்முடைய தவறுகளை மன்னிக்காது. "குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" என்று வேதம் கூறுகிறது (மத் 15:14).

கள்ளப் போதனைக்கு எதிரான சிறந்த பாதுகாப்பு எது? எல்லா சந்தேகங்களுக்கும் அப்பால், பரிசுத்த ஆவியானவரின் கற்பித்தல் வேண்டி ஜெபத்தோடு கூடிய கர்த்தருடைய வார்த்தையை முறையாய் தியானித்தலே ஆகும். இந்த வேதம் நம்முடைய கால்களுக்குத் தீபமாகவும், நம் பாதைக்கு வெளிச்சமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது (சங்119:105). இதை முறையாய், சரியாய் வாசிக்கிற மனுஷ்ன், ஒருபோதும்

பெரிதாக பாவஞ்செய்ய அனுமதிக்கப்படான். வேதத்தை நிராகரிப்பதே, நம்மில் அநேகர் கள்ள போதகர்களுக்கு இரையாகி விட நேரிடுகிறது. அவர்கள் கல்வி அறிவற்றவர்கள், தீர்மானிக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் அல்ல என்று கூறி நம்மை நம்பச் செய்வார்கள். உண்மையில், அவர்கள் வேதத்தை வாசிக்க சோம்பேறித்தனமாயும், தங்களுக்காக சிந்திக்க விரும்பாதவர்களாயும், இருக்கிறார்கள். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு சீடர்களைக் கொடுப்பது தாழ்மை எனும் அங்கியின் கீழ் ஆத்மீக சோம்பேறிகளே அல்லாமல் வேறொருவருமில்லை.

நம்முடைய கர்த்தருடைய எச்சரிப்பை நாம் அனைவரும் நம் சிந்தையில் வைப்போமாக. உலகம், பிசாசு மற்றும் மாம்சம் ஆகிய இவைகள் மட்டுமே ஒரு கிறிஸ்தவனின் பாதையில் வரும் அபாயங்கள் அன்று; இதைத் தவிர வேறொன்றும் இருக்கிறது, அதுவே "கள்ளத் தீர்க்கதரிசி" ஆகும். அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்திய ஓநாய்கள் போன்றவர்கள். தன் வேதத்தை நேசித்து அதிகமாய் ஜெபித்து, கிறிஸ்தவத்திலுள்ள சத்தியத்திற்கும், கள்ளப் போதனைக்குமிடையேயான வேறுபாட்டை பகுத்தறிகிறவன் பாக்கியவான்! வேறுபாடு இருக்கின்றது. அதை நாம் அறியவும், நம்முடைய ஞானத்தை பயன்படுத்தவும் வேண்டும்.

வேதப்பகுதி : மத்தேயு 7 : 21 – 29

தலைப்பு : பயிற்சியற்ற தொழிலின் பிரயோஜனமற்றத் தன்மை, இரண்டு விதமான கட்டுபவர்கள்

கர்த்தராகிய இயேசு, இருதயத்தை ஊடுருவிச் செல்கின்ற பயன்பாடு நிறைந்த ஒரு பகுதியின் மூலம் தன்னுடைய மலை பிரசங்கத்தை நிறைவு செய்கிறார். அவர், கள்ளத் தீர்க்கதரிசிகளிடம் இருந்து போலி போதனையாளர்களிடத்துக்கும், சீர்கெட்ட போதகர்களிடமிருந்து பகுத்தறிவற்ற ஜனங்களிடமாகத் திருப்புகிறார். நம் அனைவருக்கான மெய் வார்த்தை இங்கே இருக்கிறது. நாம் நம்முடைய இருதயங்களில் இவற்றை அப்பியாசப்படுத்த கிருபைப் பெறுவோமாக!

முதலாவதாக, ஒரு வெளிப்புறமான கிறிஸ்தவ ஊழியத்தின் பிரயோஜனமற்றத் தன்மையைக் கூறுகிறது. "கர்த்தாவே, கர்த்தாவே" என்று கூப்பிடுகிற யாவரும் பரலோக இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க மாட்டான். கிறிஸ்தவர்கள் என்று தங்களை பகிரங்கமாய் அழைத்துக் கொள்கின்ற யாவரும் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல.

இதை நாம் கவனிப்போம். ஆத்தும இரட்சிப்பிற்கு தேவையானதாக கருதுகின்ற அநேகக் காரியங்களை விட மேலானவற்றை இது போதிக்கிறது. நாம், கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, நம்முடைய உன்னதமான ஆசீர்வாதங்களுக்காக திட நம்பிக்கையோடு பெருமிதம் கொள்ளலாம்; நாம் அறிவு பூர்வமான ஞானத்தைக் கொண்டிருந்து, நம்முடைய சொந்த நிலையிலே சுய திருப்தி உள்ளவர்களாய் காணப்படலாம். நாம் பிரசங்கியாளர்களாகவோ, பிறருக்கு போதிக்கின்ற ஆசிரியர்களாகவோ, திருச்சபையோடு இணைந்த "அநேக உன்னதமான பணிகளை" செய்பவர்களாகவோக்கூட இருக்கலாம்; இருப்பினும், நாம் எந்நேரமும் பரத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் சித்தத்தின்படியே, எல்லாக் காரியங்களையும் செய்கிறோமா? நாம் மெய்யாகவே, மனந்திரும்பி,

உண்மையாகவே கிறிஸ்துவை விசுவாசித்து, பரிசுத்தமும், தாழ்மையுமான வாழ்க்கை வாழ்கின்றோமா? நம்முடைய எல்லா கிருபையான ஈவுகளும், ஊழியமும் இருந்த போதிலும், நாம் மேற்சொன்ன வாழ்க்கை வாழாவிட்டால், நிச்சயமாகவே இறுதியில் நாம் பரலோகத்தை தவறவிட்டு என்றென்றுமான நித்திய நரகத்தில் இருப்போம். "நான் உங்களை அறியேன்; என்னை விட்டு அகன்று போங்கள்;" என்ற பயங்கரமான கர்த்தருடைய வார்த்தைகளை நாம் கேட்போம்.

நியாயத்தீர்ப்பின் நாளிலே அநேக நூதனமான காரியங்கள் வெளிப்படுத்தப்படும். வாழும்போது சிறந்த கிறிஸ்தவர்கள் என்றெண்ணிய அநேகருடைய நம்பிக்கைகள் யாவும், முழுவதுமாக நாசமாக்கப்பட்டு விடும். அந்நாளிலே, அவர்களுடைய கிறிஸ்தவத்தின் பிரயோஜனமற்றத் தன்மை வெளிப்படுத்தப்பட்டு, முழு உலகிற்கு முன்பாகவும், அவமானப் படுத்தப்படுவார்கள். பின்னர், இரட்சிக்கப்படுவது என்பது "ஊழியம் பண்ணுவது" என்ற கருத்திற்கும் மேலானது என்று அந்நாளில் மெய்ப்பிக்கப்படும். நம்முடைய கிறிஸ்தவத்தை நாம் பகிரங்கமாகக் கூறுவதைப் போல அதை "நடைமுறை" படுத்த வேண்டும். நாம் அடிக்கடி அந்த பிரதான நாளைக் குறித்து சிந்திக்கக்கடவோம்; நாம் கர்த்தரால் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கும் "நியாயந்தீர்க்கப்படாதபடிக்கும் நம்மை நாமே அனுதினமும் நியாயந்தீர்க்கக் கடவோம்". நாம் எப்படிப் பட்டவர்களாயினும் உண்மை, சத்தியம் மற்றும் நேர்மை உள்ளர்களாய் இருக்க முயற்சி செய்வோம்.

இரண்டாவதாக, கிறிஸ்தவத்தில் காணப்படும் இரு தரப்பு மக்களைப் பற்றிய ஒரு விசேஷமான சித்திரம் ஆகும். கிறிஸ்தவ சத்தியங்களைக் கேட்டு அதன்படி ஒன்றும் செய்யாதவர்கள், கிறிஸ்தவ சத்தியங்களைக் கேட்டு அதன்படி செய்கிறவர்கள் ஆகிய இவ்விரு கூட்டத்தாரும் நமக்கு முன்பாக குறிப்பிடப் பட்டுள்ளார்கள். அவர்கள் சென்றடைகின்ற முடிவான இடங் கள் வரையிலான அவர்களுடைய சரித்திரங்களும் விவரிக்கப்பட் டுள்ளன.

கிறிஸ்தவ போதனைகளை கேட்டு, தான் கேட்ட போதனை

களின் படி நடக்கிற மனுஷன் "கற்பாறையின் மீது தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு" ஒப்பாவான். மனந்திரும்பி, கிறிஸ்துவை விசுவாசித்து, பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும் என்கிற எச்சரிக்கைகளை கேட்பதோடு மட்டும் அவன் திருப்தி ஆவதில்லை; அவன் மெய்யாகவே மனந்திரும்புகிறான். அவன் உண்மையாகவே விசுவாசிக்கிறான். அவன் மெய்யாகவே தீமை செய்வதை நிறுத்தி, நன்மை செய்யக் கற்றுக் கொண்டு, பாவமான யாவற்றையும் வெறுத்து, நன்மையானதை பற்றிக் கொள்கிறான். அவன் கேட்கிறவன் மட்டுமல்லாமல் செயலாற்று கிறவனுமாய் இருக்கிறான் (யாக்1:22).

அதனுடைய விளைவு என்ன? சோதனையின் காலத்தில், அவனுடைய கிறிஸ்தவம் அவனை கைவிடவில்லை; சுகவீனம், துக்கம், வறுமை, ஏமாற்றம் மற்றும் இழப்புகள் போன்ற வெள்ளங்கள் அவன் மீது மோதினாலும், அவன் சோர்வடைய வில்லை. அவனுடைய ஆத்துமா அசையாமல் நின்றது; அவனு டைய விசுவாசம் நீங்கிப் போகவில்லை; அவனுடைய சௌகரி யங்கள் முழுவதுமாக அவனை கைவிடவில்லை. கடந்த காலத் தில், அவனுடைய கிறிஸ்தவம் அவனுக்கு பிரச்சனைகளை கொண்டு வந்திருக்கலாம்; அவனுடைய அஸ்திபாரமானது, மிகக் கடின உழைப்பாலும், கண்ணீரினாலும் சம்பாதிக்கப்பட் டிருக்கலாம்; கிறிஸ்து மீதான அவனுடைய ஆர்வத்தை கண்டு பிடிக்க அநேக நாட்கள் மெய்த்தேடலிலும், அநேக மணி நேரங்கள் ஜெபத்திலும் போராடுவது அவசியமாயிருக்கும். ஆனால், அவனுடைய உழைப்பு தூக்கியெறியப்படவில்லை. இப்போது அவன் வளமான பலன்களை அறுப்பான். சோதனையை சகிக்கிற கிறிஸ்தவமே மெய் கிறிஸ்தவமாகும்.

கிறிஸ்தவ போதனைகளைக் கேட்டு, தான் கேட்ட சத்தியங் களுக்கு மேலாக எதையும் செய்யாத மனுஷன், "மணலின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பா வான்". கேட்பதிலும், அங்கீகரிப்பதிலும் தன்னை திருப்தி செய்து கொள்கிறான். ஆனால் அதைத் தொடர்ந்து பின்பற்றமாட்டான். மேலும், தன் ஆத்துமாவில் எல்லாம் சரியாய் இருக்கிறதென்று தன்னைத் தானே மெச்சிக் கொள்வான். ஏனெனில், ஆத்மீகக் காரியங்களுக்கான உணர்ச்சிகள், திடநம்பிக்கை மற்றும்

விருப்பங்களைக் கொண்டுள்ளான். இவைகளிலே அவன் தங்கி இருப்பான். அவன் ஒருபோதும் பாவத்தை கலைய மாட்டான். மேலும், உலகத்தின் ஆவியை புறம்பே தள்ளமாட்டான்; அவன் மெய்யாகவே கிறிஸ்துவை பற்றிக் கொண்டிரான்; அவன் ஒருபோதும் சிலுவையை உண்மையாய் சுமப்பதில்லை; அவன் சத்தியத்தை கேட்கிறவனாக மட்டுமே இருப்பானேயன்றி, வேறொன்றும் அதிகமாகச் செய்யமாட்டான்.

இந்த மனிதனுடைய கிறிஸ்தவ வாழ்வின் முடிவு என்ன? அது முதல் சோதனையிலே முற்றிலுமாக அழிந்துவிடும். அவனுடைய தேவை அதிகமாய் இருக்கும்போது, அது அவனை கோடைகால வறண்ட நீரூற்றைப் போல முற்றிலுமாக ஏமாற்றுகிறது. அது தன்னை உடையோனை, மண்மேடுகளில் மோதி சிதறுண்டவனைப் போல நிர்கதியாகவும், திருச்சபைக்கு உண்டாகும் அவகீர்த்தியாயும், அவிசுவாசிக்கு பழிச்சொல்லாயும், தனக்குத்தானே கேடுண்டாக்குகிறவனாயும் விட்டு விடுகிறது. இதில் மெய்யான கருத்து என்னவெனில், விலை குறைவானது எதுவோ, அதன் மதிப்பும் குறைவானதே! நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவாத கிறிஸ்தவமும், எந்தவொரு ஆன்மீக காரியங்களையும் உள்ளடக்காத கிறிஸ்தவத்தின் பிரசங்கங்களைக் கேட்பதும், இறுதியில் பிரயோஜனமற்ற காரியமென்றே மெய்ப்பிக்கப்படும்.

இத்துடன், மலை பிரசங்கம் நிறைவடைகிறது. இப்படிப்பட்டதொரு பிரசங்கம் இதற்கு முன்பு பிரசங்கிக்கப்பட்டதும் இல்லை; இப்படிப்பட்ட பிரசங்கம் இதற்குப் பின்பு இதுவரை பிரசங்கிக்கப்படுவதும் இல்லை. நம்முடைய இருதயங்களில் இது நீங்காத செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக நாம் பார்க்க வேண்டும். இது நமக்கும், முதலாவது சத்தியத்தை கேட்கிற யாவருக்கும், விசேஷமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆன்மீகத் தேடலுக்கான பாடங்களை கேட்ட நாமே இதற்குக் கடனாளிகளாய் இருக்கிறோம். இப்பாடங்கள் சாதாரண போதனைகளைக் கொண்டதல்ல, அவை அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை. “நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்” என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் *(யோவான் 12:48).*

வேதப்பகுதி : மத்தேயு 8 : 1 – 15

தலைப்பு : அற்புத சுகம் பெற்ற ஒரு குஷ்டரோகி, ஒரு திமிர்வாதக்காரன் மற்றும் ஜுரத்தினால் வேதனைப்பட்ட பேதுருவின் மாமி

புனித மத்தேயு சுவிசேஷத்தின் எட்டாவது அதிகாரமானது நமது ஆண்டவரின் அற்புதங்களால் நிறையப்பட்டுள்ளது. இதில் ஐந்திற்கும் மேற்பட்ட அதிசயங்கள் விசேஷமாக பதிவாகி உள்ளது. இதில் மிக அழகான பொருத்தம் இருக்கிறது. இங்கு பொருத்தமாய் இருப்பது என்னவெனில், ஒருபோதும் பிரசங்கிக்கப்பட்டிராத சிறப்பான பிரசங்கமானது வல்லமையுள்ள ஆதாரங்களான அற்புதங்களினால் பின் தொடர்ந்தமையால், அந்த பிரசங்கியார் நிச்சயமாகவே தேவகுமாரன் தான் என்பதாகும். மலை பிரசங்கத்தை கேட்ட யாவரும், “இந்த மனுஷனை போல ஒருவனும் பேசினதில்லை” என்றும், இவரைப் போல அற்புதங்களை ஒருவனும் செய்ததில்லை என்றும் அறிக்கையிடுவர்.

நாம் வாசித்த இந்த வேதப்பகுதி மூன்று சிறப்பான அற்புதங்களைக் கொண்டுள்ளது. இயேசு தொட்டதின் மூலம் ஒரு குஷ்டரோகி குணமடைந்தான். ஒரு வார்த்தையின் மூலம் திமிர்வாதக்காரன் ஒருவன் குணமாக்கப்பட்டான். ஜுரத்தினால் அவதிப்பட்ட பெண் ஒருத்தி ஒரு கணப்பொழுதில் சுகம் பெற்று பெலன் அடைந்தாள். இம்மூன்று அற்புதங்களில் இருந்து நாம் மூன்று விசேஷமான பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். நாம் அவைகளை ஆராய்ந்து, அவைகளை நம் இருதயத்தில் நிலை நிறுத்திக் கொள்வோம்.

முதலாவதாக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை எவ்வளவு பெரியது என்பதை நாம் கற்றுக் கொள்வோம். குஷ்டரோகமானது மிகக் கொடிய நோயாகும். அது மனித உடலை அதிகளவில் சேதப்படுத்தக்கூடும். இந்நோயை உடையவன் உயிரோடிருந்த போதிலும், செத்தவனைப் போல் இருப்பான்; வைத்தியர்களால் “குணமாக்க முடியாத”

நோய் என்ற நிலைப்பாட்டில் இருந்தது இந்நோய் (2இரா5:7). இருந்த போதிலும் இயேசு "சுத்தமாகு" என்று கூறினார். உடனே அவன் குஷ்டரோகம் நீங்கி சொஸ்தமானான். திமிர்வாதக்காரனை பார்க்காமல், ஒரு வார்த்தையினாலே குணப்படுத்தின அற்புதத்தை, நமது சிந்தைகளில் கூட எண்ணிப் பார்க்க முடியாது; இருப்பினும், இயேசு கட்டளையிட்டார், அது உடனே நிகழ்ந்தது.

ஜுரத்தினால் பாதிக்கப்பட்டு படுக்கையில் படுத்திருந்த ஒரு பெண்ணுக்கு விடுதலையைக் கொடுத்தது மட்டுமன்றி, ஒரு நொடியிலே பணிகளைச் செய்வதற்கு வேண்டிய பெலனை அளித்தது, இப்பூமியில் உள்ள எல்லா வைத்தியர்களின் திறமையையும் பிரமிக்கச் செய்கிறது; எனினும், இயேசு பேதுருவுடைய மனைவியின் தாயாரைத் "தொட்டார்", உடனே அவள் எழுந்து அவர்களுக்கு பணிவிடைச் செய்தாள். இவ்வற்புதங்கள் யாவும் சர்வ வல்லமையுள்ள ஒருவரின் செயல்களே. இதன் முடிவிலிருந்து தப்பிக்க வழி இல்லை. இது "தேவனுடைய விரல்" ஆகும் (யாத்8:19).

ஒரு கிறிஸ்தவனின் விசுவாசத்திற்கான பரந்த அஸ்திபாரத்தினை இங்கு நாம் கவனிக்கலாம்! இயேசுவினிடத்தில் வரவும், இயேசுவை விசுவாசிக்கவும், இயேசுவில் விசுவாசத்தின் வாழ்க்கை வாழவும் நமக்கு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும், அவர் மீது சாய்ந்து கொள்ள நாம் உற்சாகப்படுத்தப் படுகிறோம்; நம்முடைய கவலைகள் யாவையும் அவரிடத்தில் ஒப்புவிக்கவும், நம்முடைய ஆன்மீக பாரங்கள் யாவையும் அவர் மீது சுமத்தவும் நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவற்றை நாம் பயமின்றி செய்யலாம். அவர் சகலத்தையும் தாங்குவார்; அவர் கன்மலை. அவர் சர்வ வல்லமை உள்ளவர். "கிறிஸ்துவின் சர்வ வல்லமை எனும் தலையணை அன்றி வேறொன்றிலும் என் விசுவாசம் அயர்ந்த நித்திரை அடையாது" என்ற ஒரு புனிதனின் வார்த்தைகள் நலமானது. அவரால் மரித்தவனுக்கு உயிர் கொடுக்க முடியும்; அவரால் பெலவீனனுக்கு வல்லமை கொடுக்க முடியும்; அவரால் பலமற்றவர்களுக்கு பெலனை அதிகரிக்கச் செய்ய முடியும்; "நாம் பயப்படாமல் அவரை விசுவாசிக்

கக்கடவோம்". இவ்வுலகம் முழுவதும் கண்ணிகளினால் நிறைந்திருக்கிறது. நம்முடைய இருதயங்களோ பெலவீனமானது. ஆனால், இயேசுவினால் எல்லாம் செய்ய முடியும் (செய்ய முடியாது என்று எதுவும் இல்லை).

இரண்டாவதாக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கம் மற்றும் கருணையை பற்றி நாம் கற்றுக் கொள்வோம். நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்ற மூன்று நிகழ்ச்சிகளின் சூழ்நிலைகளும் முற்றிலும் வேறுபட்டது. "ஆண்டவரே! உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" என்ற குஷ்டரோகியின் பரிதாபக் குரலை அவர் கேட்டார்; நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை குறித்து அவருக்குச் சொல்லப்பட்டது. ஆனால் அவனை அவர் ஒரு போதும் கண்டதில்லை; பேதுருவின் மாமி "ஜுரமாய்க் கிடக்கிறதை" அவர் கண்டார், மேலும் அவர் ஒரு வார்த்தை பேசினார் என்று நமக்கு சொல்லப்படவில்லை; எனினும், கர்த்தராகிய இயேசுவின் இருதயம் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒரே விதமாகவே இருந்தது. ஒவ்வொரு சூழலிலும் அவர் இரக்கத்தைக் காட்ட தீவிரமாயும், குணப்படுத்த ஆயத்தமாயும் இருந்தார். ஒவ்வொரு வியாதியஸ்தனும் வெகுவாய் இரக்கம் பாராட்டப்பெற்று, வல்லமையாய் விடுவிக்கப்பட்டனர்.

நமது விசுவாசத்திற்கான இன்னொரு ஆழமான அஸ்திபாரத்தை நாம் இங்கு கவனிக்கலாம். நமது சிறந்த பிரதான ஆசாரியர் மிகவும் கிருபை உள்ளவர்; அவர் "நம்முடைய பலவீனங்களை" உணரக் கூடியவர்; அவர் நமக்கு நன்மை செய்வதில் ஒரு போதும் சோர்வடையார். சோர்வும், பிரச்சனைகளும் நிறைந்த இவ்வுலகின் மத்தியில், நாம் பெலவீனரும், வலுவற்ற மக்களாயும் இருக்கிறோம் என்பதை அவர் அறிவார். சுமார் 2014 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைப் போல, அவர் இப்போதும், நம்முடைய பெலவீனங்களைத் தாங்கிக் கொள்ளவும், நமக்கு உதவி செய்யவும் ஆயத்தமாய் இருக்கிறார். "அவர் ஒருவரையும் புறக்கணியார்" என்ற வேதவாக்கியத்திற்கேற்ப அவர் அன்று இருந்ததைப் போல இன்றும் இருக்கிறார் என்பது மெய்யே (யோபு 36:5). இயேசுவின் இருதயத்தைப் போல நமக்காக பரிதபிக்கக்கூடிய

இருதயம் வேறெதுவும் இல்லை.

இறுதியாக, கிருபையின் விசுவாசமானது எவ்வளவு விலையேறப்பட்ட காரியம் என்பதை நாம் கற்றுக் கொள்வோம். இவ்வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள நூற்றுக்கு அதிபதியை பற்றி நாம் குறைவானத் தகவல்களையே அறிவோம். அவனுடைய பெயர், தேசம், அவனுடைய கடந்த கால வாழ்க்கை யாவும் நமக்கு மறைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு காரியத்தை நாம் அறிவோம், அதென்னவெனில், அவன் கர்த்தரை விசுவாசித்தான். “ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்” என்றான். வேதபாரகரும், பரிசேயர்களும், அவிசுவாசிகளாய் இருந்தபோது அவன் விசுவாசித்தான் என்பதை நாம் நினைவு கூற வேண்டும்; இஸ்ரவேல் இயேசுவை தேவனென்று விசுவாசியாத வேளையில் புறஜாதியில் பிறந்த இந்த நூற்றுக்கு அதிபதி கிறிஸ்துவை விசுவாசித்தான்; “இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை” என்ற நமது ஆண்டவரின் புகழுரை அந்நாள் தொடங்கி இந்நாள் மட்டும் உலகம் முழுவதிலும் அவனைக் குறித்து வாசிக்கப்பட்டு வருகிறது.

இப்பாடத்தை நாம் இறுகப் பற்றிக் கொள்ளக்கடவோம். இது நினைவில் கொள்ளத் தகுதியானது. கிறிஸ்துவினுடைய வல்லமை மற்றும் உதவி செய்ய இருக்கும் மனவிருப்பத்தை நாம் விசுவாசிப்பதும், நம்முடைய நம்பிக்கையை நடைமுறை வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துவதும் அரிதானது மற்றும் விலையேறப்பட்ட வெகுமதி ஆகும். இப்படிப்பட்டவைகளை நாம் கொண்டிருந்தால், நாம் என்றென்றும் நன்றி உள்ளவர்களாய் இருக்கக்கடவோம். கிறிஸ்துவினிடம் உதவியற்ற, தொலைந்து போன பாவிகளாய் வருவதற்கு மனவிருப்பம் உள்ளவர்களாய் இருப்பதும், அவருடைய கரங்களில் நம்முடைய ஆத்துமாக்களை ஒப்படைப்பதும் சிறப்புரிமையாகும். இப்படிப்பட்ட மனவிருப்பம் நம்முடையதாய் இருப்பின், அதற்காக, நாம் கர்த்தரை என்றென்றும் போற்றக்கடவோம். ஏனெனில், அது கர்த்தருடைய ஈவு. அப்படிப்பட்ட விசுவாசமானது எல்லா ஈவுகளையும், இவ்வுலக ஞானத்தையும் விட மேலானது. தனக்கு

பாவநோய் பிடித்திருக்கிறது என்பதை தவிர வேறொன்றையும் அறியாத மனமாற்ற மடைந்த அநேக புறஜாதியார்கள், கிறிஸ்துவில் விசுவாசமாய் இருந்து, பரலோகத்தில் பிரவேசிப்பார்கள். ஆனால், அநேக படித்த கல்விமான்களும், மேதைகளும் என்றென்றைக்குமாய் நிராகரிக்கப்படுவார்கள். மெய்யாகவே விசுவாசிக்கிற யாவரும் பாக்கியவான்களே!

நாம் ஒவ்வொருவரும் இந்த விசுவாசத்தைக் குறித்து அறிவது என்ன? இது மிக உன்னதமான கேள்வி: நம்முடைய கல்வி அறிவு மிக குறைவாய் இருக்கலாம், ஆயினும், நாம் விசுவாசிக்கிறோமா? கிறிஸ்துவுக்காக கொடுப்பதற்கும், உழைப்பதற்குமான சந்தர்ப்பங்கள் நமக்குக் குறைவாய் இருக்கலாம். ஆனால் நாம் விசுவாசிக்கிறோமா? நாம் ஒருவேளை பிரசங்கிக்கவோ, எழுதவோ, சுவிசேஷத்திற்காக வாதாடவோ இயலாதவர்களாய் இருக்கலாம். இருப்பினும், நாம் விசுவாசிக்கிறோமா? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் வரை நாம் ஓயக் கூடாது! கிறிஸ்துவின் மீதான விசுவாசம் இவ்வுலகத்தின் பிள்ளைகளுக்கு சிறியதும், எளிமையான காரியமாகத் தோன்றும். அவர்கள் அதில் சிறப்பான அல்லது கம்பீரமான தொன்றையும் காணார்கள். ஆனால், கிறிஸ்து மீதான விசுவாசமானது, கர்த்தருடைய பார்வையில் மிகவும் விலையேறப்பட்டது. மேலும், எல்லா விலையேறப்பட்ட பொருட்களைப் போன்று அரிதானது. இதனால், மெய் கிறிஸ்தவர்கள் ஜீவிப்பார்கள்; இதனால், அவர்கள் நிலைத்து நிற்பார்கள். இதனால், அவர்கள் இவ்வுலகத்தை மேற்கொள்வார்கள். இந்த விசுவாசம் இல்லாமல் ஒருவனும் இரட்சிப்படைய முடியாது.

வேதப்பகுதி : மத்தேயு 8 : 16 – 27

தலைப்பு : போதனையாளர்களை சமாளித்ததில் கிறிஸ்துவின் ஞானம் – கடலிலுண்டான பெருங்காற்றை அமர்த்தினார்.

கிறிஸ்துவின் சீடராயிருக்க பகிரங்கமாய் முன் வருகிறவர்களை திறமையாய் சமாளித்த நமது ஆண்டவரின் ஞானத்தைக் குறித்ததான ஒரு தெளிவான உதாரணத்தை இவ்வசனங்களின் முதல் பகுதியில் நாம் காணலாம். இப்பகுதியானது, இக்காலங்களில் தொடர்ச்சியாக தவறாக எண்ணங் கொள்கின்ற விஷயத்திற்கு அதிக வெளிச்சம் கொடுக்கிறது. ஏனெனில், இது சாதாரண கவனத்திற்கும் மேலான கவனத்தை பெற தகுதியுடையது.

வேதபாரகன் ஒருவன் நமது ஆண்டவர் எங்கே போனாலும் அங்கே அவரை பின்பற்றி வர விரும்பினான். அந்த மனிதன் சார்ந்திருந்த வகுப்பையும், இக்காரியங்கள் சொல்லப்பட்ட காலத்தையும் நாம் பார்க்கும்போது, இது மிகவும் பிரத்யேகமான காரியமாகும். ஆனால், அவனுடைய பங்களிப்பு பிரத்யேகமான பதிலை பெற்றது. அது நேரடியாக ஏற்றுக் கொள்ளப்படவும் இல்லை, கண்டிப்பாக நிராகரிக்கப்படவும் இல்லை. “நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை” என்று நமது ஆண்டவர் பதிலளித்தார்.

நமது ஆண்டவரை பின்பற்றின மற்றொரு சீடன் முன்வந்து, சீடத்துவ பாதையில் முன்னேறிச் செல்வதற்கு முன்பாக, மரித்த தன்னுடைய தகப்பனை அடக்கம் பண்ணுவதற்கு அனுமதி வேண்டி நின்றான்; அவனுடைய கோரிக்கையானது முதல் பார்வையிலேயே, இயல்பானதும், நியாயமானதுமாய் தோன்றும். “மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னை பின்பற்றி வா” என்று ஏற்கனவே உரைத்த பதிலைப் போன்ற ஒரு பதிலையே நமது ஆண்டவரின் நாவிலிருந்து அது வரவழைத்தது. இவ்விரண்டுக் கூற்றுகளிலும் ஏதோ ஆழமான

அறிவுறுத்தலான செய்தி அடங்கி உள்ளது. பகிரங்க பயபக்தி உள்ள கிறிஸ்தவர்கள் யாவராலும் அவை நன்கு நிதானிக்கப்பட வேண்டும். அவை தெளிவாக நமக்கு போதிப்பது என்னவெனில், கிறிஸ்துவுக்கு மெய் சீடராய் இருக்க முன்வந்து தங்களை அர்ப்பணிக்க விருப்பமுள்ள ஜனங்கள் யாவரும், அப்பணியை துவங்கும் முன்பே அதைக் குறித்ததான “விலைக் கிரயத்தை எண்ணிப் பார்க்க” வேண்டும் என்பதாகும். அவர்கள் கடினப் பாதையை சகித்துக் கொள்ள ஆயத்தமாய் இருக்கிறார்களா? அவர்கள் சிலுவையை சுமக்க ஆயத்தமா? அப்படி இல்லையெனில், அவர்கள் சீடத்துவப் பணியை துவங்க இன்னும் தகுதி பெறவில்லை. அவை மிகத் தெளிவாக நமக்கு போதிப்பது என்னவெனில், ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் இழக்க வேண்டிய தருணங்கள் வரும், அதிலும், பெற்றோரின் அடக்கக் காரியங்களில் பங்கு கொண்டு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைக் கூட அதை நிறைவேற்றும்படி பிறர் வசம் ஒப்படைக்க வேண்டிய சூழலும் ஏற்படலாம். அப்படிப்பட்ட கடமைகளைச் செய்ய சிலர் எப்போதும் ஆயத்தமாய் இருப்பார்கள்; ஆனால், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கின்ற மகத்தான பணிக்கும், இவ்வுலகில் செய்கின்ற கிறிஸ்துவின் பணிக்கும் ஈடாக இந்த கடமைகள் ஒருபோதும் இருக்க முடியாது.

கிறிஸ்துவின் சபைகளில் இப்போதிருப்பதை விட நமது ஆண்டவருடைய இந்த வார்த்தைகளை அதிகமாய் நினைவு கூறுவது அவர்களுக்கு நலமாய் இருக்கும். இவ்வார்த்தைகளில் அடங்கியுள்ள போதனையானது சுவிசேஷ ஊழியர்களால் அநேக முறை தண்டிக்கப்படாமலிருந்தும்,ஊழியத்தின் “விலைக் கிரயத்தை” எண்ணிப் பார்க்க ஒருபோதும் எச்சரிக்கப்படாத ஆயிரக்கணக்கானோர் முழு ஒத்துழைப்போடு தங்களை அர்ப்பணித்ததும் வருத்தத்திற்கு உரியதே. தன்னிச்சையான ஊழியம் செய்கின்ற ஒவ்வொருவராலும் கிறிஸ்துவின் சேனை நிரப்பப்படுவதில்லை. இதுவே கிறிஸ்தவத்திற்கு செய்யும் அதிக தீமையாக இருக்கிறது. ஆனால், அவர்களோ சொற்ப வாழ்வுக்காக மனமுவந்து ஊழியஞ் செய்கிறவர்களாகவும், தங்கள் சொந்த அனுபவங்களை தங்குத் தடையின்றி பேசுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். வெறும் எண்ணிக்கை மட்டும் கிறிஸ்தவத்திற்கு

பலத்தை அளிக்க முடியாது என்பது மறக்கப்பட்டு விடுகிறது. மேலும் திரளான வெளிப்புற கிறிஸ்தவம் இருக்கும் இடத்தில் மெய்யான கிருபை சிறிதளவே இருக்கிறது. கிறிஸ்துவை பின்பற்றுகின்ற இளைய போதகர்கள் மற்றும் விசாரணைக்காரர்களுக்கு நாம் ஒன்றையும் புறம்பாக வைக்காதிருப்போம்; போலிப் போதனைகளின் மீது அவர்களை நாம் பட்டியலிடாதிருப்போம். இறுதியில், மகிமையின் கிரீடம் ஒன்றுண்டு என்பதை அவர்களுக்கு தெளிவாக நாம் கூறுவோம். ஆயினும், கிறிஸ்தவப் பாதையிலே அனுதின சிலுவை உண்டென்பதை நாம் மிகத் தெளிவாக அவர்களுக்கு சொல்வோம்.

அதிகமான குறைகள் மற்றும் பலவீனங்களால் அடிக்கடி கலக்கப்படுவதே உண்மையான மீட்பின் விசுவாசம் என்பதை நாம் இவ்வசனங்களின் கடைசி பகுதியில் கற்கிறோம். இது தாழ்மையான போதனையாய் இருந்தாலும், மிகுந்த ஆரோக்கியமான போதனை ஆகும்.

நமது ஆண்டவரும், அவருடைய சீஷர்களும் ஒரு படகிலே கலிலேயாக் கடலை கடப்பதாக நமக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அப்பொழுது, பெருங்காற்று உண்டாகி, படவு அலைகளினால் மோதப்பட்டு தண்ணீரினால் மூடப்படத்தக்க அபாயம் ஏற்பட்டது. இதற்கிடையில், நமது ஆண்டவர் நித்திரையாய் இருந்தார். அலைகளைக் கண்டு பயந்து போன சீஷர்கள் அவரை எழுப்பி, தங்களை காக்கும்படி அவரிடம் மன்றாடினார்கள். அவர் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டு, வார்த்தையாலே காற்றையும், கடலையும் அமர்த்தினார். பின்னர், அங்கு மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அதே வேளை, "அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்பட்டீர்கள்?" என்று தன்னுடைய சீஷர்களின் வியாகுலத்தை மெதுவாகக் கடிந்து கொண்டார்.

ஆயிரமாயிரமான விசுவாசிகளின் இருதயங்களைப் பற்றி தெளிவாக போதிக்கின்ற பாடத்தை நாம் இங்கே பார்க்க முடிகிறது. கிறிஸ்துவுக்காக, எல்லாவற்றையும் இழக்கவும், அவர் போகின்ற இடமெங்கும் அவரை பின்பற்றவும் எத்தனை பேர் மெய் விசுவாசமும், அன்பும் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும், அவர்கள் சோதனையின் நேரத்தில் பயங்களினால் நிறை

யப்பட்டிருப்பார்கள். இருள் சூழ்ந்த நேரங்களில் "எல்லாம் நன்மையே!" என்று விசுவாசித்து அமைதலாய் தங்கியிருக்க கிருபையின்றி எத்தனை பேர் ஒவ்வொரு பிரச்சனையின் போதும் இயேசுவிடம் திரும்பி, 'கர்த்தாவே, எங்களை இரட்சியும்' என்று கூக்குரலிடுகின்ற கிருபை உடையவர்கள்!

"கர்த்தாவே, எங்கள் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்யும்" என்கிற விண்ணப்பம் நம்முடைய அனுதின கோரிக்கைகளில் ஒரு பங்கு வகிக்கட்டும். சோதனை மற்றும் வியாகுலமெனும் சூளையில் நாம் வைக்கப்படும் வரை, அநேகமாக, நாம் நம்முடைய விசுவாசத்தின் பெலவீனத்தை ஒருபோதும் அறியோம். அனுபவத்தினால், அவனுடைய விசுவாசமானது நெருப்பை சகித்துக் கொள்ளும் என்பதை கண்டறிகிற மனுஷன் பாக்கியவான். "அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" என்று அவன் யோபோடு கூடச் சேர்ந்து சொல்லக்கடவன் (யோபு 13:15).

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசு, மிகுந்த இரக்கமும், மன உருக்கமும் உடையவராய் இருப்பதினால், கர்த்தருக்கு நன்றி செலுத்துவதற்கான சிறப்பான காரணத்தை நாம் கொண்டுள்ளோம். நம்முடைய வடிவத்தை அவர் அறிவார்; நம்முடைய பெலவீனங்களை அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார். தம்முடைய ஜனங்களின் குறைகளை எண்ணி அவர்களை ஒருபோதும் அவர் புறம்பே தள்ளுவதில்லை; அவர் தாம் கடிந்து கொள்பவர்கள் மீதுங் கூட பரிதபிக்கிறார். "அற்ப விசுவாசம்" உள்ள ஜெபம் கூட கேட்கப்பட்டு பதில் கிடைக்கப் பெறுகிறது.

வேதப்பகுதி : மத்தேயு 8 : 28 – 34

தலைப்பு : கெர்கெசேனர் நாட்டிலிருந்த இரண்டு மனிதர்களிடமிருந்து பிசாசுகள் துரத்தப்பட்டன

இவ்வேழு வசனங்களில் அடங்கியுள்ள போதனையானது ஆழமானதும் மனித புத்திக்கு எட்டாத இரகசியமாயும் இருக்கிறது. பிசாசு துரத்தப்படுவது இங்கே சிறப்பான நிறைவோடு விவரிக்கப்பட்டுள்ளது. இருளும், கடினமுமான கருத்தின் மீது பிரகாசமுள்ள வெளிச்சத்தை அளிக்கக் கூடிய பகுதிகளில் இதுவும் ஒன்று.

பிசாசு என்னப்பட்ட சிருஷ்டிப்பு அல்லது உயிரினம் ஒன்று இருக்கிறது என்பதை நம்முடைய மனதில் உறுதியாய் பதிய வைத்துக் கொள்வோம். இது பயங்கரமான உண்மையாய் இருக்கிறது. எனவே, ஒருவன் இதில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். அதிகமான வல்லமையோடும், நம்முடைய ஆத்துமாக்களுக்கு எதிரான முடிவில்லா வன்மத்தோடும் நம் கண்களுக்கு புலப்படாத பிசாசொன்று எப்போதும் நமதருகே இருக்கிறது. படைப்பின் ஆதியிலிருந்தே மனுஷனுக்கு தீங்கு விளைவிக்க அவன் பிரயாசப்படுகிறான்; கர்த்தர் இரண்டாம் முறை வந்து அவனை கட்டிப் போடும் வரை, அவன் ஒருபோதும் சோதிப்பதையோ, தீங்கு விளைவிப்பதையோ நிறுத்தமாட்டான். நமது ஆண்டவர் இந்த புவியின் மீது வாழ்ந்த காலங்களில், குறிப்பிட்ட புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளின் சரீரங்களைப் போல அவர்களின் ஆத்துமாக்களின் மீதும் கூட சிறப்பான வல்லமையை அவர் கொண்டிருந்தார் என்பது தெளிவாய் இருக்கிறது. அநேகர் எண்ணுவதைப் போல, நம்முடைய காலங்களிலும், பிசாசு பிடித்தவர்கள் இருக்கிறார்கள். இருப்பினும் அவர்கள் எண்ணிக்கையின் அளவானது மாம்சத்தில் வந்த கிறிஸ்துவின் காலத்தை விட குறைவாகவே இருக்கும். ஆயினும், பிசாசானவன் நமதருகே நித்தமும் இருக்கிறான். அவன், நம்முடைய இருதயங்களை சோதனைகளினால் அகப்படுத்த எப்போதும்

பிரயாசப்படுகிறான் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

அடுத்தபடியாக, சாத்தானின், வல்லமையானது வரையறைக்குட்பட்டதே என்று நம்முடைய மனதில் ஆணித்தரமாக பதிய வைக்க வேண்டும். அவன் வல்லமை உடையவனாய் இருப்பினும், அவனைவிட சர்வ வல்லமையுள்ள தேவன் ஒருவர் இருக்கிறார். இவ்வுலகில் தீங்கு செய்வதில் மட்டுமே அவனுடைய சித்தம் தரித்திருந்தாலும், அதையும் அனுமதியுடனே அவன் நிறைவேற்ற முடியும். அசுத்த ஆவிகள் யாவும் அங்கும் இங்குமாக அலைந்து திரியவும், கர்த்தாதி கர்த்தரால் அவைகளுக்கு அனுமதிக்கப்பட்ட காலங்கள் வரைக்கும் அவைகள் பூமியை நாசம் பண்ணவும் முடியும் என்று அவைகள் அறியும் என்று இவ்வசனங்கள் நமக்கு காண்பிக்கின்றது. "காலம் வரு முன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ?" என்று அவைகள் கூறியது. தேவகுமாரனாகிய இயேசு அவைகளுக்கு உத்தரவு அருளும் வரை அவைகளால் கெர்கெசேனர் பன்றிகளில் ஒன்றையாகிலும் சேதப்படுத்த முடியாது என்பதை அவைகளுடைய விண்ணப்பமே நமக்கு விளக்குகிறது. "பன்றிக் கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும்" என்று அவைகள் வேண்டிக் கொண்டன.

அதற்கடுத்தபடியாக, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே சாத்தானின் வல்லமையிலிருந்து மனிதனை மீட்கும் சிறந்த இரட்சகர் என்பதை நாம் நம்முடைய மனதில் பதிய வைக்கக்கடவோம். அவர் எல்லா அநீதியினின்றும், இந்த பொல்லாத உலகத்தில் இருந்தும் மட்டுமல்லாமல் பிசாசிடமிருந்தும் நம்மை இரட்சிக்க வல்லவர். அவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டது. அவர் கன்னி மரியாளினிடத்தில் பிறந்தபோதே அதினுடைய தலையை நசுக்க ஆரம்பித்தார்; அவர் சிலுவையில் தொங்கி மரித்தபோது, அதினுடைய தலை மீது வெற்றி சிறந்தார்; அவர் பூமியில் வாழ்ந்தபோது,"பிசாசின் வல்லமையினால், அகப்பட்ட யாவரையும், குணமாக்கினதின் மூலம்" சாத்தானின் மீதான தன்னுடைய முழு அதிகாரத்தையும் அவர்

வெளிப்படுத்தினார் (அப்10:38). கர்த்தராகிய இயேசுவை நோக்கிக் கூக்குரலிட்டு, அவருடைய உதவியை நாடுவதே சாத்தானின் எல்லாவிதத் தாக்குதலிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள சிறந்த நிவாரணமாகும். நம்மைச் சுற்றி சாத்தான் கட்டின சங்கிலிகளை அவர் முறித்து நம்மை விடுதலையாக்குவார். முற்காலங்களில் செய்தது போல, நிச்சயமாகவே அவர் நம்முடைய இருதயங்களை பீடித்திருந்த ஒவ்வொரு பிசாசையும் துரத்தி விடுவார். "நமக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்போதும் உயிரோடிருக்கிறவராகையால் நம்மை முற்றும் முடிய இரட்சிக்க கிறிஸ்து வல்லவராய் இருக்கிறார்" என்பதை நாம் அறியாதிருந்தால், பிசாசானவன் எப்போதும் நமதருகே இருக்கிறான் என்பதை அறிவதும் நிச்சயமாகவே துக்கமானதே (எபி7:25).

பிசாசைத் துரத்தின அற்புதமானது கெர்கெசேனர் நாட்டு மக்கள் மத்தியில் நடந்தபோதும், அவர்களுடைய கிலேசமான உலகப்பற்றைக் குறித்து நாம் கவனிக்காமல் இப்பகுதியை விட்டு விடக் கூடாது. "தங்கள் எல்லையை விட்டு கடந்து போகுமாறு" அவர்கள் கர்த்தராகிய இயேசுவிடம் வேண்டினார்கள். பன்றிக் கூட்டத்தின் நஷ்டத்தை அல்லாமல் வேறொன்றைக் குறித்தும் உணர அவர்களுக்கு இதயமில்லை; அழிவில்லா ஆத்துமாக்களை உடைய தங்கள் (உடன் சிருஷ்டிகளாகிய) இருவர் சாத்தானின் அடிமைத்தனத்தினின்று விடுதலை ஆக்கப்பட்டதைக் குறித்து அவர்கள் அக்கறை கொள்ளவில்லை; பிசாசைக் காட்டிலும் வல்லமையில் சிறந்தவராகிய இயேசு எனும் தேவக்குமாரன் தங்கள் மத்தியில் நிற்பதைக் குறித்தும் அவர்கள் கவலைப்படவில்லை. அவர்களுடைய பன்றிகள் மாண்டு போனதையும், "அவர்களுடைய ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போனதையும்" குறித்தே அன்றி வேறொன்றைக்குறித்தும் அவர்கள் அக்கறைப் படவில்லை (அப்16:19). அவர்கள் தங்கள் அறியாமையினால், தங்களுக்கும், தங்கள் ஆதாயத்துக்கும் நடுவாக இயேசு கிறிஸ்து நிற்பதாகக் கருதி, தங்களை விட்டு அவர் போக வேண்டும் என்பதை மட்டுமே அவர்கள் விரும்பினார்கள்.

இந்த கெர்கெசேனர் நாட்டு மக்களைப் போன்று அநேகர் இருக்கின்றார்கள். கொஞ்ச அதிக பணம் சம்பாதித்து, இவ்வுலகிலுள்ள நற்காரியங்கள் சிலவற்றை அதிகமாய் அநுபவிக்கும்வரை, ஆயிரக்கணக்கானோர், சிறிதளவு கிறிஸ்துவைக் குறித்தோ அல்லது பிசாசைக் குறித்தோ கவலைப்படுவதில்லை. இப்படிப்பட்ட ஆவியினின்று நாம் விடுவிக்கப்படுவோமாக! இந்த ஆவிக்கு விரோதமாக நாம் எப்பொழுதும் விழித்திருந்து ஜெபிக்கக்கடவோம்! இது மிகவும் பொதுவானது! இது பயங்கரமாகத் தொற்றி பரவக்கூடியது. இரட்சிக்கப்படுவதற்கான ஆத்துமாக்கள் நமக்கு உண்டு, நாம் ஒருநாள் மரித்து பின்பு நியாயந் தீர்க்கப்படுவோம் என்பதை ஒவ்வொரு நாள் காலையிலும் நாம் ஞாபகப்படுத்துவோம். கிறிஸ்துவை விட இவ்வுலகத்தை அதிகமாய் நேசிப்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருப்போம்.

வேதப்பகுதி : மத்தேயு 9 : 1 – 13
தலைப்பு : திமிர்வாதக்காரன் குணமாக்கப்பட்டான் / வரி வசூலிப்பவனாகிய மத்தேயுவின் அழைப்பு

மனிதர்களுடைய சிந்தனைகளைக் குறித்த நமது ஆண்டவரின் அறிவை இப்பகுதியின் முதல் பாகத்தில் நாம் காணலாம்.

வேதபாரகர்களில் சிலர், இயேசு திமிர்வாதக்காரனிடம் பேசின வார்த்தைகளில் குற்றம் கண்டுபிடித்தார்கள். "இந்த மனுஷன் தேவதூஷணம் சொல்லுகிறான்" என்று தங்கள் உள்ளத்திலே இரகசியமாய் சொன்னார்கள். அவர்களுடைய மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதை ஒருவரும் அறியார்கள் என்று அவர்கள் எண்ணினார்கள். தேவக்குமாரன் இருதயங்களை அறிகிறவரும், ஆவிகளை நிதானிக்கிறவருமானவர் என்று அவர்கள் இன்னமும் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடைய தீய எண்ணம் எல்லோருக்கும் முன்பாக வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் வெளிப்படையான அவமானத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். "இயேசு அவர்கள் எண்ணங்களை அறிந்திருந்தார்".

நமக்கு இங்கே ஒரு முக்கியமான போதனை உள்ளது. "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயும் இருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபி4:13). ஒன்றையும் கிறிஸ்துவிடம் இருந்து மறைக்க முடியாது. ஒரு மனுஷனும் நம்மை பார்க்காத போது, அந்தரங்கத்திலே நாம் நினைப்பது என்ன? திருச்சபையில் நாம், ஆழ்ந்த சிந்தனையில் காணப்படும் பொழுது, நாம் சிந்திப்பது என்ன? இவ்வார்த்தைகள் நம் கண்களில் தென்படுகின்ற இத்தருணத்தில், நாம் எண்ணிக் கொண்டிருப்பது என்ன? என்பதை இயேசு அறிவார், அவைகளை இயேசு பார்க்கிறார், அவைகளை இயேசு பதிவு செய்கிறார். மேலும் கணக்கு ஒப்புவிக்கும்படி நம்மை ஒரு நாள் இயேசு அழைப்பார். "என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு

மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயந்தீர்ப்பார்" என்று வேதத்தில் எழுதியிருக்கிறது (ரோமர் 2:16). இக்காரியங்களை நாம் நிதானிக்கும்போது, நிச்சயமாகவே நாம் மிகுந்த தாழ்மையோடு இருக்க வேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவத்திலிருந்தும் நம்மை சுத்திகரிப்பதற்காக அனுதினமும் நாம் கர்த்தருக்கு நன்றி கூற வேண்டும்; "என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக" என்று நாம் அடிக்கடி கர்த்தரிடம் மன்றாட வேண்டும் (சங் 19:14).

இரண்டாவதாக, நாம் கவனிக்க வேண்டியது: கிறிஸ்துவின் சீடனாயிருக்க அப்போஸ்தலனாகிய மத்தேயுவிற்கான உன்னதமான அழைப்பு. ஆயத்துறையில் உட்கார்ந்திருப்பதாக நாம் கண்ட இந்த மனுஷனே, பின்னர் சுவிசேஷத்தை முதலாவது எழுதியவர் ஆவார். பணம் மற்றும் ஆதாயத்தை அன்றி வேறெதையும் சிந்திக்காத நிலையிலே, தன்னுடைய உலக அழைப்பில் முழுவதுமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரையே நாம் காண்கிறோம்; ஆனால், திடீரென்று கர்த்தராகிய இயேசு தன்னை பின்பற்றி தனக்கு சீஷனாயிருக்கும்படி அவனை அழைக்கிறார். மத்தேயு உடனே கீழ்ப்படிந்தான்; கிறிஸ்துவின் கற்பனைகளை கைக்கொள்ளுவதற்கு அவன் "தாமதியாமல் தீவிரித்தான்" (சங்119:60). அவன் எழுந்து அவரை பின்பற்றினான்.

கிறிஸ்துவால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை மத்தேயுவின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். வரி வசூலிப்பவனை எடுத்து, அவனை தன்னுடைய அப்போஸ்தலனாக்க அவரால் கூடும்; எந்த இருதயத்தையும் மாற்றி, எல்லா காரியங்களையும் புதிதாக்க அவரால் இயலும். யாரொருவருடைய இரட்சிப்பிற்காகவும் நாம் ஒருபோதும் நம்பிக்கை இழக்க வேண்டாம். ஆத்துமாக்களுக்கு நன்மை செய்யும்படிக்கு, மோசமான ஆத்துமாக்களுக்காகவும்கூட நாம் ஜெபித்து சுவிசேஷத்தை அறிவித்து, நற்கிரியைகளை நடப்பிக்க வேண்டும். "கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது; கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது" (சங்29:4). "என்னை பின்பற்றி வா" என்று ஆவியின் வல்லமையோடு அவர் கூறினபோது,

கடினமும், மகா பாவியான மனுஷ்னையும் அவர் கீழ்ப்படியச் செய்ய வல்லவர் என்பதை அறியலாம்.

மத்தேயுவின் தீர்மானத்தை நாம் உற்று நோக்க வேண்டும். அவன் எதற்காகவும் தாமதிக்கவில்லை. "ஒரு அனுகூலமான சமயத்திற்காக" அவன் காத்திருக்கவில்லை (அப் 24:25). பின்னர், அதன் விளைவாக அவன் சிறப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். அவன் ஒரு புஸ்தகத்தை எழுதினான், அது அகில மெங்கும் பிரசித்தமாயிற்று; பிறருக்கு ஆசீர்வாதமாய் இருந்தது போல தன் சொந்த ஆத்துமாவிலும் ஆசீர்வதிக்கப்பட்டான். இளவரசர்கள் மற்றும் ராஜாக்களின் நாமங்களைப் பார்க்கிலும் மேலான பெயரை தனக்குப் பின்பாக அவன் விட்டுச் சென்றான். உலகத்தில் மிகுந்த ஐசுவரியம் உள்ளவன் மரித்தவுடனே மறக்கப் பட்டுவிடுவான். ஆனால், இந்த உலகம் இருக்கும் வரை பல்லாயி ரக்கணக்கானோர் வரி வசூலிப்பவனாகிய மத்தேயுவின் பெயரை அறிவார்கள்.

கடைசியாக, தன்னுடைய சொந்த ஊழியத்தைக் குறித்து நமது ஆண்டவரின் விலைமதிப்பற்ற அறிக்கையை நாம் கவனிப் போம். ஆயக்காரர்களையும், பாவிகளையும் தன்னுடைய சபை யில் இருக்க அவர் அனுமதித்தபடியால், பரிசேயர்கள் அவரில் குற்றம் கண்டுபிடித்தார்கள். பரத்திலிருந்து அனுப்பப்பட்ட போதகன், ஒருபோதும் இப்படிப்பட்ட ஜனங்களோடு எவ்வித ஐக்கியமும் கொண்டிருக்கக்கூடாது என்று தங்களின் பெருமை யான குருட்டுத் தனத்தில் அவர்கள் கற்பனை செய்தார்கள். ஒரு இரட்சகராக, ஒரு மருத்துவராக, பாவநோயால் வாடும் ஆத்து மாக்களுக்கு ஒரு வைத்தியராக இருக்கவே மேசியா இவ்வுல கிற்கு வந்தார் என்ற உன்னதத் திட்டத்தை அவர்கள் முற்றிலு மாய் அறியாமல் இருந்தார்கள்; மேலும் அவர்கள் நமது ஆண்ட வரின் நாவிலிருந்து கடுமையான கடிந்து கொள்ளுதலோடு "நீதிமான்களை அல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்ற ஆசீர்வாதமான வார்த்தைகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்வார்த்தைகளில் அடங்கியுள்ள கொள்கையினை நாம் முற்றிலுமாக அறிந்து கொண்டோமா என்று நம்மை உறுதிப்

படுத்திக்கொள்வோம். கிறிஸ்துவில் நாட்டம் கொண்டிருப்ப தற்கான முதல் தேவை என்னவெனில், நம்முடைய சொந்த கொடூரமான பாவத் தன்மையை உணர்ந்து, இரட்சிப்பிற்காக அவரிடம் மனமுவந்து வர வேண்டும். நாம் நம்மை மோசமா னவர்கள், துன்மார்க்கர் மற்றும் தகுதியற்றவர்களாக எண்ணி, அநேகர் அறியாமையினால் செய்வதைப் போல நாமும் கிறிஸ் துவை விட்டு விலகிப் போகாமல் இருக்கக்கடவோம்; பாவிக ளுக்காகவே கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார் என்று நாம் நினைவு கூர்ந்து, நாம் அப்படிப்பட்ட பாவத்தன்மையில் உள்ளவர்கள் என்று உணர்ந்தால், அது நலமானதே. கிறிஸ்துவினிடத்தில் வருவ தற்கான ஒரு முதன்மையானத் தகுதியாக பாவத்தைக் குறித்த ஆழமான சிந்தனையை ஒருவன் உண்மையாகவே அறிந்திருந் தால் அவன் பாக்கியவான்.

பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார் என்கிற மகிமையான சத்தியத்தை நாம் கடவுளுடைய கிருபையால் மெய்யாய் உணர்ந்திருந்தால், அதை நாம் ஒரு போதும் மறவாதிருக்கக் கவனமாய் இருக்கக்கடவோம். கிறிஸ்துவின் மத்தியஸ்த பணியும், பரிந்து பேசுதலுமின்றி, இவ்வுலகில் பரிபூரண நிலையை மெய்கிறிஸ்தவர்கள் ஒரு போதும் அடைய முடியுமென்று நாம் கற்பனை செய்யக் கூடாது. கிறிஸ்துவிடம் வந்த அந்த ஆரம்ப நாளில் நாம் பாவிக ளாய் இருந்தோம். நம் வாழ் நாள் பரியந்தம், தேவை நிறைந்த பாவிகளாகவே தொடர்ந்து இருக்கிறோம். கிறிஸ்துவின் முழுமையை விட்டு நாம் இருக்கின்ற ஒவ்வொரு மணிநேரமும், நாம் அவருடைய எல்லா கிருபையையும் இழந்து போகிறோம். எனவே, நாம் மரிக்குந் தருவாயில் நம்மை நாமே பாவிகள் என்று கண்டு, நாம் அவரை விசுவாசிக்கும் போது கிறிஸ்துவின் இரத்தத் தினால் கழுவப்பட்டு மீட்படைகிறோம்.

வேதப்பகுதி : மத்தேயு 9 : 14 – 26

தலைப்பு : புதுத் திராட்சரசமும், புதுத் துருத்திகளும் / தலைவனின் மகள் உயிரோடு எழுப்பப்பட்டாள்

இப்பகுதியில், கர்த்தராகிய இயேசு "மணவாளன்" எனும் கிருபையுள்ள நாமத்தினால் தம்மைத் தாமே அழைத்துக் கொள்வதை நாம் கவனிப்போம்.

மணவாட்டிக்கு மணவாளன் எப்படியோ, அப்படியே கர்த்தராகிய இயேசுவும், அவரில் விசுவாசமாய் இருக்கிற ஆத்துமாக்கள் யாவருக்கும் இருக்கிறார். அவர் அவர்களை ஆழமான நித்திய அன்பினால் நேசிக்கிறார்; அவர் அவர்களை தன்னுடைய ஐக்கியத்தில் இணைக்கிறார். "அவர்கள் கிறிஸ்துவிலும், கிறிஸ்து அவர்களிலும் ஒன்றாய் தரித்திருப்பார்கள்". கர்த்தரிடமான அவர்களுடைய எல்லாக் கடன்களையும் அவர் செலுத்துகிறார். அவர்களுடைய அனுதின தேவைகளை அவர் சந்திக்கிறார்; அவர்களுடைய எல்லா வேதனைகளிலும் அவர்களோடே அவர் பரிதபிக்கிறார்; அவர்களுடைய பெலவீனங்கள் யாவையும் அவர் சகிக்கிறார்; மேலும் சிறிய பெலவீனங்களுக்காக அவர்களை அவர் ஒதுக்குவதில்லை. அவர்களை தன்னுடைய சரீரத்தில் ஒரு பகுதியாக அவர் எண்ணுகிறார்; அவர்களை துன்பப்படுத்தி தீங்குச் செய்கிற யாவரும், கிறிஸ்துவையே துன்பப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவினிடத்தினின்று பெற்றுக் கொண்ட மகிமையை ஒரு நாளில் அவர்கள் அவரோடே பங்கிட்டுக் கொள்வார்கள். மேலும், அவர் எங்கே இருக்கிறாரோ, அங்கே அவர்களும் இருப்பார்கள். இக்கிருபைகள் யாவும் எல்லா மெய் கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கும் பாக்கியங்களாகும். அவர்கள் யாவரும் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி (வெளி19:7). இப்படிப்பட்ட பகுதிக்கு நேராக விசுவாசம் நம்மை அனுமதிக்கிறது. இதன் மூலம், கர்த்தர் நம்முடைய பாவமான ஆத்துமாக்களை விலையேறப்பட்ட ஒரே மணவாளனோடு இணைக்கிறார். கிறிஸ்துவோடு இணைத்தவர்களை

கர்த்தர் ஒருபோதும் பிரிக்க மாட்டார். விசுவாசிக்கிற யாவரும் மெய்யாகவே பாக்கியவான்கள்!

அடுத்தபடியாக, இளஞ்சீடர்களை வழிநடத்த கர்த்தராகிய இயேசு வகுத்த ஒரு ஞானமுள்ள கொள்கையை நாம் கவனிப்போம்.

யோவான் ஸ்நானனின் சீடர்கள் உபவாசிப்பதை போல நம்முடைய ஆண்டவரின் சீடர்கள் உபவாசிக்காததைக் குறித்து சிலர் அவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடித்தார்கள். ஆழமான ஞானம் நிறைந்த விவாதத்தைக் கொண்டு நம்முடைய ஆண்டவர் தன்னுடைய சீஷர்களுக்காக வாதாடினார். அவர்களுடைய மணவாளன் அவர்களோடிருக்கும் நாள் பரியந்தம் அவர்கள் உபவாசிப்பதற்கான அவசியமில்லை என்று அவர் வெளிப்படுத்தினார். ஆனால், அத்துடன் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. கிறிஸ்தவத்தில் இருக்கும் இளம் சீடர்கள் நிதானமாக நடத்தப்பட வேண்டும் என கர்த்தர் இரண்டு உவமைகளைக் கொண்டு அவைகளை மேலும் அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் தாங்கிக் கொள்ளும் அளவிற்குத்தக்க அவர்களுக்குப் போதிக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ள அவர்களை எதிர்பார்க்கக்கூடாது. இவ்விதியை அசட்டை செய்வது, "புது திராட்ச ரசத்தை பழந் துருத்தியில் வைப்பதற்கோ அல்லது புதுத் துணியை பழைய துணியோடு இணைப்பதற்கோ" சமமான ஞானமற்ற செயலாகும் என்றார்.

இக்கொள்கையில் ஆழமான ஞானப் போதனைகள் இருக்கிறது. அனுபவத்தில் இளமையாய் இருக்கிற யாவரும் நினைவில் கொள்ள வேண்டிய ஆத்மீகப் போதனையாய் இது திகழ்கிறது. கிறிஸ்தவத்தில் காணப்படும் எளிமையான காரியங்களுக்கு, அதிகமான முக்கியத்துவம் அளிப்பதைக் குறித்து, நாம் கவனமாய் இருக்க வேண்டும். முதல் கற்பனைகளான மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம் குறித்து முற்றிலுமாகக் கற்றுக் கொள்ளும் வரை சிரத்தையற்ற காரியங்களில் இணங்குவதற்காக நாம் அவசரப்படக் கூடாது. இக்காரியங்களில் நாம் வழிநடத்தப்பட கிருபைக்காகவும், கிறிஸ்தவ பொது அறிவுக்காகவும், ஜெபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இளம் விசுவாசிகளை முறையாய் நடத்துவது ஓர் அரிய ஈவாய் இருப்பினும், அது

மிகவும் பிரயோஜனமானது. விசவாச வாழ்வில் அவர்களுக்கு உதவியாய் இருக்கும்படி, முதலில் எவைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், பின்னர் எவைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், ஆத்துமாக்களை ஜீவனுக்கு நேராக வழி நடத்துகிற போதகர்கள் அறிந்திருப்பது அவசியம்.

அடுத்தபடியாக, தாழ்மையான விசுவாசத்திற்கு நமது ஆண்டவர் அளிக்கும் ஊக்கத்தைக் குறித்து நாம் கவனிப்போம்.

இப்பகுதியில் நாம் வாசிப்பது என்னவென்றால், நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த ஸ்திரீ ஒருத்தி, ஜனக்கூட்டத்தின் மத்தியில் இயேசுவுக்கு பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாலாவது தான் குணமடைய முடியும் என்ற நம்பிக்கையில், "அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்". உதவியைப் பெற அவள் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை; அவள் பகிரங்கமாக விசுவாச அறிக்கைச் செய்யவில்லை; ஆனால் "அவருடைய வஸ்திரத்தைத் தொட்டால்" மட்டுமே அவள் குணமடைய முடியும் என்ற உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருந்தாள். அப்படியே ஆயிற்று. அவளுடைய செயலில், விலை மதிப்புள்ள விசுவாசத்தின் வித்து இருந்தது. அதுவே நமது ஆண்டவரின் பாராட்டுதலைப் பெற்றது. அந்நேரமே, அவள் பரிபூரண குணமடைந்து, சமாதானத்துடனே தன் வீட்டிற்குத் திரும்பினாள். "அவள் நடுக்கத்துடனே வந்தாள், வெற்றியுடன் திரும்பிச் சென்றாள்" என்று ஒரு முதிய எழுத்தாளர் கூறுகின்றார்.

இந்த வரலாற்றை நம்முடைய சிந்தைகளில் நாம் பதிய வைத்துக் கொள்வோம்; தேவையின் வேளைகளில், நிச்சயமாகவே, இது நமக்கு வல்லமையாய் உதவி செய்யும். நமது விசுவாசம் பெலவீனமாய் இருக்கலாம்; நமது தைரியம் குறைவாய் இருக்கலாம்; சுவிசேஷம் மற்றும் அதன் வாக்குத்தத்தங்கள் மீதான நம்முடைய பிடிப்பு பலவீனமாயும், நடுக்கம் நிறைந்ததாயும் இருக்கலாம். ஆயினும், இவையெல்லாவற்றிலும், உன்னதமான கேள்வி என்னவெனில், நாம் மெய்யாகவே கிறிஸ்துவில் மட்டும் விசுவாசம் கொண்டுள்ளோமா? இரக்கத்திற்காகவும், சமாதானத்திற்காகவும் நாம் கிறிஸ்துவை நோக்கி அவர் ஒருவரிடத்தில்

மட்டும் வேண்டுகிறோமா? இப்படிச் செய்யப்பட்டதானால், அது நலமே. அவருடைய வஸ்திரத்தை நாம் தொடாமல் இருக்கலாம், ஆனால், அவருடைய இருயத்தை நாம் தொட முடியும். அப்படிப்பட்ட விசுவாசம் நம் ஆத்துமாவை இரட்சிக்கும். பலமுள்ள விசுவாசத்தை விட, பலவீனமான விசுவாசம் குறைந்த ஆறுதலை அளிக்கும். பலவீனமான விசுவாசம் முழு நிச்சயத்தோடல்லாமல், மிகக் குறைந்த சந்தோஷத்தோடு நம்மை பரலோகத்திற்குக் கொண்டு செல்லும்; ஆயினும், பெலமுள்ள விசுவாசத்தைப் போல பெலவீனமான விசுவாசமும் கிறிஸ்து மீதான ஆர்வத்தை நமக்கு அளிக்கும். கிறிஸ்துவின் வஸ்திரத்தின் ஓரத்தை மட்டும் தொட்டவன் ஒருபோதும் அழிந்து போக மாட்டான்.

இறுதியாக, இப்பகுதியில், நமது ஆண்டவரின் சர்வ வல்லமையுள்ள அதிகாரத்தை நாம் காணலாம்.

அந்த காட்சி எவ்வளவு மகத்துவமானதாய் இருந்திருக்கும்! மரித்தவனை காண்கின்ற எவரும் சரீரத்தை விட்டு மூச்சு விடுபட்ட பின்பு, அச்சரீரத்தின் அமைதியை, நிசப்தத்தை, உறைந்தத் தன்மையை மறக்க முடியுமா? பயங்கரமான மாற்றம் நிகழ்ந்ததையும், நமக்கும், மரித்தவனுக்கும் இடையே காணப்படும் மகத்தான பிரிவை உணர்கின்ற பயங்கரமான உணர்வை யாரால் மறக்க முடியும்? ஆனால் நமது ஆண்டவர் மரித்தவளை கிடத்தி வைத்திருந்த அறைக்குள் சென்று, பூமியின் கூடாரமாகிய சரீரத்திற்கு திரும்பும்படி அதன் ஆவியை அழைத்தார் என்பதை கவனிப்போம். நாடித்துடிப்பு மீண்டும் ஒருமுறை துடித்தது; கண்கள் மீண்டும் பார்க்கத் துவங்கியது; மூச்சானது திரும்பவும் தன் பணியைச் செய்தது. தலைவனுடைய மகள் மீண்டும் உயிர் பெற்று தன் தாய், தகப்பனிடம் சேர்க்கப்பட்டாள். இது நிச்சயமாகவே சர்வ வல்லமை அன்றோ! இப்பேற்பட்ட அற்புதத்தை ஒருவரும் செய்திருக்க முடியாது. ஆனால், மனுஷனை முதலாவது சிருஷ்டித்தவருக்கு, வானத்திலும், பூமியிலும், சர்வ அதிகாரமும் இருக்கிறது.

இந்த விதமான சத்தியத்தை நாம் ஒருபோதும் மிக நன்றாக, தெளிவாக அறிய முடியாது. கிறிஸ்துவின் அதிகாரத்தை நாம் மிகத் தெளிவாகக் காணும்போது, சுவிசேஷத்தின் சமாதானத்தை

இன்னும் அதிகமாய் நாம் உணர முடியும். முயற்சிப்பதே நம்முடைய நிலையாய் இருக்கலாம்; நம்முடைய இருதயங்கள் பலவீனமாய் இருக்கலாம்; நாம் பயணிக்கின்ற உலகம் கடினமானதாய் இருக்கலாம். நம்மை பரலோகத்திற்குக் கொண்டுச் செல்லும் நம்முடைய விசுவாசமானது அற்பமாய் காணப்படலாம். ஆயினும், நாம் கிறிஸ்துவை சிந்திக்கும்போது, கைவிடப்படாமல் தைரியமுள்ளவர்களாய் இருக்கக்கடவோம். நமக்கு எதிராய் இருக்கிற அநேகரைக் காட்டிலும் நமக்காக இருக்கிற கிறிஸ்து பெரியவர். நமது இரட்சகரால் மரித்தவனை உயிரோடு எழுப்ப முடியும். நமது இரட்சகர் சர்வ வல்லமையுள்ளவர்.

வேதப்பகுதி : மத்தேயு 9 : 27 – 38

தலைப்பு : இரண்டு குருடர்கள் குணமாக்கப்பட்டனர்/ ஜனக்கூட்டத்தின் மீதான கிறிஸ்துவின் இரக்கம் / சீடர்களின் கடமை

அதிக கவனத்தை ஈர்க்கக் கூடிய நான்கு போதனைகள் இவ் வேதப் பகுதியில் உள்ளது. நாம் ஒவ்வொன்றையும் தொடர்ச்சியாக கவனிப்போம்.

முதலாவதாக, சில நேரங்களில், கிறிஸ்து மீதான உறுதியான விசுவாசம், மிக அற்பமாக எதிர்பார்க்கப்படுகின்ற இடத்திலே காணப்படுவதை நாம் பார்க்கலாம். நம்முடைய ஆண்டவரை “தாவீதின் குமாரனே” என்று இரண்டு குருடர்கள் அழைப்பார்கள் என்று யாராவது எண்ணியிருக்க முடியுமா? மெய்யாகவே, அவர் செய்த அற்புதங்களை அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள்; பொதுவான அறிக்கையின் மூலமாக மட்டுமே அவரை அவர்கள் அறிவார்கள். அவர்களுடைய சரீரப் பிரகாரமான கண்கள் குருடாயிருந்த போதிலும், அவர்களுடைய மனக்கண்கள் அறிவு ஒளி பெற்றிருந்தது. வேதபாரகரும், பரிசேயர்களும், கண்டுணர முடியாத சத்தியத்தை அவர்கள் கண்டார்கள்; அவர்கள் நசரேயனாகிய இயேசுவே மேசியா என்று கண்டு கொண்டார்கள். அவர்களை குணப்படுத்த அவரால் முடியும் என்று அவர்கள் விசுவாசித்தார்கள்.

யாரொருவனும், தன்னுடைய ஆத்துமாவிற்கு அனுகூலமற்ற நிலையில் வாழ்வதினால் மட்டும் அவனுடைய இரட்சிப்பைக் குறித்து நாம் ஒருபோதும் நம்பிக்கை இழக்கக் கூடாது என்பதையே இதை போன்ற உதாரணம் நமக்கு வெளிப்படுத்துகிறது. சூழ்நிலைகளை பார்க்கிலும், கிருபை வல்லமை உள்ளது; கிறிஸ்தவத்தின் உயிர் வெளிப்புறமான நன்மைகளை மட்டும் சார்ந்திருப்பதில்லை. பரிசுத்த ஆவியினால், வேத வார்த்தைகளை கொண்டு பணமுமின்றி, இலவசமான கிருபையைக் கொண்டு விசுவாசத்தைக் கொடுக்கவும், அதை ஊக்கத்துடனே செயல்படுத்தவும் முடியும். பரிசுத்த ஆவியின் துணையின்றி ஒரு

மனிதன் எல்லா இரகசியங்களையும் அறிந்து, சுவிசேஷத்தின் முழு பிரகாசத்தில் வாழ்ந்த போதிலும், அவன் மரித்தவனாய் இருப்பான். கடைசி நாளிலே, இப்படிப்பட்ட வித்தியாசமான காட்சிகளை நாம் காண்போம். ஏழை, குடிசைவாசிகள் தாவீதின் குமாரனை விசுவாசித்தவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால் பல்கலைக்கழகப் பட்டங்களால் நிறைந்த பணக்காரர்கள், பரிசேயர்களைப் போல கடினமான அவிசுவாசத்தினால் வாழ்ந்து மரித்தவர்களாய் நிரூபிக்கப்படுவார்கள். இவ்விதமாக, பிந்தினோர், முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள் *(மத்20:16).*

அடுத்தபடியாக, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நோய்கள் மற்றும் வியாதிகளில் மகத்தான அனுபவத்தைக் கொண்டிருந்தார் என்பதை நாம் பார்ப்போம். அவர் “எல்லா நகரங்களிலும், கிராமங்களிலும் நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார்”. மாம்சத்தில் காணப்பட்ட எல்லாவிதமான சுகவீனங்களுக்கும் அவரே சாட்சியாய் இருந்தார். ஒவ்வொரு வகையான நோய்களையும், பிணிகளையும் கண்டார். அவர் ஒவ்வொரு விதமான சரீர துன்பங்களோடும் தொடர்புடையவராகக் காணப்பட்டார். அவர் கவனிக்கக் கூடாதபடிக்கு, மிகவும் அருவருப்பான நோய்கள் ஒன்றும் இல்லை; அவரால் குணப்படுத்த முடியாதபடி மிகவும் பயங்கரமானவை ஒன்றும் இல்லை. “எல்லாவிதமான நோய்கள் மற்றும் வியாதிகளின் வைத்தியர் அவரே”.

இந்த உண்மையில் இருந்து அதிகமான ஆறுதலை நாம் பெற முடியும். நாம் பலவீனமான சரீரத்திலே வாழ்ந்து வருகிறோம். நமக்கு மிகவும் அருமையான உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வியாதி படுக்கையருகில் நாம் அமரும்போது, எவ்வளவு அதிகமான உபத்திரவங்களை நாம் பார்க்க வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் அறியோம்; நாம் மரணமடையும் முன்பு, எவ்விதமான சுகவீனங்களால் பாதிக்கப்படுவோம் என்பதை நாம் ஒருபோதும் அறியோம். ஆனால், இயேசுவே, வியாதியஸ்தனின் உற்ற நண்பன் என்கிற விலையேறப்பட்ட எண்ணத்தினால் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோம். பாவமன்னிப்பு மற்றும் பிதாவுடனான சமாதானத்திற்காக நாம் விண்ணப்பிக்க

வேண்டிய சிறந்த பிரதான ஆசாரியரே வேதனையுள்ள சரீரத்திற்காக இரக்கங் கொள்வதைப் போல பாவநோயுற்ற ஆத்துமாவை குணப்படுத்தவும் விசேஷித்த தகுதி உடையவராய் இருக்கிறார். இராஜாதி ராஜாவினுடைய கண்களானது எப்போதும் நோயுற்றவர்களை பரிவோடு உற்று நோக்குவதாய் இருக்கின்றது. இவ்வுலகமானது வியாதியஸ்தர்களை மிகக் குறைவாக கவனிப்பதோடு, தங்களை அவர்களிடமிருந்து பிரித்துக் கொள்கின்றது; ஆனால், கர்த்தராகிய இயேசு சுகவீனர்களுக்காக விசேஷமாக அக்கறை செலுத்துகிறார்; அவர்களை சந்திப்பதில் அவரே முந்தினவராய் இருக்கிறார்; “நான் வாசற்படியில் நின்று கதவைத் தட்டுகிறேன்” என்று கூறுகிறார். அவருடைய சத்தத்திற்கு செவி கொடுத்து, கதவை திறக்கிறவர்கள் யாவரும் பாக்கியவான்கள் *(வெளி 3:20).*

அடுத்தபடியாக, அசட்டை பண்ணப்பட்ட ஆத்துமாக்கள் மீதான நமது ஆண்டவரின் அன்பான இரக்கத்தை நாம் காண்போம். அவர் பூமியில் வாழ்ந்த போது, “மேய்ப்பனில்லா ஆடுகளைப் போல” சிதறுண்டிருந்த “வெகுத் திரளான ஜனங்களை அவர் கண்டு”, அவர்கள் மீது இரக்கங் கொண்டார். அக்காலத்திலே போதகர்களாக இருந்தவர்களால் அவர்கள் அசட்டை பண்ணப்பட்டதை அவர் கண்டார். அறியாமையுள்ளவரும், திக்கற்றவரும், உதவியற்றவரும், மரணத் தருவாயில் இருப்பவர்களுமாகிய அவர்களை அவர் கண்டார். இக்காட்சி அவரை ஆழ்ந்த வருத்தமடையச் செய்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அன்பின் இருதயத்தால் இக்காரியங்களை காணவோ, சகித்துக் கொள்ளவோ முடியவில்லை.

இப்போதும், நாம் இப்படிப்பட்ட காட்சியைப் பார்க்கும் போது, நம்முடைய உணர்வுகள் எப்படிப்பட்டதாய் இருக்கிறது? இந்த கேள்வியே நம்முடைய மனதில் எழும்ப வேண்டும். இப்படிப்பட்ட அநேகரை நாம் எத்திசையிலும் பார்க்கலாம். இப்பூமியின் மீது இலட்சக்கணக்கான விக்கிரக ஆராதனைக்காரர்களும், புறஜாதியார்களும் இருக்கிறார்கள். தவறான நம்பிக்கையுடைய இலட்சக்கணக்கான முகமதியர்களும், மூடபக்தியுடைய இலட்சக்கணக்கான ரோமன் கத்தோலிக்கர்களும், அறியாமையும், மனமாற்றமும் அடையாத ஆயிரக்கணக்கான

புரொடெஸ்டென்ட்களும் நம் வாசலருகே இருக்கிறார்கள்; அவர்களுடைய ஆத்துமாக்களைக் குறித்து நாம் அன்புடன் அக்கறைக் கொள்கிறோமா? அவர்களுடைய ஆத்மீக ஆதரவற்ற நிலையை எண்ணி நாம் ஆழ்ந்த வருத்தமடைந்துள்ளோமா? அவர்கள் அந்த ஆதரவற்ற நிலையிலிருந்து விடுபட நாம் பிரயாசித்திருக்கிறோமா? இவைகள் பதிலளிக்கப்பட வேண்டிய முக்கியமான கேள்விகள், புறஜாதியாரிடத்தில் ஊழியம் செய்வதும், அவர்களிடத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களாய் தோற்றமளிப்பதும் மிகவும் எளிது. ஆனால், மனமாற்றமடையாத எல்லா மனுஷருடைய ஆத்துமாக்களுக்காகவும் வருந்தாதவன் நிச்சயமாகவே "கிறிஸ்துவின் சிந்தை உடையவன் அல்ல" (1கொரி 2:16).

இறுதியாக, இவ்வுலகில் இருக்கும் மனமாற்றமடையாத ஜனங்களுக்கு நன்மை செய்யும்படி அனைத்து கிறிஸ்தவர்கள் மீதும் சுமத்தப்பட்ட பயபக்தியுடனான கடமையை நாம் இப்பகுதியில் கவனிப்போம். ஆத்துமாக்களின் மனமாற்றத்திற்காக ஊழியஞ் செய்ய அநேக மனுஷர் எழுப்பப்படும்படியாக அவர்கள் ஜெபிக்க வேண்டும். இந்த விண்ணப்பமானது நம்முடைய அனுதின ஜெபங்களின் ஒரு பகுதியாய் இருக்கிறது. "அறுப்புக்கு எஜமானாகிய ஆண்டவர் தன்னுடைய அறுவடைக்கு வேண்டிய வேலையாட்களை அனுப்புமாறு நாம் அவரிடத்தில் ஜெபிக்கக்கடவோம்".

ஜெபத்தைக் குறித்து எதையாகிலும் நாம் அறிவோமானால், நமது ஆண்டவரின் இந்த பயபக்தியுள்ள கட்டளையை நாம் ஒருபோதும் மறவாதிருக்கும்படி நம்முடைய இருதயத்தில் குறித்துக் கொள்வோம். பாவத்தைக் களைந்து நீதியை செய்வதற்கான நிச்சயமான வழிகளில் இதுவும் ஒன்று என்பதை நாம் மனதில் பதிய வைத்துக் கொள்வோம். ஆத்துமாக்களுக்கான தனிப்பட்ட சேவை நல்லது. பணம் கொடுப்பதும், நல்லது; ஆனால், இவை எல்லாவற்றிலும் ஜெபிப்தே சிறந்தது. ஜெபத்தினால் நாம் அவரை அடைய முடியும்; அவராலன்றி பணியும், பணமும் வீண்; நாம் பரிசுத்த ஆவியின் உதவியைப் பெறலாம். பணம் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கலாம்; பல்கலைக் கழகங்கள் கல்வியைக் கொடுக்கலாம். பேராயர்கள் நியமனம் செய்யலாம். திருச்சபைகள் தேர்வு செய்யலாம்; ஆனால் பரிசுத்த

ஆவியானவர் ஒருவர் மட்டுமே சுவிசேஷத்திற்கான ஊழியர்களை உருவாக்கி அவர்கள் வெட்கப்பட்டுப் போகாதபடி, ஆத்மீக அறுவடைக்கென்று வேலையாட்களை எழுப்ப முடியும். இவ்வுலகிற்கு நாம் நன்மை செய்ய விரும்பினால், நம்முடைய முதல் கடமை "ஜெபிப்பதே" என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

வேதப்பகுதி : மத்தேயு 10 : 1 – 15

தலைப்பு : முதல் கிறிஸ்தவ பிரசங்கியாளர்களை அனுப்புதல்

கிறிஸ்துவின் திருச்சபையில் ஒருபோதும் நிகழ்ந்திராத முதல் நியமனத்தின் தொகுப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை தெரிந்தெடுத்து அனுப்புகிறார். புதியதாக நியமிக்கப்பட்ட கிறிஸ்தவ ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட முதல் அதிகாரத் தொகுப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. அதை ஆண்டவரா கிய இயேசு தாமே அவர்களுக்குக் கொடுத்தார். இப்படிப்பட்ட மிக முக்கியமான நியமனம் எங்கும் இருந்ததில்லை! இப்படி யான ஒருமுறையான அதிகாரம் எங்கும் கொடுக்கப்படவில்லை.

இந்த அதிகாரத்தின் முதல் பதினைந்து வசனங்களில் மிக முக்கியமான மூன்று போதனைகள் இருக்கின்றன. நாம் அவற்றை வரிசையாக பார்க்கலாம்.

முதலாவதாக, நமக்குக் கற்றுக் கொடுப்பது என்னவெனில், எல்லா ஊழியர்களும் கட்டாயமாக நல்ல மனிதர்களாக இருப்ப தில்லை. நமது ஆண்டவர் யூதாஸ்காரியோத்தை தம்முடைய அப்போஸ்தலர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுப்பதை நாம் காண லாம். எல்லா இருதயங்களையும் அறிந்த அவர் தாம் தெரிந்து கொண்ட மனுஷர்களின் குணாதிசயங்களையும் நன்கு அறிவார். மேலும், அவர் துரோகியான ஒருவனையும் தம்முடைய அப்போஸ்தலர்களின் பட்டியலில் இணைக்கிறார்.

இந்த உண்மையை நாம் நம் மனதில் நன்றாக ஏற்றுக் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் இரட்சிக்கும் கிருபையை வேறெந்த அதிகாரமும், அளிப்பதில்லை. வேத கொள்கையிலோ அல்லது நடைமுறை வாழ்விலோ ஊழியர்கள் தவறாதவர்கள் என்று நாம் எண்ணி விடக்கூடாது. அவர்களை போப்பாண்டவர்களாகவோ அல்லது சிலை வணக்கத்துக்கு உரியவர்களாகவோ நாம் ஏற்படுத்தக் கூடாது, மற்றும்

கிறிஸ்துவின் இடத்தில் அவர்களை வைப்பது அறிவீனமா யிருக்கும். அவர்களும் நம்மைப் போலவே "உணர்ச்சி வசப்படக் கூடிய மனிதர்கள்" என்றும், அதே பாவ பலவீனங்களுக்கு கடனா ளிகளாவும், அதே தேவக்கிருபையை அனுதினமும் நாடுபவர் களாகவும் நாம் எண்ண வேண்டும். மிக மோசமான பாவங்காரி யங்களை அவர்களால் செய்ய முடியாது என்று நாம் எண்ணவோ அல்லது முகஸ்துதி இச்சை மற்றும் உலகத்தின் தீங்கானது அவர்களை அணுக முடியாத இடத்தில் இருப்பார்கள் என்றும் எதிர்பார்க்கவோ கூடாது. கர்த்தருடைய வார்த்தையை கொண்டு அவர்களுடைய போதனைகளை நிரூபிக்கவும், கிறிஸ்துவை பின்பற்றுகின்ற தூரத்திற்கு மேலாக நாம் அவர்க ளைப் பின்பற்ற வேண்டியதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் யூதாஸ்காரியோத்தாக அல்ல, யாக்கோபு மற்றும் யோவானின் வாரிசுகளாய் இருக்கும்படி அவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். சுவிசேஷத்தின் ஊழியக்காரராய் இருப்ப தற்கு மிக முக்கியமான கடமை இருக்கிறது. ஊழியக்காரர்க ளுக்கு அதிகமான ஜெபங்கள் அவசியமாய் இருக்கிறது.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் ஊழியக்காரனின் சிறந்த பணி நன்மை செய்வதே என்று நமக்கு கற்றுத் தரப்படுகிறது. "தொலைந்து போன ஆடுளைத் தேடி, நற்காரியங்களை அறி வித்து, துயரப்படுகிறவர்களை விடுவித்து, மனவேதனைகள், கவ லைகளைக் குறைத்து, சந்தோஷத்தை அதிகரிக்கவே" அவன் அனுப்பப்பட்டான். அவனுடைய வாழ்க்கை, "கொடுப்பதற் கென்று" நியமிக்கப்பட்டதேயன்றி பெற்றுக் கொள்வதற்கல்ல.

இது மிக உயரிய மற்றும் வெகு சிறப்பான ஒரு கொள்கை ஆகும். இது நன்றாய் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு, நிதானமாய் ஆராயப்படக்கடவது. கிறிஸ்துவின் விசுவாசமுள்ள ஊழியக் காரனின் வாழ்க்கை மிக எளிதானது அல்ல. தன்னுடைய அழைப் பின் பணிக்கென்று, தன்னுடைய சரீரம் மற்றும் சிந்தை, காலம் மற்றும் பலத்தை செலவிட அவன் ஆயத்தமாய் இருக்க வேண் டும். எந்தவொரு பணியிலும், அற்பமாயும், சோம்பேறியாயும் இருப்பது தீங்கு விளைவிக்கக் கூடியது. ஆனால், இவை எல்லாவற்றிலும் அதிக பொறுப்பு ஆத்துமாக்களுக்கு

காவற்காரனாயிருப்பது தான். மற்றொரு காரியத்திலும் இது தெளிவாய் இருக்கிறது. அதென்னவெனில் கிறிஸ்துவின் ஊழியர்களின் அந்தஸ்தானது அறியாமையுள்ள ஜனங்களால் சில நேரங்களில் அவர்களுக்கு நியமிக்கப்படுவதோ அல்லது அதை அவர்களே தங்களுக்கென்று சில வேளைகளில் உரிமைகொள்வதோ கிடையாது. அவர்கள், ஆளுவதற்கல்ல, சேவை செய்வதற்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். திருச்பை மீது அதிகாரம் செலுத்த எண்ணங் கொள்ளாமல், அதன் தேவைகளை சந்திக்கவும், சபை அங்கத்தவர்களுக்கு சகாயராய் இருக்கவும் வேண்டும் (2 கொரி 1 : 24). இக்காரியங்கள் யாவும் சிறப்பாய் விளங்கிக் கொள்ளப்பட்டால், மெய்க் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியானது மகிழ்ச்சி அளிக்கும். கிறிஸ்தவத்திலிருக்கும் பாதி நோய்கள் ஊழியக்காரனின் பணி பற்றியதான தவறான எண்ணங்களினால் தோன்றினவையே.

இறுதியாக, நாம் கற்றுக் கொள்வது என்னவெனில், சுவிசேஷத்தினுடைய வரங்களை நிராகரிப்பது மிகுந்த ஆபத்தான காரியமாகும். நியாயத்தீர்ப்பு நாளிலே, கிறிஸ்துவின் சத்தியத்திற்கு செவிகொடுத்து, அதை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம், கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்பது அன்று நிரூபிக்கப்படும்.

இக்கொள்கையானது பயத்துடனே மேற்கொள்ளப்படவும், சிறப்பான கவனத்திற்குத் தகுதியுடைய ஒன்றாயும் இருக்கிறது. வெளிப்படையான பயங்கரமான பாவங்கள் செய்வது நித்தியத்திற்கான ஒரு ஆத்துமாவை அழித்துவிடும் என்பதை ஜனங்கள் மறந்து விடுகிறார்கள். விசுவாசிக்காமல், தொடர்ந்து சத்தியத்தை கேட்கிறவர்களாகவும், மனந்திரும்பாமல் தொடர்ந்து செவிகொடுப்பவர்களாவும், கிறிஸ்துவினண்டை வராமல் திருச்சபைக்கு மட்டும் போகிறவர்களாய் இவர்கள் இருக்கிறார்கள். இறுதியில், அவர்கள் தங்களை நரகத்திலே கண்டு கொள்வார்கள். நாமனைவரும் நம்முடைய வெளிச்சத்திற்கு ஏற்றபடி நியாயந்தீர்க்கப்படுவோம். நாம் அனுபவிக்கின்ற கிறிஸ்தவ சிலாக்கியங்களுக்கு நாம் கணக்கொப்புவிக்க வேண்டும். சிறப்பான இரட்சிப்பை கேள்விப்பட்டிருந்த போதும், அதை அசட்டை பண்ணுவது, மனுஷர் செய்கின்ற மகா மோசமான பாவங்களில் ஒன்றாகும் (யோவான் 16:9 ; எபி 2:3).

சுவிசேஷத்தைக் கொண்டு நமக்காக நாம் என்ன செய்கின்றோம்? இந்த வேதபகுதியை வாசிக்கிற ஒவ்வொருவனும் தன்னுடைய மனசாட்சியில் கேட்க வேண்டிய கேள்வி இதுவே. உதாரணமாக நம்முடைய வாழ்வில் நாம் மிகவும் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவர்கள் என்றும் நம்முடைய வாழ்வின் எல்லா உறவுகளிலும் ஒழுக்கம் உடையவர்கள் என்றும் கிருபையின் சாசனங்களை முறையாக அனுபவிக்கிறவர்கள் என்றும் நாம் யூகித்துக் கொள்வோம். இப்படியாக இருக்கும் வரையில், எல்லாம் நலமானதே, ஆனால் இவ்வனைத்தும் தான் நம்மைப் பற்றி சொல்லப்படுபவையா? மெய்யாகவே, நாம் சத்தியத்தின் அன்பை பெற்றுக் கொள்கிறோமா? விசுவாசத்தினால் கிறிஸ்து நம் இருதயங்களில் வாசம் பண்ணுகிறாரா? இல்லையெனில், நாம் பயப்படக் கூடிய ஆபத்தில் இருக்கிறோம். சுவிசேஷத்தை ஒருபோதும் கேட்டிராத சோதோம் மக்களைப் பார்க்கிலும் நாம் அதிக குற்றமுள்ளவர்களாய் இருக்கிறோம். நாம் ஒழுக்கம், நன்னெறி, சீர்நேர்மை உடையவர்களாய் இருந்தபோதிலும், நம்முடைய ஆத்துமாக்களை நித்திய நித்தியத்திற்குமாய் தொலைத்துவிட்டோம் என்பதை கண்டுணர நாம் விழிப்பாய் இருப்போம். கிறிஸ்தவ சிலாக்கியங்களின் முழு வெளிச்சத்தில் நாம் வாழ்ந்த போதிலும், ஒவ்வொரு வாரமும் விசுவாசத்தோடு போதிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் கேட்டிருந்தாலும் அது நம்மை இரட்சிக்காது. கிறிஸ்துவுடன் அனுபவப் பூர்வமான உறவு இருக்க வேண்டும். அவருடைய சத்தியத்தை தனிப்பட்ட முறையில் பெற்றிருக்க வேண்டும். அவருடன் சிறப்பான ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். அவருடைய வேலைக்காரர்களாகவும், சீடர்களாகவும் நாம் மாறியிருக்க வேண்டும். இவையல்லாமல், சுவிசேஷத்தின் பிரசங்கம் நம்முடைய பொறுப்புகளை அதிகரித்து நம்முடைய குற்ற உணர்வுகளை மிகுதியாக்கி, இறுதியில் நம்மை நரகத்தின் ஆழத்தில் அமிழ்த்தி விடும். இவை கடினமான உபதேசங்கள். ஆனால், நாம் வாசித்த வேத வார்த்தைகள் தெளிவாயும், குற்றமற்றதாயும் இருக்கிறது. அவைகள் அனைத்தும் மெய்யானவை.

வேதப்பகுதி : மத்தேயு 10 : 16 – 23

தலைப்பு : முதல் கிறிஸ்தவ பிரசங்கியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகள்

இவ்வசனங்களில் அடங்கியுள்ள சத்தியங்கள் யாவும், இந்த உலகத்தில் நன்மை செய்ய முயற்சி செய்கின்ற அனைவராலும் ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியதாகும். தன்னுடைய சொந்த நலன் அல்லது சௌகரியங்களை மட்டுமன்றி வேறொன்றையும் குறித்து கவலைப்படாதிருக்கிற சுய நல மனிதனுக்கு, இதில் மிகக் குறைவான சத்தியங்கள் இருப்பதைப் போல தோன்றும். ஆனால் சுவிசேஷ ஊழியக்காரனுக்கோ அல்லது ஆத்துமாக்களை இரட்சிக்க நாடுகிற ஒவ்வொருவனுக்கும் இந்த வசனங்களில் ஆர்வம் நிறைந்த சத்தியங்கள் இருப்பதைப் போலத் தோன்றும். இவைகளில் அநேக போதனைகள் விசேஷமாக அப்போஸ்தல நாட்களுக்கு ஏற்றாற்போல் இருப்பதில் சந்தேகமில்லை. ஆகிலும், எல்லா காலங்களுக்கும் பிரயோஜனமுள்ள அநேக போதனைகளும் இதில் உள்ளது.

முதலாவதாக, நாம் பார்ப்பது என்னவெனில், ஆத்துமாக்களுக்கு நன்மை செய்ய விரும்புபவர்கள், தங்கள் எதிர்பார்ப்புகளில் நடுத்தரமாக இருக்க வேண்டும். அவர்களுடைய உழைப்பு உலகளாவிய வெற்றியைத் தரும் என்று அவர்கள் எண்ணக் கூடாது. அவர்கள் எல்லாவற்றையும் அதிகமான எதிர்ப்புகளுடன் சந்திக்க நினைக்க வேண்டும். “வெறுக்கப்படவும், நிந்திக்கப்படவும்”, அதுவும் அவர்களுடைய சொந்த நெருங்கிய உறவினர்களாலே தவறாக பயன்படுத்தப்படுவோம் என்ற எண்ணங்களினால் தங்கள் சிந்தைகளை பக்குவப்படுத்தப்படக்கடவர்கள். அவர்கள் அடிக்கடி தங்களை “ஓநாய்களுக்குள்ளே இருக்கிற ஆடுகளைப்” போல காண்பார்கள்.

நாம் பிரசங்கித்தாலோ அல்லது உபதேசித்தாலோ அல்லது வீடுகளை சந்தித்தாலோ நாம் எழுதினாலோ அல்லது

ஆலோசனை வழங்கினாலோ அல்லது எதைச் செய்தாலும், வேதத்திற்கும், நம்முடைய அனுபவத்திற்கும் மேலாக நாம் எதையும் எதிர்பார்க்கக்கூடாது என்று மனதில் நிறுத்தி வைத்துக் கொள்வோம். மனித இயல்பானது நாம் நினைப்பதற்கும் மேலாக அதிக பொல்லாப்பும் அசுத்தமும் நிறைந்தது. பாவத்தின் வல்லமை, நாம் நினைப்பதற்கு மிகவும் மேலானது. நாம் அவர்களுக்கு நன்மையானதை மட்டுமே போதிக்கிறோம் என்று எண்ணி, எல்லாரும் நம்முடைய வார்த்தைகளை விசுவாசிப்பார்கள் என்று நாம் கற்பனை செய்வது வீண். நம்மால் காணமுடியாதவற்றை எதிர்பார்ப்பது ஏமாற்றதில் மட்டுமே முடியும். இக்காரியங்கள் யாவையும் ஊழியத்தின் ஆரம்பத்திலே அறிந்தவனும், அவைகளை கடினமான அனுபவங்கள் மூலமாய் கற்றுக் கொள்ளாத கிறிஸ்துவின் பணியாள் பாக்கியவான். ஒரு காலத்தில் நன்மை செய்தவற்கு மிகுந்த வைராக்கியத்தோடு காணப்பட்ட அநேகர் பின்வாங்கிப் போனதற்கான இரகசியக் காரணம் இங்கே இருக்கிறது. அவர்கள் மிதமிஞ்சிய எதிர்பார்ப்புகளோடு துவங்கினார்கள். அவர்கள் ஊழியத்தின் கிரயத்தை எண்ணிப் பார்க்கவில்லை.

அடுத்ததாக, நாம் பார்ப்பது என்னவெனில், நன்மை செய்பவர்கள் யாவரும், ஞானமும், நல்லறிவும் மற்றும் ஆரோக்கியமான மனதிற்காக ஜெபிக்க வேண்டியது அவசியம். நமது ஆண்டவர் தம்முடைய சீடர்களிடத்தில் “சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய் இருங்கள்” என்று கூறுகிறார். ஓர் இடத்திலே அவர்கள் துன்பப்படுத்தப்பட்டால், நியாயப்படி மற்றொரு இடத்திற்கு ஓடிப்போகும்படி தன்னுடைய சீடர்களுக்கு அவர் கூறுகிறார்.

நமது ஆண்டவருடைய அறிவுரைகளில் இதைப் போன்ற ஒரு சில காரியங்களை சரியாய் பயன்படுத்துவது கடினமாய் இருக்கிறது. இரண்டு கடைக் கோடிகளுக்கு இடையே நமக்காக ஒரு கோடு குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அக்கோட்டிற்கு சிறந்த நியாயத்தீர்ப்பின் விளக்கம் தேவைப்படுகிறது. துன்பப்படுவதைத் தவிர்க்க நமது நாவுகளை அடக்கி, நமது கிறிஸ்தவத்தை முழுவதுமாக நமக்குள்ளே வைத்திருப்பது, ஒரு கடைக் கோடி யாகும். அந்தப் பாதையில் நாம் தவறிழைக்கக் கூடாது.

துன்புறுத்தலை நோக்க இடம், காலம், அல்லது சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், நாம் சந்திக்கின்ற ஒவ்வொருவர் மீதும் நமது கிறிஸ்தவ சமயத்தை திணிப்பது மற்றொரு கடைக் கோடியாகும். இந்தப் பாதையிலும், மற்றொன்றில் இருப்பதற்கு மேலாக எந்த தவறையும் நாம் செய்யாதிருக்க, எச்சரிக்கப்படுகிறோம். “இவைகளுக்கு எல்லாம் போதுமானவர் யார்?” என்று நாம் மெய்யாகவே கேட்கலாம். நாம் “ஞானமுள்ள ஒரே தேவனிடம்” ஞானத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

இக்காலத்தில், அநேக மக்கள் நிச்சயமாக விழுந்து போகக் கூடிய நிலை என்னவெனில், அமைதி, கோழைத்தனம் மற்றும் மற்றவர்களை தனியே விட்டு விடுதலாகும். நம்முடைய விவேகமானது, ஒழுக்க ரீதியான உடன்பாட்டிற்கோ அல்லது மட்டரகமான விசுவாசமின்மைக்கோ தரங்குறைவது உறுதி. குறிப்பிட்ட மக்களுக்கு நாம் நன்மை செய்ய முயலுவதில் எவ்வித பலனுமில்லை என எண்ணுவதற்கு மட்டுமே நாம் அதிக ஆயத்தத்தோடு இருப்போம். அது புத்தியீனமும், முட்டாள்தனமுமாய் இருக்கும் அல்லது தேவையற்ற விரோதங்களை அல்லது தீர்க்கமான தீங்கைக் கூட விளைவிக்கும் என்று கூறுவதினால் அவர்களுடைய ஆத்துமாவின் பிரயோஜனத்திற்கான முயற்சிகளிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்வோம். நாம் அனைவரும் ஜாக்கிரதையாயிருந்து இப்படிப்பட்ட ஆவிக்கு விரோதமாக நம்மை பாதுகாத்துக் கொள்வோம். சோம்பேறித்தனமும், பிசாசுமே இதனுடைய உண்மையான விளக்கமாய் இருக்கிறது. இதற்கு வழிவகுத்தால், மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் இன்பமாயும், அநேக உபத்திரவங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதற்கு உடன்படுகிற யாவரும் பிரயோஜனமுள்ள சிறந்த சந்தர்ப்பங்களை பல முறை தூக்கி எறிகிறார்கள்.

மறுபுறம், அறிவுக்கேற்றபடி இல்லாமல், நீதியும் பரிசுத்த வைராக்கியமுமான அந்தக் காரியத்தை மறுப்பது இயலாத ஒன்றாகும். அநேக தேவையற்ற விரோதங்களை உருவாக்கவும், பெருந் தவறுகள் செய்யவும், அதிக எதிர்ப்புகளைத் தூண்டுவதற்கும் இது சாத்தியமாய் இருக்கிறது. ஆயினும் விவேக, ஞானமுள்ள மேலாண்மை மற்றும் நியாயத்தீர்ப்பின் பயிற்சியினால்

இவைகளை எளிதாக தவிர்த்திருக்க முடியும். இக்காரியத்தில் நாம் குற்றமற்றவர்களாய் காணப்படும்படி இவைகளுக்குச் செவி சாய்ப்போம். யூத சாமர்த்தியம் அல்லது மாம்சீகக் கொள்கையினின்று வேறுபட்ட கிறிஸ்தவ ஞானம் ஒன்று உண்டென்பதை நாம் நிச்சயமாய் அறிந்திருக்கலாம். இந்த ஞானத்தையே நாம் நாடக்கடவோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசு, நம்மை அவருக்கென்று ஊழியம் செய்யும்படி பணித்துக் கொண்ட போது, நம்முடைய பொது அறிவை தூக்கியெறியும்படி அவர் நம்மை அறிவுறுத்தவில்லை. நம்முடைய ஊழிய பாதையில் அநேக விரோதங்கள் இருக்கும், ஆயினும் நம்மால் செய்ய முடிந்த காரியங்களை நாம் செய்ய வேண்டும். ஆனால், காரணமின்றி அவைகளை நாம் அதிகரிக்கக் கூடாது. ஆகவே, நாம் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடக்க பிரயாசப்படுவோம் (எபே *5:15*).

ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசமாய் இருக்கிறவர்கள் ஞானமுள்ள ஆவிக்காக, நியாயத்தீர்ப்புக்காக, ஆரோக்கியமான மனதிற்காக போதுமான அளவு ஜெபிப்பதில்லை என்பது அவமானத்திற்குரியதாகும். அவர்களுக்கு கிருபை இருக்குமானால், அவர்களுக்கு தேவையான யாவும் அவர்களுக்கு உண்டு என்று வீண் கற்பனை செய்கிறார்கள். கிருபையுள்ள இருதயமானது ஞானத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிறைந்திருப்பதற்கு ஜெபிக்க வேண்டும் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள் (*அப்6:3*). இதை நாம் நினைவில் கொள்வோம். பெரிதான கிருபையும், பொதுவான அறிவும் நிச்சயமாகவே அரிதான இணைப்புகளில் ஒன்றாகும். அவைகள் இணைந்து செல்வதற்கு தாவீதினுடைய வாழ்க்கையும், அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியமும், இதற்கு சிறப்பான உதாரணங்களாகும். இருப்பினும், இக்காரியத்திலும், மற்றெல்லாக் காரியத்திலும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே நமக்கு பரிபூரண எடுத்துக்காட்டாய் இருக்கிறார். அவரைப் போல அதிக உண்மையுள்ளவர் ஒருவரும் இல்லை. அதே வேளை அவரைப் போல பூரண ஞானமுள்ளவர் ஒருவரும் இல்லை. அவரை நாம் முன் மாதிரியாகக் கொண்டு அவர் வழிகளில் நடப்போம்.

வேதப்பகுதி : மத்தேயு 10 : 24 – 33
தலைப்பு : முதல் கிறிஸ்தவ ஊழியர்களுக்கான எச்சரிப்புகள்

இந்த உலகில் ஆத்துமாக்களுக்கு நன்மை செய்வது மிகவும் கடினம். அதை முயற்சிக்கிற யாவரும் தங்கள் அனுபவத்தினால் கண்டு கொள்வார்கள். அதற்கு அதிகப்படியான தைரியம், விசுவாசம், பொறுமை, விடாமுயற்சி தேவைப்படுகிறது. சாத்தானானவன் தன்னுடைய இராஜ்ஜியத்தை பராமரிக்க அதிக வல்லமையுடன் போராடுவான். மனித இயல்பு மோசமான பாவங்களினால் ஆனது; தீமை செய்வது எளிது, நன்மை செய்வது கடினம்.

ஆண்டவராகிய இயேசு, முதல் முறையாகத் தன்னுடைய சீடர்களை சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அனுப்பும் போது, இக்காரியங்களை நன்கு அறிந்திருந்தார். அவர்களுக்கு முன்பாக என்ன இருக்கிறது என்பதை அவர்கள் அறியாத போதிலும் அவர் அறிந்திருந்தார். அவர்கள் துரத்தப்பட்டதை உணரும் போது அவர்களை உற்சாகப்படுத்த ஆதரவான வார்த்தைகளை அவர்களுக்கு அறிவிப்பதற்கு அவர் கவனமாய் இருந்தார். சோர்வுள்ள வெளியூர் ஊழியர்கள் அல்லது உற்சாகமற்ற உள்ளூர் ஊழியர்கள், மனச்சோர்வுற்ற பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மனத் தளர்ச்சியுள்ள மாவட்ட கண்காணிகள் யாவரும் நாம் தற்போது வாசித்த இந்த ஒன்பது வசனங்களை அடிக்கடி படித்தால் நல்லது. அவைகளில் அடங்கியுள்ளவை என்ன என்பதை நாம் கற்றுக் கொள்வோம்.

முதல் காரியம், ஆத்துமாக்களுக்கு நன்மை செய்ய முயற்சிக்கிற யாவரும் தங்களது மேலமான எஜமானைப் பார்க்கிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஏனெனில், சீடன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல என்று வேதம் கூறுகிறது. ஆண்டவராகிய இயேசு, நன்மை செய்யும்படி வந்த அவருடைய சொந்த ஜனங்களாலே தூற்றப்பட்டு தள்ளப்பட்டார். அவருடைய

போதனையில் ஒரு தவறும் இல்லை. அவர் போதிக்கும் விதத்தில் ஒரு குறையும் இல்லை. இருப்பினும் அநேகர் அவரை வெறுத்து “பெயல்செபூல்” என்றழைத்தனர். சிலர் அவரை விசுவாசித்து அவர் சொன்னவற்றை கவனித்தார்கள். நம்முடைய சிறந்த முயற்சிகள் அதிக குறைபாடுகளுடன் இணைந்து காணப்பட்டு, கிறிஸ்து நடத்தப்பட்டது போல நாமும் நடத்தப்பட்டால், அதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட அவசியமில்லை. நாம் உலகத்திற்கு நன்மை செய்யாமல் அதைத் தனியே விட்டுவிட்டால், உலகமும் நமக்குத் தீமை செய்யாது, நம்மை தனியே விட்டிருக்கும். நாம் தனியே விட்டு விட்டால், உலகமும் நம்மை தனியே விட்டிருக்கும்; அல்லாமல் நாம் அதற்கு ஆத்மீக நன்மை செய்ய முயற்சித்தால், நம்முடைய எஜமானுக்கு செய்தது போல, அது நம்மையும் வெறுக்கும்.

இரண்டாவது காரியம், நன்மைசெய்ய விரும்புகிறவர்கள் நியாயத்தீர்ப்பின் நாளுக்காக பொறுமையுடன் எதிர்நோக்கியிருக்க வேண்டும். “வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை, அறியப்படாத இரகசியமும் இல்லை” என்று வேதம் கூறுகிறது. தவறான எண்ணங் கொண்டதும், தவறாக அறிவிப்பதும், நிந்தித்து, தூற்றி, தூஷிப்பதுமாய் இருக்கிற இந்த உலகத்தில் அவர்கள் திருப்தி உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவர்களுடைய உள்ளெண்ணங்கள் தவறாக எண்ணப்பட்டு, அவர்களுடைய குணங்கள் மோசமாகத் தாக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் ஊழியம் செய்வதை நிறுத்தக் கூடாது. கடைசி நாளில் எல்லாம் சரியாக்கப்படும் என்பதை தொடர்ச்சியாக அவர்கள் நினைவு கூற வேண்டும். எல்லா இருதயங்களின் இரகசியங்களும் அன்று வெளிப்படுத்தப்படும். “உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்ட பகலைப் போலவும் விளங்கப்பண்ணுவார்” *(சங் 37:6).* அவர்களுடைய உள்ளெண்ணங்களின் தூய்மையையும், பிரயாசத்தின் ஞானமும், செய்கையின் நீதியும், அந்நாளில் உலகமெங்கும் வெளிப்படுத்தப்படும். நாம் நிதானத்தோடும், அமைதியோடும் உழைப்போம். மனிதர்கள் நம்மை புரிந்து கொள்ளமாட்டார்கள். நம்மை கடுமையாக எதிர்ப்பார்கள். ஆனால், நியாயத்தீர்ப்பு நாள் சமீபித்திருக்கிறது. இறுதியில் நாம் சரியாய் நியாயந்தீர்க்கப்படுவோம். கர்த்தர்,

மறுபடியும் வரும்போது, "இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" *(1கொரி 4:5).*

மூன்றாவது காரியம், நன்மை செய்ய முயலுபவர்கள் மனிதனுக்கு பயப்படுவதைப் பார்க்கிலும் கர்த்தருக்கு அதிகமாய் பயப்பட வேண்டும். மனிதனால் சரீரத்தைக் கொல்ல முடியும். அங்கேயே அவனுடைய விரோதம் நின்று விடும். அவனால் அதற்குமேல் போக இயலாது."ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ளி அழிக்க கர்த்தரால் மட்டுமே முடியும்". நாம் கிறிஸ்தவ கடமையின் பாதையில் சென்றால், குணம், சொத்து, நம் வாழ்வை இன்பமாக்குகிற அனைத்தையும் இழந்து விடுகி றோம் என்று நாம் பயமுறுத்தப்படலாம். நம்முடைய பணி தெளிவாயிருக்கும் போது, இப்படிப்பட்ட பயமுறுத்தல்களுக்கு நாம் செவி சாய்க்கக்கூடாது. கர்த்தரை கனஈனப்படுத்தி நம்முடைய மனசாட்சியைக் காயப்படுத்துவதைக்காட்டிலும், தானியேல் மற்றும் மூன்று வாலிபர்களைப் போல நம்மை எதற்கும் ஒப்புக்க கொடுக்க தயராய் இருக்க வேண்டும். மனித னுடைய சினம் தாங்கிக் கொள்வதற்கு கடினமாய் இருப்பினும், கர்த்தருடைய உக்கிரம் அதைக் காட்டிலும் கடினமாம். மனித னுக்கு பயப்படுவது உண்மையாகவே கண்ணியை வருவிக்கும். ஆனால், நம்மை அழிக்க வல்ல மேலான அதிகாரமாகிய கர்த்த ருக்கே நாம் பயப்பட வேண்டும். நான் கர்த்தருக்குப் பயப்படு கிறேன், எனவே யாரொருவருக்கும் "நான் பயப்பட வேண்டிய அவசியமில்லை என்று கர்னல் கார்டினர் கூறியது நன்மொழியே".

நான்காவது காரியம், கர்த்தருடைய தெய்வாதீனமான அக்கறை நன்மை செய்ய விரும்புபவர்கள் மீது இருக்கிறது என்பதை அவர்கள் தங்கள் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவருடைய அனுமதியின்றி இவ்வுலகில் எதுவும் நடக்காது. விதி, தற்செயல், அதிர்ஷ்டம் போன்ற காரியங்களில் எதுவும் நிஜத்தில் இல்லை. "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது" என்று வேதம் கூறுகிறது. சில

வேளைகளில், கடமையின் பாதை பேராபத்தில் கொண்டு போய் விடும். அவர்கள் அதிலே முன்னேறிச் சென்றால், சுகமும், ஜீவனுங்கூட ஆபத்தில் இருப்பதாய் தோன்றும். தங்களைச் சுற்றி லும் இருப்பவை யாவும் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது என்ற எண்ணத்தினால் அவர்கள் ஆறுதலையடைட்டும். அவர்களு டைய சரீரங்கள், ஆத்துமாக்கள், குணநலன்கள் யாவும் கர்த்தரு டைய பாதுகாப்பான கரத்தில் இருக்கிறது. அவர் அனுமதிக்காத வரை ஒரு நோயும் அவர்களைப் பற்றிக் கொள்வதில்லை. எந்த வொரு கரமும் அவர்களை சேதப்படுத்துவதில்லை. "அன்றியும், பரத்திலிருந்து, அதிகாரம் அருளப்படாவிட்டால், எனக்கு எதிராக செயல் பட உனக்கு எந்த அதிகாரம் இல்லை" என்று தாங்கள் சந்திக்கின்ற எல்லா பயமுள்ள காரியங்களையும் நோக்கி தைரியமாய் கூற முடியும்.

இறுதியாக, நன்மை செய்ய முயற்சிப்பவர்கள் யாவரும், தங்களுடைய ஆண்டவரை சந்தித்து தங்களுடைய இறுதியான பங்கை பெற்றுக் கொள்கின்ற நாளை தொடர்ந்து நினைவு கூற வேண்டும். இந்த ஜனங்களை தமக்குச் சொந்தமாக்கி, தன்னு டைய பிதாவிற்கு முன்பாக, அவர்களை அறிக்கை செய்கிற இயேசு கிறிஸ்துவை அவர்கள் கொண்டிருந்தால், அவரை தமக் குச் சொந்தமாக்கி, இந்த உலகில் ஜனங்களுக்கு முன்பாக அவரை அறிக்கை பண்ண அவர்கள் வெட்கப்படமாட்டார்கள். இதைச் செய்வது நமக்கு அதிக உபத்திரவங்களை வருவிக்கும். பரிகாசம், நிந்தை, தொந்தரவு, இகழ்ச்சி போன்றவற்றை இது வருவிக்கும். ஆனால், நாம் பரலோகத்தை விட்டு பரிகசிக்கப்படமாட்டோம். நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய அந்த மகா உன்னதமும், பயங்கரமுமான நாளை நினைவுகூர்ந்து, நாம் கிறிஸ்துவை நேசிப் பதை ஜனங்களுக்கு வெளிப்படுத்துவதற்கு அஞ்சாமல், அவர்க ளும் அவரைக் கண்டுணர்ந்து நேசிக்க பிரயாசப்படுவோம்.

கிறிஸ்துவின் நிமித்தமாக உழைக்கின்ற யாவரும் எந்நிலை யில் இருந்தாலும், மேற்சொன்ன காரியங்களை ஆழமாய் தங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ளக்கடவர்கள். அவர்களுடைய பிரச்சனைகளை தேவன் முன்னமே அறிந்திருக்கிறபடியால், அவர்களின் ஆறுதலுக்காக இவைகளை கூறியிருக்கிறார். தம்மை விசுவாசிக்கின்ற அனைத்து மக்களுக்காகவும், அவர் நிமித்தமாய்

நன்மை செய்து பாடு அனுபவிக்கிறவர்களுக்காகவும் தேவன் மிகுந்த அக்கறை உள்ளவராய் இருக்கிறார். நாமும் அவர்களில் ஒருவராக இருக்க பிரயாசப்படுவோம். ஒவ்வொரு விசுவாசியும் முயற்சித்தால், தேவனுக்கென்று ஏதேனும் நன்மையானதைச் செய்ய முடியும். நாம் ஒவ்வொருவரும் செய்யுயம்படியான நன்மையான காரியம் என்னவென்பதை ஆராய்ந்து பார்த்து, அதை முழு இருதயத்தோடும், கிறிஸ்தவ அன்போடுங்கூட செய்ய முயற்சிப்போம்!

வேதப்பகுதி : மத்தேயு 10 : 34 – 42

தலைப்பு : முதல் கிறிஸ்தவ ஊழியர்களுக்கு கிறிஸ்து அளிக்கும் உற்சாக வார்த்தைகள்

திருச்சபையின் தலையாகிய கிறிஸ்து தம்முடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி தம்மால் அனுப்பப்பட்ட தனது சீஷர்களுக்குக் கட்டளையிட்ட முக்கியமான காரியங்களையே இவ்வசனங்கள் கூறுகிறது. இதில் மிக முக்கியமான மூன்று சத்தியங்களை அவர் போதிக்கிறார்.

முதலாவதாக, சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் அது சமாதானத்தையோ அல்லது மத ஒற்றுமையையோ ஏற்படுத்தாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில், “சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன்” என்று இயேசு கூறுகிறார். ஏக மனதோடு கூடிய ஒரே ராஜ்ஜியத்தை இவ்வுலகில் ஏற்படுத்தும்படிக்கு இயேசு இவ்வுலகிற்கு வராமல், விரோதங்கள் மற்றும் பிரிவினைகளை உண்டாக்கக் கூடிய சுவிசேஷத்தை கொண்டு வரும்படிக்கே வந்தார். தொடர்ச்சியாக இவை நிறைவேறி வருவதால் நாம் ஆச்சரியப்படவேண்டாம். மேலும், சுவிசேஷமானது குடும்பங்களுக்குள் பிரிவினைகளையும், நெருங்கிய உறவுகளுக்கு இடையில் வேறுபாடுகளையும் கொண்டு வருவதைக் குறித்து நாம் அதிசயிக்க வேண்டாம். ஏனெனில் மனிதனுடைய பொல்லாத இருதயக் கடினத்தின் நிமித்தமே, அநேகருடைய வாழ்வில் இத்தகைய பிரிவினைகள் ஏற்படுகின்றது. ஒரே குடும்பத்தில் உள்ள ஒருவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்து, மற்றொருவன் விசுவாசியாமல் இருக்கும்வரைக்கும், ஒருவன் தனது பாவத்திலே நிலைத்திருக்கவும், மற்றொருவன் அவைகளை விட்டு மனந்திரும்ப தீர்மானிக்கும் வரைக்கும், சுவிசேஷப் பிரசங்கத்தின் விளைவானது பிரிவினையையே ஏற்படுத்தும். இத்தகைய விளைவிற்கு சுவிசேஷம் காரணமாய் இராமல், மனிதனின் பாவ இருதயமே காரணமாய் இருக்கிறது.

இதிலுள்ள, சத்தியம் தொடர்ச்சியாக மறக்கப்பட்டும், சிந்திக்கப்படாமலும் இருக்கிறது. கிறிஸ்துவின் திருச்சபையில் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சமாதானம் இருக்க வேண்டும் என்றும், அக்காரியங்களுக்காக நாம் எப்பொழுதும் உழைக்க வேண்டும் என்றும் அவைகளை பெறுவதற்காக அனைத்தையும் நாம் தியாகம் செய்ய வேண்டும் என்றும் சிலர் வீணாய் பேசு வதுண்டு. அவர்கள் நமது ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவுகூர்வது நல்லது. ஒற்றுமையும், சமாதானமும் மேலான ஆசீர்வாதங்கள் என்பதில் ஐயமில்லை. சத்தியத்தையும், நல்மன சாட்சியையும் தவிர, இவைகளைப் பெற்றுக் கொள்ளும்படி அவைகளை நாடவும், அவைகளுக்காக ஜெபிக்கவும் அவைக ளுக்காக எல்லாவற்றையும் விட்டுவிடவும் (இழக்கவும்) நாம் முயற்சிக்க வேண்டும். அதனால், கிறிஸ்துவின் திருச்சபைகள் இத்தகைய ஒற்றுமையையும், சமாதானத்தையும் அனுபவிக்கும் என்பது வெறும் கனவே.

இரண்டாவதாக, இவ்வுலகில் பாடு அனுபவிப்போம் என்று மெய் கிறிஸ்தவர்கள் தங்கள் மனதை பக்குவப்படுத்துவது அவசியம் என்று நமது ஆண்டவர் கூறுகிறார். நாம் சுவிசேஷகர் களோ அல்லது சுவிசேஷத்தை கேட்பவர்களோ, போதிக்கிறவர் களோ அல்லது போதிக்கப்படுபவர்களோ யாராயிருந்தாலும், நாம் 'சிலுவை' யை சுமக்க வேண்டும். கிறிஸ்துவுக்காக நாம் நம் ஜீவனையும் இழக்க நேரிட்டால், அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மனிதர்களை ஆதாயப்படுத்துவதற்காக நாம் கஷ்டங்களை அனுபவிக்கவும், அநேகக் காரியங்களில் நம்மை நாமே வெறுக்கவும் வேண்டும். இல்லையெனில், நாம் பரலோகத்திற்கு ஒருபோதும் செல்ல முடியாது. உலகம், பிசாசு மற்றும் நம்முடைய பாவக்கறை படிந்த இருதயம் இருக்கும் வரை, பாடுகளை நாம் அனுதினமும் அனுபவிக்க வேண்டும்.

இந்த போதனையை நாம் நம் இருதயத்தில் ஆழப் பதிய வைத்து, அவ்வப்போது அதை நினைவுகூறுவது நல்லது. கிறிஸ்த வத்தில் அதிகப்படியான எதிர்பார்ப்புகள் அநேக தீமைகளை வருவிக்கும். கிறிஸ்துவின் ஊழியத்தில் லௌகீக ஆறுதல் கிடைக் கும் என்று ஜனங்கள் எதிர்பார்ப்பது உண்டு. அப்படி எதிர்பார்ப் பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆயினும்,

அவர்கள் எதிர்பார்த்தது அவர்களுக்குக் கிடைக்காத பட்சத்தில், வெறுப்பில், கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் விட்டு விட்டு பின்வாங்கிச் செல்வார்கள். வாழ்வின் முடிவிலே கிரீடமும், வாழ்கை முழுவதும் சிலுவையையும் கொண்டதே கிறிஸ்தவம் என்பதை நன்றாய் அறிந்திருக்கிற மெய் கிறிஸ்தவனே பாக்கியவான்.

கடைசியாக, அவருடைய ஊழியர்களுக்குச் செய்யப்படு கின்ற மிகச் சிறிய சேவையாய் இருந்தாலும் அது தேவனால் கவனிக்கப்பட்டு பலனளிக்கப்படும் என்று நமது ஆண்டவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார். விசுவாசி "ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்" என்று நமது ஆண்டவர் கூறுகிறார்.

இந்த வாக்குத்தத்தத்தில் ஒரு அருமையான காரியம் அடங்கி உள்ளது. அவருக்காக உழைத்து நன்மை செய்கின்ற அனைவர் மீதும் நம்முடைய உன்னத எஜமானின் கண்கள் நோக்கமாய் இருக்கிறது என்று இது போதிக்கிறது. சில வேளைகளில் அவர்க ளுடைய பணி கவனிக்கப்படாததாயும், கனம் பண்ணப்படாத தாயும் தோன்றும். ராஜாக்கள், பாராளுமன்றங்கள், போர் படைகள் மற்றும் அரசியல்வாதிகளின் செயல்களோடு பிரசங்கி கள், ஊழியர்கள், போதகர்கள், ஏழை எளியவர்களை விசாரிப்ப வர்களின் பணியை ஒப்பிடும்போது, இவர்களின் பணி அற்பமாயும், கனமற்றதாயும் காணப்படும். ஆனால், அவர்களும் அவர்களுடைய பணியும், கர்த்தருடைய பார்வையில் மிகவும் மேலானது. அவருடைய ஊழியர்களை எதிர்ப்பவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவி செய்பவர்களை கர்த்தர் கவனிப்பார். பவுலுக்கு உதவிய லீதியாளைப் போல தம்முடைய ஊழியர்க ளுக்கு உதவுபவர்களையும் பவுலுக்கு தீமைசெய்த அலெக்சந் தரைப் போல, அவருடைய பிள்ளைகளுக்கு பிரச்சனைகளை உண்டுபண்ணுகிற யாவரையும் அவர் கவனிக்கிறார். கர்த்தருடைய அறுப்பின் பணியை செய்கிற அவர்களுடைய அனுதின அனுபவங்களும் குறிக்கப்படுகின்றன. சகலமும் அவரு டைய ஞாபக புஸ்தகத்திலே குறிக்கப்பட்டு, கடைசி நாளிலே வெளிச்சத்திற்கு வரும். பானபாத்திரக்காரன் தன் வேலைக்குத்

திரும்பியவுடன், யோசேப்பை மறந்து போனான். ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஜனங்களில் ஒருவனையும் ஒருபோதும் மறப்பதில்லை. உயிர்த்தெழுதலின் நாளின்போது, சிறிதும் எதிர்பார்க்காத அநேகரிடம் அவர் "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்" என்று கூறுவார் (மத் 25:35).

இவ்வுலகிற்கு வந்த கிறிஸ்துவின் நோக்கத்தையும், அவருக் கென்று செய்கின்ற பணியையும் குறித்து நீங்கள் சிந்திப்பது என்ன? என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். நாம் அவருடைய பணிக்கு உதவி செய்கிறோமா? அல்லது தடைக்கற் களாய் காணப்படுகிறோமா? கர்த்தருடைய "ஊழியர்கள்" மற்றும் "நீதிமான்களுக்கு" எவ்விதத்திலாவது நாம் உதவி செய்கி றோமா? அவருடைய "சிறியரில் ஒவருவருக்கு" உதவி செய்கி றோமா? அவருடைய ஊழியர்களை பரியாசம் பண்ணுகி றோமா அல்லது உற்சாகப்படுத்துகிறோமா? என்று சிந்தித்துப் பாருங்கள். சமயம் வாய்க்கும் போதெல்லாம் "ஒரு கலசம் தண்ணீர்" கொடுப்பவர்கள் ஞானவான்கள். கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் இன்னமும் உற்சாகமாய் தங்கள் பணியை செய்வார்கள். நாம் இவ்வுலகை விட்டு கடந்து செல்வதற்கு முன்பாக கர்த்தருடைய சுவிசேஷ பணியையும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதையும் உண்மையாய் செய்யக்கடவோம். இதுவே கிறிஸ்துவின் சிந்தை யைக் கொண்டிருப்பதாகும். இதுவே இந்த அதிகாரம் உள்ளடக்கிய மேலான சத்தியங்களைக் கண்டு கொள்வதாகும்.

குறிப்பு